50வது ஆண்டை நோக்கி...

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா



## இலக்கியமே வாழ்வான அன்புமணி

செப்டெம்பர் 2012

விலை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50ஆவது ஆண்டை நோக்கி பயணிக்கும்**

**மல்லிகைக்கு வாழ்த்துக்கள்**

**மல்லிகை அபிமானி**

# மல்லிகை

நூலகம்

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெறுமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது- அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

## 50 – ஆவது ஆண்டை நோக்கி...

**செப்டெம்பர் – 399**

*'Mallikai' Progressive Monthly Magazine*

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல- அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.
மல்லிகையில் வெளியாகும் எழுத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பானவர்கள்!

201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com

**அட்டைப்படக் குறிப்பு**
தீரன் ஆர்.எம்.நௌசாத்

**கவிதை**
அன்புடீன்
எஸ்.மதி.
வேல்நந்தன்

**சிறுகதை**
மூதூர் மொகமட் ராபி
பவானி சிவகுமாரன்

**நேர்காணல்**
அன்புடீன்

**தொடர்**
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

**ஆவணம்**
சிங்களத்தில் : விஜயதுங்க,
தமிழில் : அ.செ.மு.

**விமர்சனம்**
மேமன்கவி

**கட்டுரை**
ஏ.எச்.எம்.நவாஷ்
பாலா சிவாகரன்

**இரசனைக் குறிப்பு**
மா.பாலசிங்கம்

**ஞாபக் குறிப்பு**
க.சட்டநாதன்

**நிகழ்வின் அவதானங்கள்**
கே.பொன்னுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்தாபிக்கப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியும், ஈழத்து கலை இலக்கியத்தின் தனித்துவமும்

இன்றைய ஈழத்து கலை இலக்கிய வளர்ச்சியானது ஏலவே ஸ்தாபிக்கப்பட்ட ஓர் ஆரோக்கியமான சூழலின் விளைச்சல் என்பது யாரும் மறுதலிக்க முடியாத உண்மை. அவ்வாறு ஓர் ஆரோக்கியச் சூழல் உருவாகுவதற்கு ஈழத்து முற்போக்கு இயக்கம் ஆற்றிய பணி காரணமாக அமைந்தது எனலாம்.

அப்பணி மண்வாசனை, தேசிய இலக்கியம் போன்ற கோட்பாடுகளை முன்னேடுத்துச் சென்றதோடு, களப்பணிகளில் ஒன்றாகத் தமிழகத்து வணிகச் சஞ்சிகைகளின் வருகை கட்டுப்படுத்தல் என்பதாக இருந்தது. ஆனால் முற்போக்கு இயக்கத்தின் அப்பணி முற்றும் முழுதுமாக வெற்றி அடையாத நிலையிலும், பிற்காலத்தில் திறந்த பொருளாதார சூழலின் காரணமாகத் தமிழகத்து வணிகச் சஞ்சிகைகளின் வருகை அதிகரித்த நிலையிலும் ஈழத்து முற்போக்கு இயக்கத்தின் உழைப்பின் பயனாக ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய வளர்ச்சியானது, ஓர் ஆரோக்கியமான (மண் வாசனை, தேசிய இலக்கியம் போன்ற கோட்பாடுகள் வழியாக) சூழலில் வளர்த்தெடுக்கபட்டது. அதற்கு அன்றைய காலகட்டத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் துணை புரிந்தன.

அதன் பயனாக ஈழத்துத் தமிழ் கலை இலக்கியச் சூழலில் வணிக எழுத்து என்பதான எழுத்து தோன்றவில்லை. அதாவது இன்னும் இலகுவாக சொல்வது என்றால் இந்த நாட்டில் ஒரு புஷ்பா தங்கத்துரையோ, ஒரு ராஜேஷ் குமாரோ தோன்ற முடியவில்லை என்பதுதான் விசேடமாகக் குறிப்பிட வேண்டி ஒன்றாகும்.

அதேவேளை அத்தகைய சூழலில் தோன்றிய இளம் படைப்பாளிகளின் படைப்புகளில் படைப்பாக்க முறைமையில் அதாவது உருவத்தில் குறை-நிறை இருப்பினும் கூட, அவர் தம் பார்வையில் அதாவது அவர் தம் படைப்பாக்கங்களின் உள்ளடகத்தில் சமூகப் பிரக்ஞை என்பது குறையாத நிலையில் ஈழத்துக்குரிய தனித்துவத்துடன் வெளிப்பட்டது.

அதற்குப் பின்னான காலகட்டத்தில் தமிழகத்து தமிழ் பேசும் மக்கள் சந்திக்காத பல உக்கிரமான பிரச்சினைகளை ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்டதன் விளைவாக மேற்குறித்த தனித்துவமானது, மேலும் கூர்ப்பு பெற்றது எனலாம். அதற்கு ஈழத்துத் தமிழ் பேசும் சமூகம் கொடுத்த விலை அளப்பரியது.

கூர்ப்பு பெற்ற இத்தனித்துவம் என்பது புலம்பெயர்ந்த ஈழத்து தமிழ் பேசும் சமூக படைப்பாளிகளிடம் ஏதோவொரு வகையில் பேணப்பட்டு வந்துள்ளது.

இத்தனித்துவத்தைத் தக்க வைத்தல் என்பதும், மேலும் செழுமை அடைய வைத்தல் என்பதும் இளைய தலைமுறை படைப்பாளிகளை வழி நடத்துவதிலும், செழும்மைப் படுத்தலிலும் தங்கி இருக்கிறது. அவ்வாறு வழி நடத்தல் என்பதும், செழுமைப்படுத்தல் என்பதும் மூத்தப் படைப்பாளிகளின் கடமையாகிறது.

அதேவேளை ஈழத்துக்குரிய தனித்துவத்துடன் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள இளைய தலைமுறைப் படைப்பாளிகளிடம் அதற்கான எத்தனிப்பும், உழைப்பும் அவசியமானது என்பதை இளைய தலைமுறை படைப்பாளிகள் நினைவில் நிறுத்திக் கொள்வது நல்லது.

அத்தகைய பணியில் மல்லிகையும் தன்னை இணைத்துக் கொள்ளும் என்பதில் உறுதி அளிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப்படம்**

# ‘எல்லோரும் வாழ்வோம் இனிது’

## கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன் - வேர், முகம் காணல்

– தீரன் ஆர்.எம்.நௌசாத்

‘எல்லோரும் வாழ்வோம் இனிது’ என்று எழுத்திலும், இதயத்திலும் இருத்தி வாழும் ஒரு 'சமூக, இலக்கியப் போராளி அன்புடீன். (பீ.எம்.கலந்தர்லெப்பை) நான்கு தலைமுறை இலக்கியப் பரம்பரைக்கு பரீட்சயமான பெயர் அவருடையது. 1951இல் அம்பாறை மாவட்டம் பாலமுனையில் பிறந்தவர். ‘‘அவர் இலக்கியம் ஒன்றையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்கிறார். அவர் என் இதயத்துக்கு நெருக்கமானவர்’’ என்று மறைந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் குறிப்பிட்டுள்ளார். ‘‘கல்முனைப் பிரதேசத்து முன்னணிக் கவிஞர்களுள் அன்புடீனும் ஒருவர். ஒரு நல்ல கவிஞனுக்கு இருக்க வேண்டிய சமூகப் பார்வை, இலட்சிய நோக்கு, மனிதாபிமானம் என்பன அவரது கவிதைகளில் வெளிப்படக் காணலாம். இது அவரை முக்கிய ஒரு கவிஞராக அடையாளப்படுத்துகிறது’’ என எம்.ஏ.நுஃமான் விதந்துரைத்துள்ளார். ‘‘ஒரு மூத்த இலக்கிய தலைமுறையிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டியதெல்லாம் இன்னும் எங்களுக்குள் கடத்திக் கொண்டிருக்கின்றார்...’’ என்று பெருவெளி அப்துல் றஸாக்கும் வியந்துள்ளார்.

1965களில், தென்கிழக்கு இலக்கிய மண்ணில் ஓர் ஊசிப்பயிராக முளைவிட்டெழுந்த அன்புடீன், இடைவிடா வளர்ச்சியடைந்து, பரந்து, விரிந்து, விழுதுகள் விட்டு இலக்கிய பெருவிருட்சமாகியுள்ளார். ஆரம்ப காலத்தில் நாடகத்துறையில் கால் பதித்தாலும், பின்னர் இக்காலத்தைய மார்க்கிச சிந்தனைகளின் தாக்கத்தால் உந்தப்பட்ட ஒரு படைப்பாளியாக பரிணாமம் பெற்றார். சுபைர் இளங்கீரன், மருதூர்க் கொத்தன், எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், அஸ.அப்துஸ்ஸமது, சுபத்திரன் ஆகியோரின் இலக்கியப் படைப்புகளும் அவர்களது தோழமையும்



மேலும் இவரது படைப்புகளைக் கூர்மைப்படுத்தின. அதிலிருந்து ஒரு புரட்சிகர முற்போக்குக் கவிஞனாகவும், வர்க்க முரண்பாடுகளுக்கெதிராகக் கிளர்ந்தெழும் ஒரு சமூகப் போராளியாகவும் மாறினார். அந்த இலக்கியப் பாட்டையில் அன்புடீன் வெகுதூரம் பயணித்தவர்.

இடைவிடாத வாசிப்பும், தேடலும் அவரைக் கவிதைத்துறையில் மட்டுமல்லாது சிறுகதை, அரங்கியல், உருவகப், பாடல், இசை, வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி அளிக்கைகள் என்று மதாளித்து, பெரு வளர்ச்சி நிலை கண்டார். அவது ஓய்வற்ற இலக்கியப் பயணத்தில் 2015இல் தன் ‘இலக்கியப் பொன் விழா’வைக் காண்கிறார்.

□ □

ஆசுகவி அன்புடீன், தீயும் தென்றலுமான மானுட வாழ்வியல் நுட்பங்களை இறகு கொண்டும், தீக்குச்சி கொண்டும் எழுதுபவர். ‘நெருப்பு வாசல்’ (2011) என்ற தனது சிறுகதைத் தொகுதியூடாக அவர் நமக்கு, மானுட வர்க்க முரண்பாடுகளின் பல வாசல்களைத் திறந்து காட்டியிருக்கிறார்.

தனது முற்போக்கான வாழ்வியல் போராட்டத்தில் சந்தித்த உலகப் பாத்திரங்களின் முகமூடிகளைக் கழற்றித் தனது ‘முகங்கள்’ (1988) என்ற கவிதைத் தொகுதியில் அம்பலப்படுத்தி, அந்த முகங்களின் சிறுமைத்தனம் கண்டு சீறியிருக்கிறார்.

‘எல்லோரும் வாழ்வோம் இனிது’ என்ற தனது தளராத தாரக வசனத்தின் தன்மைக்கேற்ப உன்னதமான மனிதரின் வாழ்வியலைத் தனது ‘அக்கரைப்பற்று அன்னை மகிழ்கிறாள்’ (1982) என்ற குறுங்காவிய நூலில் வரலாறாக வடித்திருக்கிறார்.

தவிர, தனது நீண்ட தனிப்பட்ட இலக்கிய அரசியல் பயணங்களின் அனுபவங்களையும், போராட்டத்தையும் கலந்து உரம்பெற்ற சிந்தனைகளின் வெளிப்பாடுகளை ‘சாமரையில் மொழி கலந்து’ (2012) என்ற தன் கவிதைத் தொகுதியில் நம்முடன் நட்புரிமையுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார். ‘ஐந்து தூண்கள்’ (2000) என்ற கவிதைத் தொகுதியில் தன்னைத் தானே சுய ஆத்மீக விசாரணை செய்து கொள்கிறார்.

□ □

1982இல் வை.எம்.எம்.ஏ.தேசியக் கவுன்சில் நடத்திய அகில இலங்கை ரீதியான கவிதைப் போட்டியில் கிடைத்த முதற் பரிசுடன், சர்வதேசக் கூட்டுறவு தின விழா கவிதைப் போட்டியிலும் கிடைத்த முதற் பரிசும் சேர்ந்து ஒரே ஆண்டில் அன்புடீனின் கவிதாலயத்தின் கதவுகளைத் தட்டின. அதே போட்டியில் மேடை நாடகத்திலும் முதற் பரிசு வென்றார். தவிரவும், கிழக்கு மாகாண சபை சமூக சேவைகள் அமைச்சு நடத்திய கலாசார விழா (2011) மாகாண ரீதியிலான கவிதைப் போட்டியிலும் முதற் பரிசு கிடைத்தது. மேலும் 1983இல் மூன்று பரிசுகள்! கவிதை, மேடை நாடகம், அரங்கியல் ஆகிய துறைகளில் இந்த ஆசுகவியைப் பாராட்டிக் கௌரவித்தன. 1993 இல் சம்மாந்துறை மக்கள் கலை வட்டம் நடத்திய மே தினக் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார். அம்பாறை மாவட்ட சாகித்திய இலக்கிய விழா நாடகப் பிரதிப் போட்டியில் இவருக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. (1983) இலங்கை இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய ஆய்வகமும், தினக்குரல் பத்திரிகையும் இணைந்து நடத்திய சர்வதேச மரபுக் கவிதைப் போட்டியில் 2009இல் சிறப்புப் பரிசு பெற்றார். 1998இல் பேராதனை பல்கலைக் கழகத்தின் சங்கீத நாட்டிய சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு இவருக்குரித்தானது. இன்னும் குறிப்பிடத்தக்க பல இலக்கிய கௌரவங்களும் அன்புடீனின் எழுத்துலகக் கேடயங்களாக மிளிர்கின்றன.

2008இல் அம்பாறை மாவட்ட செயலக சாகித்திய விழாவில் கௌரவிக்கப்பட்டு 'திகாமடுல்ல அபிமானி விருது' பெற்றார். 1999இல் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினரால் 'கவித்தாரகை' பட்டமளிக்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு கொழும்பு ப்ரியநிலா கலை கலாசாரப் பேரவையினரின் 'இலக்கிய மாமணி' விருதும், 2007இல் 'தினச்சுடர்' பத்திரிகையின் வருடாந்த சிறந்த கவிஞர் விருதும் (BEST POET) கிடைத்தன. 2007இல் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார பெருவிழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். 2009இல் நிந்தவூர் ஆர்.கே. மீடியா கலைஞர் கௌரவிப்பு விழாவில் அன்புடீனுக்கு 'கவிச்செம்மல்' விருது வழங்கப்பட்டது.

1974இல் பாரதி நூற்றாண்டுக் கவியரங்கு, திருமலை எழுத்தாளர் மாநாட்டில் 1975இல் சிறுகதை அரங்கு, 1997இல் தேசிய மீலாத் விழாக் கவியரங்கு, 1998இல் அல்லாமா இக்பால் தேசிய மாநாடு கவியரங்கு, 2000ஆம் ஆண்டு உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு கவியரங்கு என்று அன்புடீனின் பங்களிப்பு விரிந்த பல அரங்குகளின் ஆய்வகமாகவே உள்ளன. 2002இல் ரூபவாஹினி, 2011இல் வசந்தம், நேத்ரா தொலைக்காட்சிகள், இலங்கை வானொலியின் கலைக்கோலம், முத்துப்பந்தல் ஆகியன அன்புடீனின் ஆளுமைகளையும் அனுபவங்களையும் நேயர்களுடன் பகிர்ந்து கொண்டன.

□ □ □

அட்டாளைச்சேனை கவிதாலய(ம்) கலை இலக்கிய மண்டலத்தின் ஸ்தாபகத் தலைவராக, அம்பாறை மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவராக, எழுவான் பத்திரிகை வெளியீட்டுப் பணிகத் தலைவராக, தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத் தவிசாளராக, அட்டாளைச்சேனை மக்கள் சக்தி அமைப்பின் தவிசாளராக, பாலமுனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்ற ஸ்தாபகராக, தென்கிழக்கு கலாசாரப் பேரவை செயலாளராக, கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டலச் செயலாளராக, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க கல்முனைக் கிளை செயற்குழு உறுப்பினராக, கல்முனை எழுத்தாளர் சங்க உறுப்பினராக இப்படிப் பல இலக்கியப் பொது அமைப்புக்களில் ஈடுபட்டு ஓய்வு ஒழிச்சலற்ற கலை இலக்கியப் பணிகள் ஆற்றிவரும் அன்புடீன், தென்கிழக்கு மண்ணின் ஓர் உன்னத இலக்கிய நீரூற்று.

ஒரு சமூக இயக்கமாக ஆரம்பித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இயக்கத்தில், தனது இலக்கியத் தோழரான மறைந்த தலைவர் கவிஞர் திலகம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களினால் நேரிடையாக இணைக்கப்பட்ட அதன் ஆரம்பகாலப் போராளி ஆவார். அவரது அரசியல் போராட்ட வாழ்வு தனியாக ஆராய்ந்து தொகுக்கப்படல் வேண்டும்.

□ □ □



அன்புடீன் பாடல்களை இப்பகுதியின் மூன்று பாடசாலைகள் தம் பாடசாலைக் கீதங்களாகக் கொண்டுள்ளன. கோட்டக் கல்விக் கீதமும் அவருடையதே. அவரது எழுதுகோல் தடம் பதித்த இலங்கை - மற்றும் சர்வதேச ஊடகங்களில் வெளியான நூல் விமர்சனங்கள், நேர்காணல்கள், இலக்கியச் சந்திப்புள், மேடைக் கவியரங்குகள், வானொலி ஒலிபரப்புகள் மற்றும் சிறுகதைகள், கவிதைகள், மேடை வானொலி நாடகங்கள், உருவகக் கதைகள், மெல்லிசைப் பாடலகள் என்று நமக்கு மூச்சு முட்டுமளவுக்கு அவரிடம் குவிந்துள்ளன.

□ □ □

அன்புடீன் கவிதை ஆளுமை கருதி 1999இல் கல்முனை புகவம் அமைப்பு 'ஆசுகவி' என்னும் பட்டத்தை வழங்கிப் பெருமைப்பட்டுக் கொண்டது. அவரது இலக்கியப் பணியைக் கௌரவித்து, இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் 2009இல் 'கலாபூஷணம்' விருது அளித்தது.

□ □ □

'பெருவெளி' சஞ்சிகையில் வெளிவந்த 'ஏட்டில் எழுதி வைத்தேன்' என்னும் இலக்கிய விசாரணைகளைப் பற்றிய இவரது பத்தித் தொடர் பலரின் கவனத்தைப் பெற்ற ஒன்றாகும். இத்தொடர் மேலும் எழுதப்பட்டு நூலுருவாக்கப்படுதல் வேண்டும் என்பது இலக்கியவாதிகளது எதிர்பார்ப்பு.

எதிர்கால தேவை கருதி, கலா பூஷணம் ஆசுகவி அன்புடீன் 50 வருட இலக்கியச் செல்நெறியின் ஆதாரக் கூறுகளாக உள்ள மேற்படி அனைத்து ஆக்க இலக்கியப் பணிகளும், பங்களிப்புகளும் அவரது 'இலக்கியப் பொன்விழா' அண்மிக்கும் இக்காலப்பகுதியில் எண்ணிமப்படுத்தப்படல் வேண்டும். இது அவசியத் தேவை. ஒரு சமூக, இலக்கியப் போராளியின் சுயவிபரக்கோவை அது.


## மல்லிகை விளம்பர விபரம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - | 10,000/- |
| பின் உள் அட்டை (கலர்) | - | 5,000/- |
| முன் உள் அட்டை (கலர்) | - | 5,000/- |
| பின் உள் அட்டை (கறுப்பு/வெள்ளை) | - | 4,000/- |
| முன் உள் அட்டை (கறுப்பு/வெள்ளை) | - | 4,000/- |
| உள் முழு பக்கம் கறுப்பு வெள்ளை | - | 1500/- |
| உள் அரைப் பக்கம் கறுப்பு வெள்ளை | - | 750/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# (வி)சித்திரம்

– அன்புடீன்

தாமரைப் பூக்களின் தாற்பரியம்
தவளைகளுக்குத் தெரிவதில்லை
வண்டுகளுக்கு தெரியும் அதன் வாசனை
வண்டுகளின் சேமிப்பை
திருடுகின்றவர்களுக்கு தெரியுமா அதனுழைப்பு?

பூக்களின் பூப்பூவை
பூமரங்கள் புரிந்துகொள்வதில்லை
வாசலுக்கு வடிவு பூக்கள் : மரங்களும் வடிவுதான்!

காய்க்காத மரம் பெறும் சொல்லெறியை
பூக்காத மரம் பெறுவதில்லை
பூவை விடவும்
மதிப்புண்டு சில மரங்களுக்கு
இலைகளில் எழுதியுள்ள
சித்திரக் கோடுகளின் விசித்திரம் அப்படி!

பிரசவம் இல்லையாயினும்
தாலாட்டும் இனிமை
தாயை விடவும் அதிகம் செவிலிகளுக்கு...
தாமரைக் குளத்து தவளைகள் போலல்லாது
வாசனை தெரிந்த வண்டுகள்தான் அவர்கள்!



சிறுகதை

# மணல் தீவுகள்

– மூதூர் மொகமட் ராபி

“ஹலோ! எக்ஸ்க்யூஸ்மீ, உங்கட இந்த நம்பர்ல இருந்து இரவு நிறைய மிஸ்ட் கோல் வந்திருக்கு... யாரு நீங்க...என்ன விசயமா எடுத்தீங்க?” முழு வாக்கியத்தையும் நான் கேட்டு முடிக்கவில்லை.

“அடச்சீ! நீங்களா? நீங்கள்ளாம் ஒரு மனிசனா?” என்றது எதிர்முனையிலிருந்து ஒரு நடுத்தர வயதுப் பெண்ணின் குரல். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

“ஹலோ! நீங்க...” என்று ஆரம்பித்த என்னைப் பேசவே விடவில்லை!

“சீ வாயை மூடுங்க! இரவு முழுக்க நானும் என்ட பிள்ளைகளும் கூப்பிட்ட நேரம் போனைத் தூக்காமல் கல்லு மாதிரி இருந்திட்டு... இப்ப விடியிற நேரம் வந்து என்ன ...க்கு எடுக்கிறீங்கள்? ஆங்... இப்ப எதுக்கு எடுத்த நீங்கள் ஆ?” என்று அதட்டியது அந்தக் குரல்.

“ஹலோ... முதல்ல நீங்க யாரு? நான் யாரேண்டு நினைச்சுட்டுப் பேசுறீங்க நீங்க?” என்றேன் ஆச்சரியம் நீங்காமல்.

“ஆங்! அதெல்லாம் சும்மா நடிக்க வேணாம் சரியா? இஞ்ச பாருங்க! எங்கட பிள்ளைகள் பொம்பிளைப் பிள்ளைகள். சின்னதுகள். அதுகளுக்கு படிப்பிக்கிற ஆள் நீங்க! இப்படித்தான் செய்யிறதா?” என்று பட்டாசு வெடித்தது.

அடுத்த முனையிலே பேசும் பெண்குரலை என்னால் அடையாளங் காண முடியவில்லை என்பதால் அந்தப் பெண்குரல் படபடவென்று பொரிந்து கொண்டிருப்பதை வேறு வழியின்றி கேட்டுக்கொண்டேயிருந்தேன்.

“இந்தா! இரவு அதுகள்ற போனைப் பாத்திட்டு சரியான அடி அதுகளுக்கு. பாவம் உங்களால அதுகள் ரெண்டும் எனக்கிட்ட அடி வேண்டிட்டு அழுதழுது இந்தா... ஸ்கூலுக்கும் போக எழும்பாமப் படுக்குதுகள் சந்தோசமா உங்களுக்கு? சே!”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ன** விடயமென்று எனக்கு தலை **கால்** புரியவேயில்லை. ஆனால் ஏதோ **கைத்**தொலைபேசியுடன் தொடர்பான **ஒரு** விபரீதம் அந்தப் பெண்ணுக்கு நடந்**திருக்**கின்றது என்பதும், என்னை யாரோ**வென்று** நினைத்து தவறுதலாக ஏசிக்**கொண்**டிருக்கிறாள் என்பது மட்டும் இலே**சாகப்** புரிந்தது. செல்போனை கட்டிலில் **போட்டு** விட்டுப் பார்த்துக்கொண்டிருந்**தேன்**. அது விடாமல் கீச்சுக்குரலிலே **வசை** பாடியவாறேயிருந்தது.

நான் மிக அண்மையில்தான் பேரா**தனைப்** பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்பை முடித்து வெளியேறியுள்ள 26 வயது இளைஞன். இன்னும் அரசாங்க வேலை எதுவும் கிடைக்காததால் இங்கே கிழக்கின் தலைநகரில் புறநகர்ப் பகுதியிலுள்ள ஒரு மசூதி ஒன்றின் வாடகை அறையில் தங்கியிருந்து நகரிலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் பலவற்றிலே விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஒரு பகுதி நேர ஆசிரியராக இருந்து வருகின்றேன். வார இறுதியிலே மட்டும் 40 கிலோமீற்றர் தள்ளியிருக்கும் ஊருக்கு ஒருதடவை போய்விட்டு மறுநாளே திரும்பி வந்து விடுவதும் எனது வழமை.

நேற்றைய தினம் எனது ஊரைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கடல் குளிக்கச் சென்று மூழ்கி உயிரிழந்த விபரீதம் பற்றி வானொலிச் செய்தியில் கேட்டேன். செய்தியிலே குறிப்பிடப்பட்ட பெயரையும் வயதையும் வைத்து அவர்கள் எனது தாய்வழி தூரத்து உறவினர்கள் என்பதை அறிந்ததும் பதறியடித்து அறையைப் பூட்டிவிட்டு ஊருக்கு பஸ்ஸேறிச் சென்றுவிட்டேன்.

மூன்று மரண வீடுகளிலும் துக்கம் விசாரித்து ஆறுதல் கூறி இயன்ற ஒத்தாசைகளையெல்லாம் புரிந்துவிட்டு இன்று அதிகாலையிலேதான் மீண்டும் அறைக்குத் திரும்பியிருந்தேன். பிரயாணக் களைப்புடன் கட்டிலில் விழுந்து கிடந்த போது இடுப்பினருகே ஏதோ உறுத்தியது. அதை எடுத்துப் பார்த்தால் முந்தியதினம் மரண வீட்டுக்குச் செல்லும் அவசரத்திலே நான் மறந்துபோய் அறையிலேயே விட்டுச் சென்ற கைத்தொலைபேசி. மரண வீட்டின் சோக நிகழ்வுகளிலே செல்போனை முற்றாக மறந்துவிட்டிருந்த எனது ஞாபக சக்தியை நொந்து கொண்டேன்.

இந்த ஊரிலே எனக்குள்ள ஒரே ஆத்ம நண்பன் இந்த செல்போன் என்பதால் அதை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தபடி அதன் ஒளிரும் திரையைப் பார்த்தபோது இரவு நான் எடுக்கத் தவறிய பல அழைப்புகள் (missed calls) திரையிலே வரிசை கட்டிக் கிடந்தன. அவற்றிலே ஒரு புதிய இலக்கத்திலிருந்து மட்டும் ஏராளமான அழைப்புகள் கிடப்பது கண்டு வியந்துபோய் அந்த இலக்கத்தை அழுத்தி அழைப்பை ஏற்படுத்தி விசாரிக்கப் போய்தான் இதுவரை நான் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கும் அந்த அதட்டலும் வசைபாடலும்!

அந்தப் பெண்மணி என்னை விடுவதாக இல்லை. மீண்டும் மெதுவாக போனைக் காதில் வைத்தேன்

“இப்படியான வேலைகள் செய்வீங்களென்டு கனவிலயும் நான் நினைக்கேல்ல மாஸ்டர்” என்று பொரிந்து கொண்டிருந்த அந்தப் பெண் சிறிது இடைவெளி விட்டார். ஆனால் நிச்சயம் அது என்மீது கொண்ட பரிதாபம் காரணமாக இருக்காது. மூச்சு வாங்குவதற்காகவோ அல்லது தொண்டையைச் செருமிக் கொள்வதற்காகவோதான் இருக்க வேண்டும்.



“ஹலோ அக்கா! கொஞ்சம் நி[redacted]டுங்க!” சட்டென்று கிடைத்த இடைவெளிக்குள்ளே அதிரடியாகப் புகுந்து அதட்டல் போட்டு அவரின் சரவெடியை ஒருவாறு நிறுத்தினேன்.

“அக்கா, நீங்க இப்ப பத்து நிமிசமா என்ட செலவிலதான் எனக்கே ஏசிக் கொண்டிருக்கிறீங்க தெரியுமா? தயவு செய்து கொஞ்சம் நீங்கள் யாரு? இப்ப என்ன விசயம் சம்பந்தமா ஏசிக்கொண்டிருக்கிறீங்க என்டு சொல்லிப் போட்டு ஏசுறீங்களா?” என்றதும் சில வினாடிகள் மௌனத்தின் பின்பு மறுமுனையின் தொடர்பு அறுந்து போனது.

“அதட்டலுக்கு பயந்திட்டாரா, அல்லது திரும்ப ரோசத்திலே தன்னுடைய செலவில் ஏசப்போகிறாரா புரியவில்லை. இதென்ன வம்புடா இது?” என்று போனை உடனே அணைத்துச் சட்டைப் பையினுள் போட்டுக் கொண்டேன். மனம் நிம்மதியில்லாமல் தவித்தது.

அறையை விட்டு வெளியேறி பள்ளி வாசலை நோக்கி நடந்தேன். குழாய் நீரில் முகம், கை கால்களைச் சுத்தம் செய்த பின் அதிகாலைத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு தொழுகைக்கூடத்தின் ஒரு பக்கச் சுவரோரமாக சாய்ந்து அமர்ந்து கொண்டேன். இப்போது மனம் சிறிது லேசாக இருந்தது போல உணர்ந்தேன்.

“யார் இவ? ஏன் இப்படி ஒரேயடியாகத் துள்ளுறா? அப்படி என்னதான் நடந்திருக்கும்?” என்று நிதானமாக யோசித்தபோதுதான் அந்தப் பெண் போனிலே சற்றுமுன்பு கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

“இஞ்ச பாருங்க எங்கட பிள்ளைகள் பொம்பிளைப் பிள்ளைகள். சின்னதுகள். [redacted]க்கிற ஆள் நீங்களே இப்படிச் செய்யலாமா?” என்ற அந்தப் பெண்ணின் வார்த்தைகள் எனக்குள் பல்வேறு யூகங்களையும் தோற்றுவித்தது. அப்படியானால், அந்தப் பெண்மணி என்னிடம் படிக்கின்ற யாரோ மாணவிகளின் தாயாகத்தான் இருக்க வேண்டும். எத்தனை பேர்தான் என்னிடம் படிக்கின்றார்கள். அதிலே யாராக இருக்கும்? ஆனால் நான் அவர்களிலே யாருக்கும் என்னுடைய கைத்தொலைபேசியின் இலக்கத்தை கொடுத்திருக்கவில்லையே.”

சட்டென்று ஏதோ ஒரு பொறி தட்டவே மீண்டும் கைத்தொலைபேசியை இயக்கி ஆராயத் தொடங்கினேன். எனது விரல்கள் குறுஞ்செய்திக்குரிய உள் பெட்டியை (inbox)ஐச் சொடுக்கியதும் அது ஏறத்தாழ நிறைந்து கிடப்பது தெரிந்தது. அதுவும்கூட ஒரு குறிப்பிட்ட இலக்கத்திலிருந்து வந்த குறுஞ்செய்திகளால் தான் வழிந்து கொண்டிருந்தது. அந்த இலக்கத்தை உற்றுப் பார்த்தவுடன் திடுக்கிட்டேன்.

ஆம், அது சற்றுமுன் என்னை உண்டு இல்லையென்று ஆக்கிய அந்தப் பெண்ணின் இலக்கம்தான் அது. “இதென்ன கூத்து இது?” என்று பள்ளிவாசலினுள் இருக்கின்றேன் என்பதையும் மறந்து வாய்விட்டு கத்தியே விட்டேன். சற்றுத் தள்ளி ஓரமாக அமர்ந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த மசூதியின் முஅத்தினார் (தொழுகை உதவியாளர்) என்னைச் சந்தேகமாய் ஒருதடவை பார்த்துவிட்டு மீண்டும் ஓதலானார்.

தொலைபேசித் திரையிலிருந்து கண்ணை விலக்காமலே பள்ளிவாசலை விட்டு இறங்கி வெளி முற்றத்திற்கு வந்தேன். காகங்கள் கரைந்து கொண்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் வெளுத்திருந்தது. பள்ளி வளாகத் திலே இரண்டொரு கார்களும் வேன் களும் சில லொறிகளும் தரித்துக் கிடந் தன. அவற்றின் முன்புறக் கண்ணாடி களிலே இரவு பெய்தபனி படிந்து கிடந் தது. பிரதான வீதியில் வாகனங்கள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டிருக்க பள்ளிவாசலுக்கு எதிரேயிருந்த தேனீர்க் கடையிலிருந்து நாகூர் ஹனீபாவின் இஸ்லாமிய கீதம் ஒன்று காற்றில் பரவி வந்தது.

முற்றத்திலிருந்த மணல் குவியலின் மீது அமர்ந்து கொண்டேன். மனம் காரண மில்லாத பதட்டத்திலிருந்தாலும் நிதா னத்தை வரவழைத்துக் கொண்டு அந்தக் குறுஞ்செய்திகளை அவை வந்த ஒழுங்கி லேயே அடியிலிருந்து ஒவ்வொன்றாகத் திறந்து படிக்கலானேன்.

“ஸேர், நீங்க சாப்பிட்டீங்களா?” என்று தமிழ் எழுத்துகளிலே விசாரித்தது முதலாவது குறுஞ்செய்தி. எனக்கு வரும் குறுஞ்செய்திகள் பொதுவாக ஆங்கிலத் தில் மட்டும்தான் வருவதனால் எனது தொலைபேசியிலே தமிழ் எழுத்துகளில் செய்தி அனுப்பும் வசதியை நான் பெற்றி ருக்கவில்லை.

யோசனையுடன் அடுத்த செய்தி யைப் பார்த்தால், “சேர் நீங்க நோம்பு பிடிக்கிறீங்களா?” என்று கேட்டது. “இரவு வந்தனங்கள் சேர்!” என்றது ஒன்று. “ஏன் சேர் தாடியை எடுத்திட்டீங்க?” என்றது மற்றொன்று. “சேர் விஞ்ஞான டெஸ்ட்டில நீங்க சொன்ன கேள்விகள் வந்தது!” இப்படியே சாதாரண சுகவிசாரிப்புக்களாக ஆரம்பித்து மெல்ல மெல்ல... “ஏன் சேர் இப்படியெல்லாம் அசிங்கமாய் பதில் message போடுறீங்க?” என்றும் “சேர் மரி யாதை மிக முக்கியம்” என்றும் பின்பு, “சேர் நீங்க நக்கல் அடிக்கிற மாதிரி இருக்கு...” என்று தொடர்ந்து ஒருநிலை யிலே, “என்ன நீங்க ஓவராத்தான் போறீங்க? கூடாத மெஸேஜ் அனுப்பி னால் நாங்களும் ஏசித்தான் மெஸேஜ் அனுப்புவோம்” என்றெல்லாம் செய்தி களின் தன்மை வலுக்கத் தொடங்குவதை உணர்ந்தேன். பரபரப்போடு அத்தனை செய்திகளையும் திறந்து படிக்கப் படிக்க எனது மனம் பாறையாய் இறுகிப்போனது.

இன்றுள்ள மாணவர்களும் மாணவி களும் ஏன் இந்த மாதிரியெல்லாம் நடந்து கொள்ளுகின்றார்கள் என்று எனக்குப் புரியவேயில்லை. அதுவும் தங்களுக்குக் கற்பிக்கும் ஓர் ஆசிரியரோடு எப்படி நடந்து கொள்வது என்பதுகூடத் தெரியா தளவுக்குத்தான் இன்றைய சமூகக் கட்டமைப்புகள் எல்லாம் ஒரேயடியாய் மாறிப்போய் விட்டனவா?

இன்றைய தலைமுறையினருக்கு எல்லாவற்றையும் விட வேடிக்கையுணர்வு தான் முக்கியமாகப் போய்விட்டது போலும். அதற்காக தமது கல்வி முன் னேற்றம், நன்மதிப்பு, பெற்றோர்களின் சமூக அந்தஸ்து, உறவினர்களின் பாசம், பரஸ்பர மரியாதை, மானம், நட்புணர்வு என்று எதை வேண்டுமானாலும் பலி கொடுக்கத் தயாராகின்றார்கள். அதுமட்டு மல்ல தமக்குக் கிடைக்கும் அற்ப ‘த்ரில்’ உணர்வுகளுக்காக அடுத்த மனிதனின் தனிப்பட்ட சுதந்திரத்திலும் கூட தயங்கா மல் கை வைக்கின்ற அசட்டுத்துணிவு இவர்களுக்கெல்லாம் எங்கிருந்து வரு கின்றது?'

யோசிக்க யோசிக்க மனம் பதற்ற மாகி அடுத்து என்ன செய்வதென்று தெரி யாமல் அப்படியே மணல் குவியலின் மீது அமர்ந்திருந்தேன்.



“என்ன மாஸ்டர் தம்பி, ஊருக்குப் போய் வந்தாச்சா?” என்று கேட்டபடி தொழுகைக் கூடத்திலிருந்து கீழே இறங்கி வந்து வேகமாக நடக்க ஆரம்பித்தார் முஅத்தினார்.

“ஓ! ஓம் நானா..! ஸஹர் செஞ்ச கையோட பஸ் ஏறினதுதான்” என்று பதில் கூறினேன்.

வயோதிபரான அவருக்கு இரத்த அழுத்த வியாதி இருப்பதால் விடிந்ததும் பள்ளிவாசல் வளாகத்தைச் சுற்றிச் சில வளையங்கள் நடப்பது வழமை. அன் றைய தினம் பள்ளிவாசல் வளாகத்தி னுள்ளே லொறிகள், வேன்கள், கார்கள் என்று அதிகமான வாகனங்கள் தரித்து நின்றிருந்ததால் அவரது நடைக்குத் தடங் கல்கள் அதிகமிருந்தன. இதனால் அவர் சற்றுச் சிரமப்பட்டே நடைப்பயிற்சியைச் செய்து கொண்டிருந்தார். அவர் நடக்கும் திசையிலே சற்றுத் தூரத்தில் நின்றிருந்த ஒரே மாதிரியான இரு அழகான புதிய கார்கள் என் கண்ணில் பட்டன. அரு கருகே நின்றிருந்த அந்தக் கார்களில் ஒன்று அடர்பச்சை நிறத்திலும் மற்றை யது வெளிர் மஞ்சள் நிறத்திலும் இருந்தன.

அப்பொழுதுதான் எனது மூளை யிலே சட்டென ஒரு மின்னல் பளிச் சிட்டது.

ஒருவேளை போனில் ஏசியது அந்த ‘ப்ளக் அண்ட் வைற்’ஸின் தாயாக இருக் குமோ? அவர் கதைத்த விடயங்களையும் எனக்கு வந்திருந்த மெஸேஜ்களையும் பார்க்கும் போது நிச்சயம் எனது அனு மானம் சரியென்றுதான் தோன்றியது.

நகரை அண்டியுள்ள கிராமம் ஒன் றிலே நான் கற்பிக்கும் தனியார் டியூட்டரி யில் ஒன்பதாம் வகுப்பிலே படிக்கும் இரட்டைச் சகோதரிகளான இரு மாணவி களைத்தான் ‘ப்ளக் அண்ட் வைற்ஸ்’ என்பது. ஆனால் வேடிக்கை என்னவென் றால் இருவரையும் காண்பித்து இரட் டைச் சகோதரிகள் என்று தெரியாதவர் கள் யாரிடமாவது சொல்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைக் கேட்ப வர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

அந்தளவுக்கு அந்த இரு பெண் பிள்ளைகளிடமும் நிறம் தோற்றம் குணம் முதற்கொண்டு அத்தனையிலும் வித்தி யாசங்கள்தான் அதிகம். ஆம், ஒருத்தி பால்போல பளிச்சென்று இருந்தால் மற்றவள் கன்னங்கரேல் கருங்காலி நிறத்திலிருப்பாள். ஒருத்திக்கு அழகான பெரிய விழிகள் என்றால் மற்றவளுக்கு யானைக்குப்போல சிறிய கண்கள். ஒருத்தி என்னுடைய பாடத்தில் படு கெட்டிக்காரி. ஆனால் மற்றவளோ சாதா ரண ரகம். ஒருத்தி வெகு நிதானமானவ ளென்றால் மற்றவள் படு பரபரப்பானவள். அப்படியொரு விநோதமான சேர்க்கை யுள்ள இரட்டையர்களாக அவர்களை இறைவன் படைத்திருந்தான். அதனால் தான் அவர்களை ‘ப்ளக் அண்ட் வைற்ஸ்’ என்பது. அப்படிச் சொன்னால் தான் எல்லோருக்கும் தெரியும்.

அந்தப் பெண்கள் ஆசிரியர்கள் எல் லோருடனும் மிகையான அக்கறையுடன் பழகுவதற்கு அவர்களிருவரின் தாயின் கதைதான் காரணம். அதை ஒருநாள் டியூட்டரிப் பொறுப்பாளர் என்னிடம் விபர மாகக் கூறி முடித்தபோது ஏதோ 70களில் வெளிவந்த ஒரு பழைய தமிழ் அல்லது ஹிந்தி திரைப்படத்தின் கதையைக் கேட்பது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாய் ஒரு பாடசாலை மாணவியாக இருந்த காலத்திலே பருவக் கோளாறு காரணமாக தனது பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக ஓர் இளைஞனைக் காதலித்து வீட்டை விட்டு வெளியேறி அவனை மணமுடித்திருந்தாராம். மனமுதிர்ச்சியற்ற வயதிலே திருமண வாழ்வை ஆரம்பித்த காரணத்தினாலோ என்னவோ இருவருக்குமிடையே இருந்த இளம்வயதின் கவர்ச்சிகள் தீர்ந்ததும் அந்தத் திருமண பந்தம் சில மாதங்களுக்குள்ளேயே முடிவுக்கு வரவேண்டியதாகிப் போனதாம். தன்னை நம்பி வீட்டை விட்டு வந்தவளைக் கர்ப்பிணியாக்கிய அந்த பொறுப்பற்ற இளைஞன் அவளைக் கைவிட்டு எங்கோ சென்றுவிட நிராதரவானாள் நமது இரட்டைகளின் தாய். பெற்றோரிடமும் திரும்பிச் செல்ல முடியாத நிலையிலே வேறு வழியின்றி தற்கொலைக்கு முயன்றவளை அதிர்ஸ்டவசமாக பாடசாலை ஆசிரியையான ஒரு வயது முதிர்ந்த கத்தோலிக்கப் பெண் துறவிதான் காப்பாற்றியிருந்தாராம்.

நமது ‘ப்ளக் அன்ட் வைற்ஸ்’ பிறக்கும் வரையிலே தனது ஆலய விடுதியிலே அடைக்கலம் கொடுத்திருந்த அந்தப் பெண் துறவி தொண்டு நிறுவனமொன்றின் உதவியோடு அவர்களுக்கு வீடு ஒன்றைக் கட்டித் தந்ததோடு தான் மரணமடையும் வரை தாயையும் இரட்டைக் குழந்தைகளையும் தனது பராமரிப்பிலேயே வைத்திருந்தார்.

இதனிடையே ஒருநாள் மனைவியைக் கைவிட்டுச் சென்ற இளைஞன் மனம் திருந்தி தனது மகள்களாகிய இரட்டைச் சிறுமிகளைப் பற்றியும் கேள்வியுற்று அவர்களைக் காண திரும்பி வந்திருந்தானாம். ஆனால் துரதிஷ்டவசமாக அவன் வீட்டுக்கு வந்த சிறிது நேரத்திலேயே சந்தேகத்தின் பேரில் சீருடைக் காவலர்களால் கொண்டு செல்லப்பட்டு விட்டானாம். அதன் பிறகு அவனைப் பற்றிய தகவலே இல்லாதிருந்ததாம். எவ்வளவோ முயன்றும் அவனை எங்கே கொண்டு போனார்கள் என்று அறியவே முடியவில்லையாம். நமது நாட்டின் காணாமல் போனோர்களின் பட்டியலில் அவனும் இடம்பிடித்து விட்டானாம்.

சூழ்நிலை காரணமாக அந்தத் தாயும் சகோதரிகளும் வறுமையுடன் போராடியே வளர்ந்திருந்தார்களாம். அதன் பிறகு பல வருடங்களாக கூலி வேலைகளைச் செய்து தனது இரு பெண்களையும் வளர்த்து வந்தாராம் அந்தப் பெண். அவர்களின் நிலைமையை அறிந்து எங்கள் டியூட்டரி பொறுப்பாளர் அவர்களிடம் கட்டணம் கூட அறவிடுவதில்லையாம். நீண்டகாலமாக தந்தை என்ற ஆணின் துணையும் அரவணைப்பும் இன்றியே வாழ்ந்து வருவதால்தான் அந்த இரட்டைச் சகோதரிகள் தம்மீது அக்கறையுடன் கற்பிக்கும் ஆண் ஆசிரியர்களிடம் அதீத அன்புரிமை பாராட்டுகின்ற இயல்புகளைச் சற்றுத் தூக்கலாகவே கொண்டிருக்கின்றார்களாம் என்று அவர்களின் கதையைக் கூறி முடித்தார் பொறுப்பாளர்.

அந்த மாணவிகளின் அனுதாபம் தேடும் இயல்புகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பாடங்களைக் கற்பித்து முடிக்க வேண்டிய அவசரத்தில் இருக்கும் எனக்கு சிலவேளைகளிலே தொல்லையாய் கூட அமைந்து விடுவதுண்டு. அப்படியான வேளைகளிலே இலேசாக அவர்களிருவரையும் கடிந்து கொண்டும் விடுவேன். அப்படி ஏதாவது செய்து விட்டால் போதும் இரட்டைச் சகோதரிகளின் முகங்கள் வெட்டிப்போட்ட வாழையிலை



போல துவண்டு தொங்கி விடும். வீட்டுக்குப் போனதும் அழப்போகும் அழுகையை தங்களது கண்களிலே அடைகாத்து வைத்திருப்பார்கள் இருவரும்.

மீண்டும் பழைய நிலையை அடைய சில நாட்களாகும். அதுவரை என்னோடு சிறு ஊடல் கொண்டு பேசாமல் திரிவார்கள். சிலவேளைகளிலே வகுப்பிலே கண்கள் கலங்கி அழுவதும் கூட நடக்கும். நானும் அதைக் கவனிக்காதது போலவே இருந்து விடுவேன். உண்மையிலேயே எனக்கிருக்கும் வேலைப் பளுவில் இதையெல்லாம் கவனிக்க முடிவதில்லையாயினும் அவர்களது குடும்ப நிலையை அறிந்திருந்ததால் மனதின் சிறுமூலையிலே மெல்லிய அனுதாபம் இருந்து கொண்டே இருக்கும். அதனால் கூடிய விரைவிலேயே அந்தக் கெட்டிக்காரப் பெண்களை அவர்களது படிப்பை நினைத்தாவது ஏதாவது உயர்வாகப் பேசி இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து விடுவேன்.

அந்த இரட்டைச் சகோதரிகளிடம் ஏன் நான் இப்படியெல்லாம் அனுதாபமாய் நடந்து கொள்கின்றேன் என்பது எனது வகுப்பிலே கற்கும் பல மாணவர்களுக்கும் சில மாணவிகளுக்கும் புரிவதில்லை. இதனால் அவர்களில் சிலர் துணிந்து, “சேர், நீங்க ‘ப்ளாக் அண்ட் வைட்ஸ்’க்குப் பயங்கர ஸப்போர்ட்தானே ஸேர்?” என்று செல்லக் கோபத்தோடு என்னைக் கலாய்ப்பதுமுண்டு.

உடனே நானும் கடுமையான சிந்தனை வயப்பட்டது போல பாசாங்கு செய்து, “பிள்ளைகளே... கவனியுங்கள்! ஒரு ஆசான் எனப்படுபவர் அவரது மாண்புமிகு மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் பொதுவானவர் என்று இலைகுழை ஆடையுடுத்து தாடி மீசை வைத்திருந்த நமது முன்னோர்களாகிய காட்டுமிராண்டிகள் கல்வெட்டுக்களிலே எழுதி விட்டுச் சென்றிருக்கின்றார்கள் தெரியுமோ?” என்று திடீரெனச் செந்தமிழில் பேசி அவர்களைப் பதிலுக்குக் கலாய்ப்பேன். உடனே வகுப்பே சுவாரஸ்யமாகி விடும்.

“ஸேர், எனக்கொரு சந்தேகம்! கல்வெட்டு எழுதும் போது பிழை விட்டா எதை வச்சு சேர் அழிச்சிருப்பாங்க?” என்பான் ஒரு வால் பையன்.

“அதுதானே! எதை வச்சு அழிச்சிருப்பாங்க?” என்பேன் நானும் உண்மையான சந்தேகத்தோடு.

“அழிச்சிருக்கவே மாட்டாங்க ஸேர்!” என்பாள் ஒருத்தி.

“ம்ம்... அப்படியா சேதி? ஆகா! எப்பிடி இளவரசியே இவ்வளவு ஆணித்தரமாக அடித்துச் சொல்கிறீர்கள்?” என்பேன் நானும் நையாண்டி குறையாமல்.

“அதுவந்து ஸேர்... பிழை விட்டா மட்டும் என்ன, பின்னால வாறவங்களுக்குப் புரியவா போகுது என்டு நினைச்சி பேசாம விட்டிருப்பாங்க ஸேர்” என்பாள் அவள்.

மொத்த வகுப்புமே சிரி சிரியெனச் சிரித்து கலகலப்பாகி விடும்.

“என்ன தம்பி தனிய.. இருந்து... ஆ!.. இப்பிடி... மனசுக்குள்ள சிரிக்கிறீங்க...?” என்றபடி மீண்டும் என் முன்னே வந்து நின்றார் முஅத்தின். நடைப்பயிற்சியால் மூச்சு வாங்கியது அவருக்கு.

“ஏன் நானா இப்படி நோன்பையும் புடிச்சிக்கிட்டு உடம்பை வருத்திறீங்க?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன தம்பி செய்யுறது போன க்ளினிக்கில டாக்குத்தர் சொல்லிப் போட் டான் ஒவ்வொரு நாளும் காலையில நடக்காட்டிங் ஆ! அதாலதான் நோம் பெல்லாம் பார்க்க ஏலாது வாப்பா...! அது சரி போன காரியம் என்னாச்சு?'' என்று கேட்டார்.

கடல் குளிக்கச் சென்று நீரில் மூழ் கிய ஊர் இளைஞர்களின் விபரத்தை பொறுமையாகச் சொல்லி முடித்தேன்.

''யா அல்லாஹ்! இந்த நோம்பு காலத்துலயும் இப்பிடித் தோணியை எடுத்திட்டுப் போய் கடல்ல விளையாடிச் சாவணுமா...? யார்ர புள்ளைகள் வாப்பா... அது? சின்னப் பயலுவளா?''

''ஆங்... மூணு பேரும் தூரத்துச் சொந்தக்காரங்கதான் நானா. ஒருவன் ரஜீஸ், 28 வயசு... மற்றவன் ஸஹீர், மிஸ்பா ரெண்டு பேருக்கும் 19 வயசு இந்த வருசம் ஏயெல் எடுக்கிற பொடியன்கள்!''

''அப்பிடியா பாவமே?'' என்ற முஅத்தின் திடீரெனத் திரும்பி, ''என்ன பேர் வாப்பா சொன்னீங்க...?'' என்று ஆச்சரியமாய்க் கேட்டார்.

''ஏன் நானா?'' என்றேன் அவரது ஆச்சரியத்தைப் பார்த்து. ''இல்ல... இல்ல எங்கயோ கேள்விப்பட்ட பேரு மாதிரி இரிக்குதேண்டுதான் பாத்தன்.'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவரை அப்போது பார்த்து பள்ளிவாசலில் நின் றிருந்த வாகனம் ஹோன் அடித்துக் கூப் பிடவே அவசரமாகச் சென்று விட்டார் அவர். முஅத்தின் வேலைகளோடு பள்ளி வாசலில் தரித்து நிற்கும் வாகனங்களின் பண வசூல் வேலைகளையும் அவரே தான் கவனித்துக் கொள்வதால் எப் போதுமே இப்படித்தான் பாவம். ஓயாத வேலை அவருக்கு.

பள்ளிக் கிணற்றடிக்குச் சென்று குளித்து முடித்து பரீட்சைத்தாள் ஆயத் தம் செய்வதற்காக அறையைப் பூட்டிக் கொண்டு பொது நூலகத்திற்குப் புறப்பட் டேன். போகும் வழியிலே அந்தப் பெண்ணை போனிலே அழைத்து ஒரு முறை விடயத்தை விளக்கமாகப் பேசிப் பார்த்தாலென்ன என்றுகூட யோசித்தேன். ஆனால் சும்மா கிடந்ததை உசுப்பேற்றி விட்டது போலாகி விடுமோ? என்றும் பயந் தேன். எதற்கும் கொஞ்சம் விட்டுப் பிடிப் போம் என்று தீர்மானித்துக் கொண்டவனாக பஸ்ஸிலே ஏறினேன்.

* * *

பொது நூலகத்தின் உசாத்துணைப் பகுதியில் நான் பரீட்சைக்குரிய வினாத் தாள் தயாரிப்பிலே மும்முரமாக இருந் தேன். ஆனால் அப்போதும் கூட அதி காலையிலே என்னை ஏசிய முகம் தெரி யாத பெண்ணின் எண்ணமாகவே இருந் தது. ஏதோ ஒரு விபரீதம் நடக்கக் காத் திருப்பது போலவே மனம் அமைதியின்றி உழன்றது.

''இரவெல்லாம் பூட்டிக் கிடந்த அறைக்குள்ளே கிடந்த போனுக்கு அவர் களது போனிலிருந்து மெஸேஜ்கள் வந் திருக்கின்றது என்றால் என்னை ஏன் ஏசு கின்றார்கள்?'' என்ற யோசனை மீண்டும் மீண்டும் என்னைக் கொன்று தின்று கொண்டிருந்தது. அந்த மெஸேஜ்களிலே கூட ''ஏன் சேர் இப்படியெல்லாம் அசிங்க மாய் பதில் எழுதுகிறீர்கள்?'' என்றும் ''சேர் மரியாதை மிக முக்கியம்'' என்றும் இருந்தது நினைவுக்கு வந்தது. அப்படி யானால், எனது போனிலிருந்தும் மெஸேஜ் போயிருக்க வேண்டும் என்று தானே அர்த்தம். ஆனால் யாருமில்லாத அறைக்குள்ளே கிடந்த போனிலிருந்து எப்படி மெஸேஜ் போகும்.? என்று யோசித்தவாறு வெகு இயல்பாக எனது போனிலுள்ள send message பகுதிக்குச் சென்று பார்த்தேன்.

அதுவும் நிறைந்துதான் கிடந்தது.

சரி என்று என்னால் அனுப்பப்பட்டி ருந்த பழைய செய்திகளைப் பார்க்கலாம் என்று சொடுக்கியதுதான் தாமதம். மை காட்! என் கண்களையே நம்ப முடிய வில்லை. அந்தப் பெண்ணின் இலக்கத் திற்கு மட்டும் 19 மெஸேஜ்கள் - அவை அத்தனையும் வாசிக்கவே கூசும் படு ஆபாசமான கொச்சையான மெஸேஜ்கள் அனுப்பப்பட்டிருந்தது தெரிய வந்தது. அதுவும் நேற்றிரவு நான் மரண வீட்டிலே இருந்த சமயத்திலே!

அப்படியானால்... நேற்று மதியம் நான் மறந்துபோய் அறையிலே விட்டுச் சென்ற செல்போனை யாரோ கையாண்டி ருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்? ஆனால், அது எப்படிச் சாத்தியம்?

பூட்டியிருந்த அறைக்குள்ளே வந்து இதை யார் செய்திருக்க முடியும்? அப்படி வந்தவர்கள் ஏறத்தாழ எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான இந்த வெளிநாட்டு போனைத் திருடிச் செல்லாமல் ஏன் இப் படி எனது மாணவிகளின் இலக்கத்துக்கு ஆபாசச் செய்தி அனுப்பியிருக்க வேண் டும்? அப்படியானால் எனக்கு வேண்டு மென்றே கெட்ட பெயரை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று நினைக்கும் யாரோ இங்கே இருக்கின்றார்களா? எனக்குப் பய மும் பிரமிப்புமாகச் சேர்ந்து தலையைச் சுற்றியது. சிறிது நேரம் பிரமை பிடித் தவன் போல அப்படியே அமர்ந்திருந் தேன்.

இல்லை! இதை இப்படியே விடக் கூடாது. உடனடியாகக் கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்ற ஆவேசம் உந்தித் தள்ள எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு பஸ்ஸைப் பிடித்து மீண்டும் நான் தங்கி யிருந்த பள்ளிவாசல் வாடகை அறைக்கு வந்து சேர்ந்தேன். அந்தப் பிரதேசமே ஆள் நடமாட்டம் குறைந்து அமைதியா யிருந்தது. அறையைத் திறக்க முன்பு அதன் கதவையும் பூட்டையும் நோட்டமிட் டேன். அவை எல்லாமே வேறு யாரும் திறக்க முடியாதளவுக்குப் பாதுகாப்பாகத் தான் இருந்தன. என்னைத் தவிர மு அத்தினாரிடம்தான் இந்த அறைக்குரிய மற்றொரு திறப்பு உள்ளது. அதுவும் நானேதான் ஒரு முற்காப்புக்காக அவ ரிடம் கொடுத்து வைத்திருந்தது.

அப்படியானால் முஅத்தின் நானா வைத்தான் சந்தேகப்படுவதா, சே! அவருக்கு இப்படிச் செய்ய வேண்டிய தேவை என்ன? அத்தோடு சாதாரண தொலைபேசியே அதிகம் பாவித்தறியாத வயோதிபர் அவர். அப்படியானால் யார் இந்த சதி வேலையைச் செய்திருப்பார் கள்? கண்ணுக்குத் தெரியாமல் செயல் படும் எனது எதிரிகளோடுதானா இத் தனை நாளும் இந்த இடத்திலே நான் இருந்து கொண்டிருக்கின்றேன் என்று எண்ணியபோது உடலெல்லாம் உள்ளூர நடுங்கியது எனக்கு.

மனமெல்லாம் வெறுமையாகி கால் கள் பலமிழந்தது போலிருக்க அறை யைக் கூடத் திறக்காமல் அப்படியே வாச லிலே அமர்ந்து கொண்டேன். சற்றுத் தூரத்தில் முஅத்தின் என்னை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''தம்பீ வந்திட்டீங்களா?'' என்றவாறு என்னை நோக்கி வந்தார் முஅத்தின்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலம் பொறயிலருந்து ஒங்களத் தானே தம்பி தேடிக்கிட்டிருக்கேன். விடியப் புறம் சொல்ல நெனச்சிக்கிட்டு இருந் தேன். அதுக்குள்ளே வந்து எங்கயோ குர்பான் ஆடு தக்பீர் பண்றதுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிட்டானுகள். திரும்பி வந்து பாத்தா ஒங்கள காணலலியே."

"என்ன விசயம் நானா?" என்றேன் கசப்புடன்.

"தம்பீ, நேத்து காலம்பற நீங்க ஊருக்குப் போன பொறவு லுஹர் நேரம் மூணு இளந்தாரிப் பொடியனொள் மோட்ட சைக்கிள்ள வந்தானுவொள். இஞ்ச எங்கயோ ஸெமினாருக்கு போகணுமாம். ஒரு ராவு தங்கி நிண்டு போறதுக்கு றூம் கேட்டானொள். அந்த நேரம் ஒரு றூமும் கிடையாது. பொறவு ஒங்கட பேரைச் சொல்லி இஞ்சயா இரிக் கிங்க எண்டு கேட்டானொள். நானும் ஓம் மாஸ்டர் தம்பி இஞ்சதான் இரிக்கிற இப்ப ஊருக்கு மையத்து வூட்டுக்குப் போயிருக் கிறாருண்டு சொன்னேன். ஒங்கட பக் கத்து ஊர்தானாம். தெரியுமாம் என்டு பயலுவள் சொன்னதால நாந்தான் நிண் டுட்டுப் போட்டுப் போகட்டும் என்டு உங் கட றூமைத் தொறந்து வுட்டேன் வாப்பா. படுத்துக் கெடந்து காலம்பற சுபஹு தொழுத கையோட பொயிட்டானுவள்! பிரச்சினையில்லையே... தம்பீ?

"பிரச்சினையில்லையா? எவ்வளவு வாங்கினீங்க அவனுகளுக்கிட்ட?" என்று கேட்பதற்கு பற்றிக்கொண்டு வந்த கோபத்தை உதடுகளிலே வைத்து அடக்கிக் கொண்டு பேசாமலிருந்தேன்.

"ஆனா தம்பீ... ஒங்கட பொஸ்தகம் சாமானுவள் எதையும் தொடப்படாது என்டு சொல்லித்தான் உள்ளேயே வட் டேன் தம்பீ?" என்று என் முகத்தைப் பார்க்கத் திராணியின்றி வேறு எங்கோ பார்த்துக் கொண்டுதான் பேசினார்.

"என்ன தம்பீ, ஒண்ணுமே பேசுறீங்க இல்ல? ஒங்கட சொந்தமெண்டு சொன்ன தாலதான்" என்றார் குற்றவுணர்வுடன் குனிந்தபடி. அவரைப் பார்க்கப் பாவ மாகவும் இருந்தது.

"அதுசரி, எப்பிடி ஆக்கள் நானா? பேர் ஏதாவது சொன்னானுகளா?" என் றேன் எனது எரிச்சலை வெளியிலே காட்டாமல்.


"ஆ! இரிங்க! இப்படி நீங்க கேப்பீங் கண்டுதான் எதுக்கும் இருக்கட்டுமெண்டு பள்ளிக்குள்ள வாற வாகனத்தை பதியிற கொப்பியில கடசிப் பக்கத்துல அவ னொள் பள்ளிய வுட்டுப் போற நேரம் மூணு பேர்ர பேரையும் கேட்டு எழுதி வைச்சிருக்கேன் தம்பீ. இரிங்க. அதைக் கொஞ்சம் எடுத்திக்கிட்டு வாறேன்" என்று மசூதியின் மெயின்கேற்றுடன் இருக்கும் வாகனப் பதிவுக் கூண்டை நோக்கி வேக மாக நடந்தார் முஅத்தினார்.

அவர் வரும்வரை என்னுடைய ஆவலை அடக்க முடியவில்லை.

சட்டென அவரை முந்திக் கொண்டு வாகனப் பதிவுக் கூண்டை நோக்கி ஓடிச் சென்று அந்தக் கொப்பியை எடுத்து அவ சர அவசரமாக படபடவெனத் தட்டிப் பார்த்தேன். அந்த பெரிய ஸீ.ஆர் கொப்பியின் கடைசிப் பக்கத்தின் ஒரு மூலையிலே ரஜீஸ், மிஸ்பா, ஸஹீர் என்று நேற்றைய தினம் நீரில் மூழ்கி இறந்து போன இளைஞர்கள் மூவரின் பெயர்களும் எழுதப்பட்டிருந்தது.



கட்டுரை



# அரிஸ்டோட்டிலின் அழகியல்

- ஏ.எச்.எம்.நவாஷ்

**அ**ழகியல் மெய்யியல் (Philosophy of Aesthetics) பற்றிய புராதனப் போதனைகளில் மிக முக்கியமானவைகளில் ஒன்று பண்டைக்கால மெய்யியலாளரான அரிஸ்டோட்டிலினால் (Aristotle; 384-312 BC) உருவாக்கப்பட்டதாகும். இது அழகியல் மெய்யியல் வரலாற்றில் பொருள் முதல்வாத கருத்து முதல்வாத அடிப்படையுடையவர்களால் பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக விரிவாக்கப்பட்டு வந்துள்ளது. இன்னும் அது பொருத்தமற்றதாகி விடவில்லை என்பதுதான் அதன் சிறப்பம்சமாகும்.

சோக்ரட்டீஸின் (Socretes; 469-399 BC) 'உன்னையே நீ அறிவாய்' (Know the self) என்ற பிரசித்தி பெற்ற வாக்கியத் தோடு மெய்யியல் 'மனித பிரக்ஞை' கொண்டதாக ஸ்தூல வளர்ச்சியைக் காணத்துவங்கியது. சோக்ரட்டீஸ் முதன் முதலாக 'மனிதனைப் பற்றிய சிந்தனையே முதன்மையானது' எனக் கருதினார். மனிதனைக் கருப்பொருளாகக் கொண்டு சிந்தனை யைச் சுழல விட்டவர் சோக்ரட்டீஸ். சோக்ரட்டீஸின் இந்த மெய்யியல் அடித்தளத்துடன் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற வர்கள் மெய்யியலையும் அழகியலையும் புதிய பரிமாணங் களுடன் கட்டியெழுப்பினார்கள்.

பொதுமைகள் எனப்படும் கருத்தேற்றங்கள் மட்டுமே நிலைத்த உண்மைகள் என்றும், புலனுக்குட்படும் பொருள்கள் எவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைபேறுடையவை அல்ல என்றும் பிளேட்டோ கூறினார். இதனை மையப்படுத்தியே தனது அழகியல் கொள்கைகளை முன் வைத்தார். அதாவது, பிளேட்டோ 'பிரபஞ்ச சாரத்தின்' ஒளியாக அழகியலைப் பார்த்தார். எனவே, இவரது அழகியல் கருத்து முதல்வாத அமைப்பினைக் கொண்டிருந்தது.

ஆனால் இதற்கு எதிர்நிலையாக தனது சிந்தனைகளைச் சுழல விட்டவர் அரிஸ்டோட்டில். அரிஸ்டோட்டிலைப் பொறுத்தவரை 'பொதுமைகள்' என்பவை ஒரினப் பொருள்களுக்குத் தரப்படும் பொதுப் பெயர்கள். மனிதன், மலர், மரம் என்பன அவ்வினங்களைக் காட்டும் பொதுப் பெயர்கள்.

இவை வெறும் பெயர்களே தவிர, எந்தத் தனிப்பொருளையும் குறிக்கும் ஆற்றல் இச்சொற்களுக்கு இல்லை. பொதுமைகள் என்பன அகனியக் கருத்துக்கள். புற உலக உண்மை அவைகளுக்கில்லை. புலனுக்குட்படும் தனித் தனிப் பொருள்களே புற உலகில் இருப்பவை. ஒவ்வொரு தனிப்பட்ட பொருளும் உண்மையானதே. ஒவ்வொரு பொருளிலும் எல்லாவற்றுக்கும் பொதுவான தன்மை உண்டு. ஆனால், இப்பொதுத் தன்மை தானேயொரு தனிமமாகக் காணப்படுவதில்லை. தனிப்பட்ட பொருள்களில் புதையுண்டு கிடக்கிறது. இந்த மெய்யியல் கொள்கைக் கூடாகவே அரிஸ்டோட்டிலின் அழகியல் கொள்கைகள் தோன்றின.

## 2

அரிஸ்டோட்டில் 400 நூல்களை எழுதியதாகக் கூறப்படுகின்றது. இவற்றுள் மூன்றில் ஒரு பகுதி நூல்கள் அழிந்து விட்டன. அரிஸ்டோட்டிலின் நூல்களைப் பொதுவாக நான்கு பிரிவுகளாக வகைப்படுத்துவார்கள். அறிவியல், முறைகள், அளவையியல், அறிவறிவு இயல் போன்றவை தொடர்பான நூல்கள் எல்லாம் 'ஆர்கானன்' (Organon) என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. பௌதீகம், விண்வெளி, வளர்ச்சியும் அழிவும், இயற்கை வரலாறு, விலங்குகளின் கூறுகள், விலங்குகளின் வளர்ச்சி போன்ற அறிவியல் நூல்கள் ஒருவகை.

அழகியல் கலைகளான மொழி அணிகள், கவித்துவம் போன்ற நூல்கள் ஒருவகை. மெய்யியல் நூல்களான அறிவியல், அரசியல், புலன் கடந்த பொருளியல் போன்ற நூல்கள் ஒருவகை. இப்பட்டியல் ஏறத்தாளக் கால அடிப்படையில் பிரிக்கப்படுகிறது. அறிவு, அறிவியல், அழகியல், மெய்யியல் என்று படிப்படியாக ஏற்படும் அறிவு முதிர்ச்சியை இவருடைய படைப்புகளில் காணலாம்.

அரிஸ்டோட்டிலினுடைய கொள்கைக்கும் வலிமையான கவர்ச்சியின் காரணமானது முதன்மையாகவும் அழகியதன் புறவய அம்சங்களைத் தீர்மானிக்கும் அதன் முயற்சியிலேயே அடங்கியுள்ளது.

அரிஸ்டோட்டில் அழகின் சாராம்சத்தை பொருள்களின் ஏன் வாழ்க்கையின் சிறப்பான, ஸ்தூலமான, புலனுணர்வு ரீதியான பண்புகளில் ஆய்வு செய்தார். இசைவு, வடிவப் பொருத்தம், சில விதிகளைப் பின்பற்றுதல் ஆகியவை அழகுக்கு அடிப்படையானவை என்று அவர் கருதினார்.

அழகென்பது வடிவம், ஒழுங்கு ஆகியவை சம்பந்தப்பட்டது. ஆகவே, இது கீழ்கண்ட இரண்டு நிலைகளில் இருப்பது சாத்தியமில்லை. ஒன்று ஒரு மிகச் சிறிய ஜந்துவில் அழகு இருப்பது சாத்தியமில்லை. ஏனென்றால் அது திடீரென்று நம்மை நெருங்கும்போது நம் காட்சி தெளிவற்றதாகி விடுகின்றது. இரண்டு மிகப் பிரமாண்டமான உருவத்தில் அழகு இருப்பது சாத்தியமில்லை. உதாரணமாக, 1000 மைல் நீளமான ஒன்றில் முதல் உதாரணத்தைப் போல் இந்தப் பொருளையும் உடனடியாக முழுமையாகக் காணமுடியாது. அதாவது அதன் ஒருமையும் முழுமையும் பார்வையாளனால் உணர முடியாது.



அரிஸ்டோட்டிலின் கொள்கையானது வடிவப் பொருத்தத்துக்கு அது ஒரு விஷயத்தின் அழகியல் பண்பினுடைய அளவடிப்படை என்ற நிலையில் குறிப்பான முக்கியத்துவம் அளிக்கிறது. பொருள் மிகப் பெரியதாகவோ, மிகச் சிறியதாகவோ இருத்தல் கூடாது. வடிவப் பொருத்தம் என்பதின் அர்த்தம் இதுதான்.

அழகின் முதன்மையான பரிணமிப்புக்கள் ஒழுங்கிலும் வடிவப் பொருத்தத்திலும், துல்லியத்திலுமே காணக் கிடக்கின்றன. அரிஸ்டோட்டிலை எழுத வைத்தது இதுதான்.

## 3

அரிஸ்டோட்டில் கலைக்குரிய அறிவுத்தளத்தை காட்ட முனைகிறார். அழகியல் கருத்தென்பதன் விளக்கத்தில் பிளேட்டோ உடன் சிலவற்றில் அரிஸ்டோட்டில் உடன்படுகிறார். அதாவது பிரதிகள், போன்மைக்கலை இவற்றில் உடன்பட்டாலும் வேறுபட்ட விளக்கத்தையே கொடுக்கின்றார். பிளேட்டோ 'பிரதிகளின் பிரதி' என்று கூற அதற்கு அரிஸ்டோட்டில் உண்மையின் பிரதிகள் என்கிறார்.

கலைகள் மொழி, லயம், இசை என்பவற்றை வாயில்களாக் கொண்டு படைக்கப்படுகின்றன. போன்மை முறையில் கலையைப் படைப்பதுதான் கலைஞுனின் சிறப்பியல்பு. போன்மை கலைப் பற்றி அரிஸ்டோட்டிலின் கவிதையியல் ஆராய்கிறது. காப்பியக் கவிதை, அவலக் கவிதை, இன்பியல் ஆகிய கவிதை வகைகள் அனைத்தும் போன்மைப் படைப்புக்கள்தான். ஒரு படைப்பை அவன் போன்மை முறையில் செய்கிறானா இல்லையா? என்பதே கவிஞுனுக்கும் பிற அறிஞர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு.

கலைஞர் மானிட வாழ்க்கையைத் தான் போன்மை வழியில் படைக்கின்றனர். அவ்வாறு படைக்கும் போதே மக்களை நல்லவராகவும் தீயவராகவும் கலைஞர்கள் காட்டுகின்றனர். மக்களை படைத்துக் காட்டுவதில் உள்ள இந்த வேறுபாடுதான் அவல நாடகத்திற்கும் இன்பியல் நாடகத்திற்கும் இடையேயும் அமைந்துள்ளது. இன்பியல் நாடகம் வாழ்விற் காணும் மக்களினதும் தாழ்தோராகத் தன் பாத்திரங்களைப் படைத்துக் கொள்கிறது. அவல நாடகமோ வாழ்க்கையில் காண்போரிலும் உயர்ந்த இலட்சியம் உடையோராகத் தன் பாத்திரங்களைப் படைத்துக் காட்டுகிறது.

கவிதையின் தோற்றத்திற்குப் பொதுவாக போன்மைப் பண்பு, போன்மைப் பண்பால் விளையும் படைப்பு கண்டு மனித உள்ளத்தே தோன்றும் மகிழ்ச்சி ஆகிய இரண்டு வகைக் காரணங்களைக் கூறலாம். போன்மைப் பண்பு குழந்தை பருவம் முதலே தோன்றுகிறது.

மனித அறிவுக்கு தொடக்க வாயிலாக அமைவது இப்போன்மைப் பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். நேராகக் காணும் போது அருவருக்கத்தக்கவை கலையாக காணும் போது மகிழ்வை ஏற்படுத்துகிறது.

போன்மை படைப்பை கண்டு மகிழ்வதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. ஒரு பொருள் அதே மாதிரியாக அமைந்தால் அவற்றைக் காணும்போது ஏற்படும் மகிழ்ச்சி, கலை நுணுக்கத்தால் ஏற்படும் மகிழ்ச்சி.

மனிதனுடைய பண்புகளும் சிந்தனையும் கருத்தும் அவனுடைய செயலுக்கு அடிப்படையாக அமைகின்றன. எனவே இவ்விரண்டாலும் வெளிப்படுத்தும் மானிடச் செயலைத்தான் அவல நாடகம் நாடக மாந்தர்கள் மூலம் படைத்துக் காட்டுகின்றனர். பண்பு, சிந்தனை என்பன இரண்டின் அடிப்படையில் விளையும் நிகழ்ச்சிகளைக் காரண காரிய முறையில் தொகுத்து அமைப்பதுதான் அவல நாடகத்தின் கதைப்பின்னல்.

## 4

கவிதை பொருள் உணர்த்தும் உண்மைகள் உலகப் பொதுமையைத் தழுவியதாகவும் அமையும். கவிதை வரலாற்றிலும் மிக்க தத்துவார்த்தமும் அதனினதும் சிறந்த இன்றியமையாமையும் உடையது. கவிதை உண்மை உலகப் பொது உண்மையைத் தழுவியது. மானிட வாழக்கையில் நிகழும் செயல்களைப் போன்மை முறையில் படைத்துக் காட்டுவதால் கவிஞன் தன் கலையில் சிறப்படைகிறான். கவிதைக் கலையின் சிறப்பு போன்மை முறைப் படைப்பதாகும். மேற்கண்டவாறு கலை பற்றி அரிஸ்டோட்டிலின் கவிதையியல் விளக்கிச் செல்கின்றது.

கிரேக்க இலக்கியத்திற் காணப்படும் மெய்ப்பொருட் கோட்பாடுகள் அழகியலுக்கு அடிப்படையாக அமைந்தன. மகிழ்ச்சியை ஒரு பொருளில், எழுத்தில் அல்லது ஒலியில் சித்தரிப்பது கலைஞனின் குறிக்கோள் ஆகும். பொருள், மனிதன், நிகழ்ச்சிகள் போன்றவற்றை நுட்பமாக மெய் போல் படைப்பதே கலை ஆகும். இதில் பார்த்துச் செய்தலின் கூறுகள் இருந்த போதிலும் ஒரு பொதுவான முழுத் தத்துவம் இருத்தல் வேண்டும். இக்கருத்தையே அரிஸ்டோட்டில் வற்புறுத்தினார்.

அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி மனிதனே அழகின் அளவுகோல். அதாவது அளவடிப்படை. அதாவது மனிதன், பொருள்கள் பற்றிய அவனுடைய மதிப்பீடு, யதார்த்த உலகை அவன் புரிந்து கொள்கின்ற வாய்ப்புக்கள், இயல்புகள் ஆகியவைதான் அழகின் அளவுகோல். அரிஸ்டோட்டிலினுடைய அழகியலுக்கும், புராதன சமூகத்தில் கலையின் வளர்ச்சிக்கும் இடையிலான உயிரோட்டமான தொடர்பும் இன்றைய சூழலில் அதன் பொருத்தப்பாடும் இங்கேதான் வெளிப்படுகின்றது. புராதன கிரேக்கத்தின் ஜனநாயக பூர்வமான மனிதாபிமானம் மிக்க கலையானது, அழகின் அளவுகோல் மனதனே என்ற கருத்துக்குக் காரணமாக அமைந்திருப்பது முற்றிலும் இயல்பானதே.

பொருளியலான உலகில் இயல்பில் தான் அழகு அமைந்துள்ளது என்றும், அது வடிவப் பொருத்தம், இசைவு, வடிவ ஒப்புமை போன்ற ஸ்தூலமான பொருள்களுக்குரிய புறவயப் பண்புகளின் அடிப்படையில்தான் வெளிப்படுகின்றது என்று கூறும் அழகியல் பற்றிய அரிஸ்டோட்டிலின் கொள்கையானது அடிப்படையில் பொருள் முதல்வாதக் கொள்கை ஆகும்.



இந்தக் கொள்கையானது அழகியலாளர்களுக்கு மட்டுமல்ல, கலைஞர்களுக்குக் கூட கவர்ச்சிகரமான நிரூபனமாயிற்று. அழகியதற்கான புறவய அளவடிப்படையை அமைப்பதையும், அழகுக்குரிய சட்டங்களை உருவாக்குவதையும், விதிகளை அமைப்பதையும் சாத்தியமாயிற்று. இந்தச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு கலைப் படைப்பாக்கத்தில் ஒரு வழிக் காட்டுதலை வழங்கியது.

## 5

தொகுத்து நோக்கும்போது அரிஸ்டோட்டில் அழகைப் பொருள்களின் ஓர் இயல்பாகக் கண்டார். ஒப்பீடு, இட ஒழுங்கு, தாளம் போன்ற பொருள்களின் உருவ ரீதியிலான சில தன்மைகளில் தான் அழகியல் வெளிப்பாட்டைக் கண்டார்.

இக்கொள்கைகளை ஸ்பினோஸா, திதரோ, லெஸ்ஸிங், செர்னிஷேவ்ஸ்கி முதலானவர்கள் முன்னெடுத்துச் சென்றார்கள். கார்ல்மார்க்ஸ் அழகை பொருளுக்கும், அதை அனுபவிப்பவனுக்கும் இடையில் நிகழும் உறவாகக் கண்டார். ஆக, அரிஸ்டோட்டிலின் அழகியல் இன்றைய சூழலுக்கும் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டைவெளி நினைவுகளில்...

**- புலோலியூர் வேல்நந்தன**

வேர் பிடிங்கி
எறியப்பட்ட
வெட்டைவெளி
நினைவுகளில்
ஊர் அடங்கிப்
போனதன் பின்
உள்ளுக்குள்
அழுகிறது மனம்.
எப்படி இருந்தோம்
இப்படி நாம் வாழவில்லை
இன்று
எலும்புத் துண்டுக்கு
அலையும் நாய்களாய்
மீண்டும்
சந்ததி ஒன்றின்
மன்னிக்க முடியாக்
கேள்விக்கான
விடைகளின் காலமா இது
புரியவில்லை.


# அன்பு மதம் செய்வோம்

மதத்தின் பெயரால்
மதம்பிடித்தலைகின்ற
மனிதர்களே
வேண்டாம்
மதங்களை தகர்ப்பதாய் எண்ணி
அன்பு மனங்களைத்
தகர்க்காதீர்
மதங்களின் பெயரால்
மனிதரை வதையாதீர்
கடவுளின் பெயரால்
கண்டதும் செய்யாதீர்
உலகிற்கே இனி
ஒரே மதம் செய்வோம்
அன்பு மதமெனப்
பெயர் வைப்போம்
அயலவனையும்
நேசிப்போம்!



# எதிர்வினை

**மா**த இதழான மல்லிகை இரு மாத இதழாக மாறிவிட்டதோ என்ற ஐயத்தைக் கடந்த மாதம் வெளிவந்த ஜூலை - ஆகஸ்ட் இதழ் ஏற்படுத்தி விட்டது. இரு மாத இதழ்களையும் இணைத்து வெளியிடுவதற்கான காரணத்தை அச்சில் பதிப்பித்திருக்க வேண்டும். இவ்வாறே இதழின் விலையில் ஏற்பட்ட மாற்றத்தினையும் முன் கூட்டியே அறிவித்திருந்தால் வாசகர்களுக்கு சங்கடம் ஏற்பட்டிருக்காது.



கடந்த இதழில் சிங்கள - தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினால் கொடகே நிறுவனத்தின் அனு சரணையுடன் நடந்த மூவினப் படைப்பாளிகள் கௌரவிக்கப்பட்ட விழா தொடர்பான தகவல் கள் மகிழ்ச்சி அளித்த போதும், அத்தகைய முயற்சிகள் அத்தி பூத்தாற் போல் இல்லாமல் தொடர்ந்தும் இது ஒரு வேலைத் திட்டமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டால் தான் அச் செயலின் நோக்கம் பரவலாகும்.

ஸஹானாவின் 'ஸ்கூல் பாக்' சிறுகதை ஒரு மாணவனின் திறனை எடுத்துக் காட்டும் சந்தர்ப்பம் ஆசிரியர், பெற்றோரின் கவனக்குறைவால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டியது என்பதோடு இன்றைய நமது கல்வி முறையின் மீது ஒரு விசாரத்தையும் ஏற்படுத்தத் தூண்டியது.

மேமன்கவியின் 'ஒரு நூலும் ஒரு கவிதையும்' என்ற தலைப் பிலான ஆக்கத்தில் வெளிப்பட்ட விமர்சனப் போக்கான அலசல் முற்றிலும் புதியதொரு கோணத்தில் பார்க்கப்பட்டிருந்தது. ஆனாலும் சிலவேளை மேமன்கவியின் நடை கொண்டிருக்கும் இறுக்கம் சொல்ல வரும் விடயத்தை விளங்கிக்கொள்ளத் தடை யாக இருந்து விடுகிறது. ஆனாலும் தாரிக்கின் கவிதை உள்ள டக்கம் இன்றைய சூழலுக்குத் தேவையான ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 'ஆவணம்' என்ற தலைப்பின் கீழ் மல்லிகையின் முதலாவது இதழின் தலையங்கம் 46 வருடங்களின் பின்னரும், புதுமை இலக்கியத்தில் எஸ்.ராமகிருஸ்ணன் எழுதிய கட்டுரைக் குறிப்பும் 50 வருடங்களின் பின்னரும் வந்திருப்பது பிரமிக்க வைக்கிறது. இப்பகுதி தடைப்படாமல் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

**மாவனல்லை.** **எம்.எம்.மன்சூர்**



கடந்த நாற்பது வருடங்களாக நான் 'தாமரைச் செல்வி' என்ற புனை பெயரில் இலக்கியத்துறையில் ஈடுபட்டு வந்திருப்பதை தாங்கள் அறிவீர்கள்.

மல்லிகையின் மே இதழில் 'ஔவைக்கிழவியும் நாவற்பழங்களும்', ஜூன் இதழில் 'கடலோர மட்டிகள்' ஆகிய கவிதைகள் 'தாமரைச் செல்வி' என்ற பெயரில் வெளிவந்திருந்தன. இவை என்னால் எழுதப் படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பரந்தன்.** **தாமரைச் செல்வி**

மல்லிகை ஜூலை-ஆகஸ்ட் இதழ் கையில் கிடைத்தது. மல்லிகையின் அட்டைப்படத்தை கல்முனை பூபால் என்ற கவிஞர் நீலாபாலன் அவர்கள் அலங்கரிக்கிறார். எழுபதின் ஆரம்பத்தில் அவரை அறிந்து வைத்துள்ளேன். பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்றும் வானொலி கவியரங்கம் என்றும் அறியப்பட்டவர். மரபையும் புதுக்கவிதையையும் புரியவைத்து எழுதுபவர். இவரை தெரிந்திராத இளைய தலைமுறையினருக்கும் இன்னும் மறந்திருப்பவர்களுக்கும் ஞாபகப்படுத்துவதாகவும் தெரிகிறது. இதேபோன்று பல மூத்த படைப்பாளிகள் மறக்கப் பட்டுள்ளார்கள். அவர்களையும், மல்லிகையை ஆரம்பத்தில் கிராமங்கள் தோறும் அறிமுகம் செய்தவர்களையும் படத்தில் போடலாமே!



மல்லிகையில் புதியவர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். மல்லிகையின் சிறுகதையின் தெரிவுகளில் இன்னும் கவனம் செலுத்த வேண்டுமென எண்ணுகிறேன். கனதியான விடயங்களை எதிர்பார்க்கிறேன்.

**கொழும்பு 15.** **வதிரி.சி.ரவீந்திரன்**

கடந்த மல்லிகையில் வெளிவந்த சுட்ட பழம், சுடாத பழம் என்ற சிறுகதைத் தலைப்பு பழைய சொல்லாடலை நவீனமான முறையில் பயன்பட்டுள்ளது. கருவும் எதார்த்தமாக இருந்தது. ஆனாலும் சிறுகதையின் கட்டமைப்பில் தெளிவின்மை வெளிப்பட்டது.

**கொழும்பு.** **ப.ஆப்டீன்**



**சிறுகதை**

# ஒன்றும் ஒன்றும் மூன்று

**- பவானி சிவகுமாரன்**

இன்று மதியச் சமையலில்லை. அதனால் தாமதமாக எழுந்திருக்க முடிந்தது யாழினியால். யாழினியின் கணவன் கேசவன் அடிக்கடி வெளியூர் பயணிப்பது வழக்கம். அவனது வேலை அப்படி. அவ்வாறு அவன் செல்லும் பொழுதெல்லாம் சமையலில்லை. ஒரே மகள் யாழினி. அவளொத்த வயதுப் பிள்ளைகள் போல் மகிழினிக்கும் 'டேக் எவே' சாப்பாடுதான் பிடிக்கும். பின்னர் என்ன? பாடசாலை முடிந்து யாழினி மகளுடன் வீடு திரும்பும் போது 'டேக் எவே' உடன் வரும்.

அது அல்ல, இன்றைய பிரச்சனை. பாவம் மாமி. யாழினியின் மனம் மாமிக்காய் வருந்தியது. கேசவனின் அக்கா மரணப் ப்டுக்கையில் ஒரு வருடமாகப் போராடிக்கொண்டிருக்கிறாள். சேகவன் கடமை நிமித்தம் வெளியூர் பயணிக்கும் போது அப்படியே தன் அக்காவையும் பார்த்து வருவது வழக்கம். ஓரிரு நாட்களுக்கு முன் கேசவனின் மாமி யாழினியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"ஹலோ யாழினி! நான்தான் மாமி கதைக்கிறன. நிர்மலாவுக்கு இப்ப எப்பிடி இருக்கு?" நிர்மலா என்பது கேசவனின் அக்கா.

"ஹொஸ்பிட்டல்லதான் மாமி... ஹோப் இல்ல. டொக்டர்ஸ் கைவிட்டிட்டினம்."

"இங்க வந்து ட்ரீட்மென்ட் செய்ய யோசிக்கேல்லயா?" மாமி என்ன சொல்ல வருகின்றார் என்பது யாழினிக்குப் புரிந்தது.

ஒன்றுக்கு நாலு சகோதரம் கொழும்பில் இருந்தும், ஏன் நிர்மலாவை கொழும்பிற்கு அழைத்து வைத்தியம் செய்யவில்லை என்பதுதான் இப்படி மறைமுகமாக வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவையள் ஏனோ இங்க வர விரும் பேல்ல.”

“பாவம், என்ன பாவம் பண்ணிச்சோ? இப்பிடிக் கஷ்டப்படுது.”

“.......”

“எனக்குப் போய்ப் பார்க்க ஆசை. யார் கூட்டிக்கொண்டு போறது?... கேசவன் யாரும் ஊர்ப்பக்கம் போவினமா யாழினி?”

“அவர் நினைச்ச நேரம் ஒஃபிஸ் அலு வலா போவார். அப்ப அப்பிடியே அக்கா வையும் பார்த்திட்டு வருவார்?”

“ஏலுமெண்டால் என்னையும் கூட்டிக் கொண்டு போகச் சொல்றீரா?... கிட்டடியில கேசவன் போமா?”

“சரி மாமி... நான் சொல்லுறன். இந்த வீக்கெண்ட் போனாலும் போவார்.”

சென்று பார்க்க வேண்டும் என்னும் மாமியின் துடிப்பு இவளுக்குள் ஒரு பரி தாபத்தை ஏற்படுத்தியது. இப்பொழுதெல் லாம் அடிக்கடி மாமியிடமிருந்து அழைப்பு, வேண்டுகோள் வருகின்றது.

உண்மையில் நிர்மலாவின் நிலை கவலைக்கிடமானதுதான். குடலில் கான்சர் மாதக் கணக்கில் ஹொஸ்பிட்டல் வாசம். குடல் இடைநடுவில் வெட்டப்பட்டு, அத்துடன் இணைக்கப்பட்ட பையினூடே மலம் வெளியேறிக்கொண்டிருந்தது.

இடையில் கேசவன் ஒரிரு தடவை ஊர் போய்த் திரும்பினான். யாழினி, மாமியை அழைத்துச் செல்வது பற்றிப் பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் அவன் ஏனோ பிடி கொடுத்துப் பதில் சொல்ல வில்லை.

“நான் ஒஃபிஸ் ஸ்டாஃப்போட போறன். வெஹிகில் நிறைய மெசின்ஸ். வேலை முடியாட்டா அங்க தங்க வேண்டி வரும்.” இவ்வாறாக நிறையக் காரணங் கள் அவனுக்கு இருந்தன.

மறுநாள் அதிகாலை. மணி மூன்று நாற்பத்தைந்து. யாழினி சமைத்துக் கொண்டிருந்தாள். இரவு இட்லிக்கு அரைத்து வைத்தாயிற்று. இப்பொழுது மதியச் சமையலுக்கான ஆயத்தங்கள். கேசவன் இரவு ஊரிலிருந்து திரும்பிய போது மணி இரண்டு. நித்திரை குழம்பிய தில் கண்கள் எரிந்தன. கேசவனை உத் தேசித்து வானொலி ஈனஸ்வரத்தில் பாடிக் கொண்டிருந்தது. சிரமத்தைப் பாராமல் அதிகாலையில் எழுந்தால் டென்ஷன் ஆகாமல் ஆறுதலாகச் சமைக்கலாம் என் பது யாழினியின் வாதம். பாட்டுக் கேட்டுக் கொண்டு சமைப்பது வழக்கம்.

“சரியான சாமப் பேய்... பேயுலாவுற நேரத்தில எழும்பி சினிமாப் பாட்டு... ஒரு பக்திப் பாட்டு... இல்லாட்டா ஒரு கீர்த் தனை இப்பிடிக் கேட்டாத்தானே பிள்ளை ஒழுங்கா வளரும்.”

“பிள்ளை நித்திரையால எழும் பேக்கயே சினிமாப் பாட்டோட எழும்புது... இருபத்துநாலு மணித்தியாலமும் சினிமாப் பாட்டென்றால் 'பிள்ளையின்ர டேஸ்ட்டும் இப்பிடித்தான் போகும். இது கேசவன் தினமும் பாடும் பாட்டு.”

யாழினியைப் பொறுத்தவரை இயந் திர வாழ்க்கை என்பதை விடக் கடிகார வாழ்க்கை என்பதுதான் சரி. அதிகாலை மூன்று நாற்பத்தைந்திற்குத் திருப்பள்ளி யெழுச்சி. சமையல். பின் ஐந்து நாற்பத்



தைந்திற்கு கோப்பி. கோப்பி போட்டவுடன் கேசவனை எழுப்பி விட்டால், அவன் குடித்து முடித்த கையோடு, மகளை எழுப்பி அவளுடன் போராடிக் கோப்பி குடிக்க வைத்துத் தானும் குளித்து அவளையும் குளிக்க வைத்துப் பாட சாலைக்குத் தயாராக்கி விடுவான்.

“கோப்பி சுடுகுது வேண்டாம்.”

“இல்ல ஆறீட்டுது குடியுங்கோ.”

மகிழினி குடிக்க மறுப்பதன் மர்மம் இருவருக்கும் தெரியும். அரைகுறை நித்திரையில் இருக்கும்போது ஃபீடிங் போத்தல் வாயில் வைப்பது முன்னைய வழக்கம். நேரத்தை மிச்சப்படுத்த மேற் கொண்ட உத்தி அது. சென்ற முறை இங்கு அந்து தங்கியிருந்த யாழினியின் தாய் இதைக் கண்டு,

“ஆறு வயசாச்சு... இன்னும் என்ன ஃபீடிங் போத்தல்” என்று குறை சொன்ன தில் யாழினி அதை ஒளித்து வைத்து விட்டாள். மகிழினி 'சுடுகுது வேண்டாம்' என்று அடம் பிடிப்பது, அந்தப் போத்தல் பழக்கம் மறுபடியும் கிட்ட வேண்டும் என்பதற்காகத்தான்.

“அப்பா தாறன். கொஞ்சம் கொஞ்ச மாக் குடியுங்கோ.”

“வேண்டாமெண்டால் வேண்டாம்.” கேசவன் கெஞ்சுவதும், மகிழினி மிஞ்சு வதும் இங்கு சமையலறை வரை கேட்டது.

“அம்மா வந்தனெண்டால் அங்க, போடுவன் அடி.” சத்தம் சட்டென்று நின் றது. யாழினி சாந்தமானாள். பின்னர் குளி யலறை சிரிப்பும் பாட்டுமாக ஆர்ப்பரித்தது.

“மகிழீ, கெதியாக் குளிச்சிட்டு வரப் போறியா இல்லையா?”

“ஏன் சும்மா கத்துறீர். வருவாள் தானே?” கேசவன் பரிந்துகொண்டு வந்தான்.

“நீங்கதான் பழுதாக்கிறது. கெதியா வெளியில வாங்கோ ரெண்டு பேரும். விட்டா இண்டைக்கு முழுக்கக் குளிப் பாள்.”

எது எப்படியோ தண்ணீர்ப் போத்தல் கள், சாப்பாடு, ஸ்கூல் பாக், ஹான்ட் பாக் எனச் சகல சம்பத்துக்களுடனும் சரியாக ஏழு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டார் கள்.

ஒரு நிமிடம் தாமதிக்கக் கூடாது யாழினிக்கு. வார நாட்களில் கடிகார முள்ளுடன் போட்டி. வார இறுதியில்தான் தெரிந்தவர்கள், கோயில் என்று போய்வர முடிந்தது. அதுவும் இப்போது இயலாது போயிற்று. கேசவனின் அக்கா சுகவீன முற்றதிலிருந்து அவளைப் பார்ப்பதற்கு வெள்ளி இரவு ஊருக்குப் புறப்படும் அவன், திங்கள் அதிகாலைதான் வீடு திரும்பு வான்.

சமையல், சாப்பாடு, பாடசாலை, பிள்ளையின் வீட்டுப் பாடம், உடை கழுவு தல் என்று மாறுதலற்ற வாழ்க்கை. இதில் தற்பொழுது மேலதிகமாக தொலைபேசி அழைப்புகள். கேசவனின் அக்காவின் நோய் பற்றிய விசாரிப்புகள். இவ்விசாரிப்பு களில் அனுதாபத்தை விடச் சேதி கேட்கும் ஆவல் அதிகமாக இருப்பதாகப் படும். மிக அரிதாகக் கிட்டும் ஓய்வு நேரத்தை இவை ஆக்கிரமிப்பது அவளுக்குக் கஷ்டமாகத் தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், மாமியின் தொலைபேசி வேண்டுகோளை அவ்வாறு உதாசீனப் படுத்த முடியவில்லை. பாவம் வயது போனவ. பழகின பாசம். அதுதான் இந்தப் பரிதவிப்பு. கேசவனுக்கு இது விளங்காமலில்லை. அவனது நிலை அப்படி. மாமியை அழைத்துச் செல்வது பற்றி யோசிக்கவே முடியவில்லை.

அன்று சனிக்கிழமை. அடை மழை. அதனால் போக்குவரத்து சீர்குலைவு. கேசவன் ஊர் செல்ல முடியவில்லை. யாழினி சமைத்துக் கொண்டிருந்தாள். வானொலி பாடிக் கொண்டிருந்தது. இல்லை பேசிக் கொண்டிருந்தது. இலங்கை வானொலியின் ஏகாதிபத்தியம் போய், நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான் அலைவரிசை. காதலின் நிறம் என்ன? இதுதான் தலைப்பு. நிறத்தைச் சொல்லி அதற்கான காரணத்தையும் கூறவேண்டும். இளசுகள் முதல் பழசுகள் வரை பச்சை, நீலம், மஞ்சள் என்று சொல்லிக்கொண்டே போயினர்.

''அவரை நான் முதல்ல சந்திச்ச போது அவர் பச்சை சேர்ட் அணிந்திருந்தார். அதனால்தான் காதலின் நிறம் பச்சை என்றேன்.''

இவ்வாறாகப் பல காரணங்கள். சிரிப்பும், கிண்டலுமாக நிகழச்சி நகர்ந்து கொண்டிருந்தது. அறிவிப்பாளினியின் சிரிப்புத்தான் கூடுதலாக இருந்தது.

''காதலின் நிறம் கறுப்பு.''

''கறுப்பா? ஏன் அப்படிச் சொல்லுறீங்க?'' அறிவிப்பாளரின் குரலில் வாஞ்சை.

யாழினியின் கவனம் உன்னிப்பானது. கேசவன் உள்ளே வந்தான்.

''என்ன மீனா சமைக்கிறீர்?''

''....''

''சீரகம், மிளகோட, உள்ளி தட்டிப் போடும்... இண்டைக்கும் சொதியா? ... ரசம் வையும் ஒரு சேஞ்சுக்கு.''

''சொதி வைச்சாச்சு... இனி ரசம் வைக்க ஏலாது.''

''மீனுக்கு ரசம் நல்ல கொம்பினேஷன்... தெரியுமா? அம்மா அடிக்கடி செய்யிறவா.''

யாழினிக்கு காதலின் நிறம் கறுப்புக்கான காரணம் அறிய முடியாமல் போன கோபம்.

''எனக்கு இனி ஏலா.''

''சரி விடும். நான் ரசம் வைக்கிறன்.''

''சரி... சரி... நான் செய்யிறன். முதல்ல இங்க இருந்து போங்கோ. போய் டீவி பாருங்கோ. கழுதை செய்யிற வேலையை நாய் செய்யக் கூடாது.''

கேசவன் கோபமாய்த் திரும்பிப் போனான்.

என்ன காரணமாய் இருக்கும். சம்பந்தப்பட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் காதல் கலர்புல். அவனின்ர வருவாயை எதிர்பார்க்கிற தாய் தகப்பனுக்கு, சகோதரங்களுக்கு, அவன்ர கல்யாணத்தில வாற காசில தன் கல்யாணத்தை நினைக்கிற தங்கச்சிக்கு காதலின் நிறம் கறுப்புத்தான்.



நினைவோட்டத்தில் சமையல் முடிந்தது.

''சாப்பாடு ரெடி... சாப்பிட வாங்கோ. கேசவன் திரும்பவில்லை.

''பசிக்கேல்லயா?... மாமி நேற்றும் ஃபோன் பண்ணினவ. நீங்க கொஞ்சம் கூடக் கெயார் பண்ணுறேல்ல.''

''....''

''நான் கேக்கிறன்... என்ன பேசாமல் இருக்கிறீங்க... அப்பிடி என்ன கோவம் உங்களுக்கு?''

''உமக்கு ரசம் வைக்கச் சொன்னா கோவம் வருது. எனக்கு வரக்கூடாதா?''

''சமைக்க முதல் சொல்லியிருக்க வேணும். முடிஞ்சாப் பிறகா சொல்லுறது?''

ரசவாதம் தொடர்ந்தது. திசை மாறியது.

''நான் ஏலியா சமைச்சிட்டு ரெஸ்ட் எடுப்பம் எண்டு பார்த்தன். உங்களுக்கு இரக்கமில்ல. மாமி எத்தனை தரம் ஃபோன் பண்ணிட்டா. ஒருக்கா கூட்டிக் கொண்டு போனா என்ன?''

மகிழினி வந்தாள். ''அம்மா பசிக்குது.''

''வாங்கோ தீத்திறன்.''

''வேண்டாம். அப்பாஆ... தீத்தி விடுங்கோ...''

''மீனும் ரசமும் சாப்பிடுறீங்களா?''

''அப்பா! யாரும் மீனும் ரசமும் சாப்பிடுவினமா? மீனுக்குச் சொதிதான் நல்ல கொம்பினேஷன். அப்பாக்கு ஒன்டும் தெரியாது.'' யாழினி சிரித்தாள். கேசவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். முகத்தில் இருந்த இறுக்கம் நீங்குவது தெரிந்தது.

மறுநாள் சமையலுக்குத் தேவையான மரக்கறிகள் வெட்டி, தேங்காய்ப் பால் பிழிந்து ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டு, தொலைக்காட்சி முன் அமர்ந்தபோது தொலைபேசி அழைத்தது.

அது அனுஷா. கேசவனின் அண்ணன் மனைவி. நேரில் இல்லாவிட்டாலும் கூட, அடிக்கடி தொலைபேசியில் கதைத்துக் கொள்வார்கள். கேசவன் தரப்பு, அவர் தம் குடும்பத்தாரின் குறை, குற்றம், கெட்டது, கூடாதது, விரும்பத்தகாதது, உதவாதது பற்றி விவாதிப்பது, ஆராய்வது, பட்டியலிடுவது இப்படிப் பல அம்சங்கள் அதிலடங்கும்.

''ஹலோ... அனுஷா! மாமி நேற்றும் ஃபோன் பண்ணினவ.''

''கூட்டிக்கொண்டு போகச் சொல்லித் தானே நானும் இவரிட்ட சொன்னான். பாப்பம் எண்டு சொன்னார்.''

''அண்ணாட்ட கூட்டிக்கொண்டு போகச் சொல்லுங்கோ. பாவம்.''

வழமை போல் ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாமல் கதைத்த பின் தொலைபேசி வைக்கப்பட்டது.

நாட்கள் மாறுதலின்றி நகர்ந்தன. அலுப்பூட்டின. வேலைப் பளுவில் யாழினி மாமியை மறந்து போனாள்.

அன்றிரவு தொலைபேசி குறுக்கிட்டது. அனுஷாதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"… மாமி நிர்மலா அக்காவைப் பார்க்க ஆசைப்படுறா எண்டு சொன்னீங்க…"

"ஓ… பாவம். அண்ணா கூட்டிக் கொண்டு போறாரா?"

"… நான் நேற்று மாமிக்குப் ஃபோன் பண்ணினான். இவர் இண்டைக்குப் போறார். சேர்ந்து போங்கோ எண்டு சொன்னன்."

"…."

"தான் போயிட்டு வந்திட்டாவாம்."

"போயிட்டு வந்திட்டாவாமா?"

"கோயில் அபிஷேகத்திற்குப் போக அந்தரப்பட்டவாம். நல்ல வேளையா தெரிஞ்ச ஆட்கள் அகப்பட்டிச்சினமாம்."

"நிர்மலா அக்காவைப் பார்த்திருப்பா, என்ன?"

"கேட்டனான். ஆஸ்பத்திரி மூன்றாம் மாடியில வைச்சிருக்கிறாங்கள். எனக்கு ஆர்த்தரைட்டிஸ். அவ்வளவு உயரம் ஏற ஏலாது என்றா."

"அப்ப பார்க்கேல்ல."

அனுஷா சிரிப்பது கேட்டது.


## புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா 1000/- (ஆண்டு மலர் உட்பட)

தனிப்பிரதி - 50/-

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

சந்தாவை நேரடியாகவோ, காசோலையாகவோ செலுத்தலாம்.
வங்கித் தொடர்புகளுக்கு Dominic Jeeva - 072010004231,
Hatton National Bank, Sea Street, Colombo - 11
எனக் குறிப்பிடவும்.


காசோலையாக செலுத்துவதாயின் மேற்கூறிய வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்டு அதன் பற்றுச் சீட்டுப் பிரதியை மல்லிகைக்கு அனுப்பி வைக்கவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721
mallikaijeeva@yahoo.com




**ஞாபகக் குறிப்பு**



# நல்ல நண்பர்

**– க. சட்டநாதன**

**க**ரவெட்டி தந்த நல்ல மனிதர்களில், தம்பிப்பிள்ளை ஆனந்தமயில் முதன்மையானவர். கரவெட்டியில் பிறந்த போதும் அவரது வாழ்வு - வளமும் உரமும் பெற்றது பொலிகண்டியில்தான்.

ஒடிசலாய், வத வத என வளர்த்தி கண்ட அந்த மனிதர், இனிமை யானவர். அன்பையும் பரிவையும் இதமாய்ப் பகிர்ந்து கொள்ளும் இயல் பினர். நல்லவர்களைப் பற்றிக் கூறும்போது, அவர் தங்கப் பவுண் என்று கூறுவது நமது வழக்கம். அந்த வகையில், ஆனந்தமயில் அவர்கள் தங்கப்பவுண்தான்!

அமைதி பேணும் அவரிடம் போர்க்குணம் ஏதும் இல்லையா? என்று கேட்கலாம். இடதுசாரிக் கருத்துக்களில் தனது ஊறலைப் பெற்றுக்கொண்ட அவரிடம் போர்க்குணம் ஏதுமில்லாமல் இருக்க முடியுமா? வர்க்க முரண் பற்றிய அவரது அக்கறைகள், ஏழை எளிய மக்களின் பாலான அவரது மனச்சாய்வு, நலிந்தவர்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் அவரது முனைப்பு என்பன அவரின் மனக் கொதிப்பின் ஆர்ப்பாட்டமில்லாத வெளிப்பாடாகவே நான் கருதுகிறேன்.

இவற்றுடன், அகங்காரமேதும் இல்லாத அவரது பெருமை, புதியதை நாடும் விருப்பு, கருமம் சார் பற்றுதி, செய்வன திருந்தச் செய்யும் இயல்பு என்பன நாம் மனங்கொள்ளத்தக்க அவரது மேலதிகப் பண்பு களாகும்.

ஆனந்தமயில் 1947இல் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியைக் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும்; இடைநிலைக் கல்வியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வல்வெட்டி சிதம்பரக் கல்லூரி ஆகியவற்றிலும் கற்றார். ஏ.எல் வரை படித்த அவர் எழுது வினைஞர் பரீட்சையில் சித்தியடைந்து; 1960இல் மீன்பாடும் தேன் நாடான மட்டக்களப்பில் தனது அரச பணியை ஆரம்பித்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், கொழும்பு (பரீட்சைத் திணைக் களம்), அநுராதபுரம், நுவரெலியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பருத்தித் துறை, கரவெட்டி ஆகிய இடங்களில் கடமையாற்றினார்.

தமது வேலையில் முழு அக்கறை செலுத்தி, திருத்தமாகவும் செப்பமாகவும் தமது பணியினை நிறைவேற்றுவதற்கு உழைக்கும் கடமையுணர்வு மிக்க அலுவலராகத்தான் நான் அவரைக் கண்டேன்.

இது, அவரது கல்விப் பணிப்பாளராக, முல்லைத்தீவிலிருந்த கவிஞர் இ.முருகையனது கணிப்பு. இந்தக் கணிப்பு ஆனந்தமயில் அவர்களுக்கு அச்சொட்டாகப் பொருந்தி வருவது நாம் அறிந்த உண்மை.

இவர், 1972ஆம் ஆண்டு, தனது சொந்த மச்சாளான, நகுலேஸ்வரியை கரம் பிடித்தார். அந்த ஆதர்ச தம்பதிகளுக்கு எழுவர் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். ஆண்மக்கள் அறுவர். பெண்குழந்தை ஒருவர்.

பிள்ளைகளின் அன்பான தந்தையாகவும் அருந்துணையாகவும் வலுவான வழிகாட்டியாகவும் அவர் விளங்கியமையால்தான் அவரது பிள்ளைகள் கல்வி கேள்விகளில் சிறந்து, ஊர் மெச்ச வாழ்ந்து வருகிறார்கள்.

ஒரு சாதாரண எழுதுவினைஞனாக இருந்தோம், ஒய்வு நிலை பெற்றோம் என்றில்லாமல், சில ஆற்றல்களைத் தன் வசப்படுத்தி, வளர்த்துக் கொண்டவர் ஆனந்தமயில். அந்த வகையில், நல்லதை நாடி வாசிக்கும் சிறந்த வாசகனாகவும் ஆளுமை மிகு படைப்பாளியாகவும் அவர் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

இவர் கால்பதித்த ஆக்க இலக்கியத் துறைகளாகச் சிறுகதை, கவிதை, நாடகம் ஆகியவற்றைக் கூறலாம். ஓரளவு இளமையிலேயே எழுத ஆரம்பித்த இவர் 1972 தொடக்கம் 1998 வரை, ஏறக்குறைய 15 கதைகள் வரை எழுதியுள்ளார். கதைகள் வீரகேசரி வார வெளியீட்டிலும், மல்லிகை, சமர், அலை ஆகிய சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. இக்கதைகளில் 15 கதைகளைத் தேர்வு செய்து, **ஓர் எழுதுவினைஞனின் டயரி** எனும் தொகுதியாக வெளியிட்டுள்ளார்.

தொகுதியில் உள்ள கதைகள் யதார்த்தப் பிடிமானத்துடன் மனோரதியக் கனவுகள், கசிவுகள் ஏதுமில்லாமல் புனையப்பட்டுள்ளன. அத்துடன், இவற்றில் இயல்பான மொழி நடையும் மண்வாசனை கமழும் பேச்சு வழக்கும் மலிந்து காணப்படுகின்றன.

தொகுதியில் ஒற்றைக்கால் கோழி, முருகைகற் பூக்கள், காக்காச்சி கரிமகளே, திருவிழா, ஓர் எழுதுவினைஞனின் டயறி, ஒரு கட்டுமரம் காத்திருக்கிறது, கொலு மீட்பு என்பன நல்ல கதைகள். இலக்கியத் தரம் மிக்கவை.

பொதுவாக இவரது கதை மாந்தர்கள் எளிமையானவர்கள். வாழ்க்கையில் தோல்விகளை விரும்பாமல் எதிர்நீச்சல் போடுபவர்கள். மனித இருத்தல் பற்றிய நியாய அநியாயங்களைப் புரிந்து கொண்டவர்கள். வெற்றியையும் தோல்வியையும் சகஜ பாவத்துடன் ஏற்றுக்கொள்ளுபவர்கள்.

இவர், தமது கதையில் சொந்த அநுபவங்களை இயல்பு தப்பாமல் சிறைபிடித்து,



மெருகூட்டியதோடு - சமூகம், குடும்பம், தனிமனிதன் என்ற தளங்களில், மனித வாழ்வின் அழுத்தங்களையும், துயரங்களையும் அக உணர்வின் அதிர்வுகளையும் அழகாகப் பதிவு செய்துள்ளார்.

அத்துடன், இவரது கதைகளில் மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக நடைபெற்ற, உள்நாட்டு யுத்தத்தின் வலிகளும், காயங்களும் கூட - உள் இழையாக, மனதைச் சலனப்படுத்தும் வகையில் விரவிக் கிடக்கின்றன. இவற்றுக்கு மேலாக ஒற்றைக்கால் கோழி போன்ற கதைகளில் பயின்று வரும் எள்ளளோடு கூடிய நகைச்சுவை உணர்வு அண்மைக்காலப் படைப்புகளில் நாம் காணமுடியாத ஒன்றாகும்.

சிறுகதைகளை விட நல்ல சில கவிதைகளையும், சிறுவர் பாடல்களையும், எந்தையும் தாயும் என்ற குறுநாவலையும், வானொலி நாடகங்களையும் (எதற்குமோர் எல்லை உண்டு) இவர் எழுதியுள்ளார். இவரது இப்படைப்புகள் நூலுருப் பெற வேண்டும். நல்ல எழுத்தை நாடிப் படிப்பவர்களுக்கு இவை அதிகப் பயனையும் சுவையையும் தரும்.

ஆனந்தமயில் அவர்கள் தன்னை எப்பொழும் ஒரு எழுத்தாளனாக முன்னிலைப்படுத்தி - தனது பிம்பத்தை வளர்த்து கொள்ள முயற்சித்தவரல்ல. ஒரு சில சிறு கதைப் போட்டிகளில் கலந்து கொண்டு, அவர் பரிசில்கள் பெற்ற போதும், அவற்றின் பின்னால் ஓடியவரல்ல. அவரது சிறுகதைத் தொகுதியான ஓர் எழுதுவினைஞனின் டயறிக்கு - வடமாகாண அரசின் சாகித்திய விருதும் தமிழியல் விருதும் கிடைத்துள்ளன. இவை, அவரது தகுதி கருதி வழங்கப்பட்ட விருதுகளாகவே நாம் கருத வேண்டும்.

இந்த நல்லவரை நான் முதன் முதலில் சந்தித்தது 1970களில்தான். யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் நண்பர் குப்பிழான் ஐ.சண்முகன் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அந்த அறிமுகம் பின்னர், நட்பாக மலர்ச்சி கொண்டது.

அவர் எழுதியதனைத்தையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார் என்று கூற மாட்டேன். குறிப்பாக அவர் மொழி பெயர்த்த சில சிறுகதைகள் எனது பார்வைக்குக் கிடைத்தன. அவர் மொழி பெயர்த்த கதைகளில் சீன எழுத்துலக மேதை லூசுன் எழுதிய A Madman's Diary முக்கியமானது. அதை அவர் சீரிய முறையில் மொழிபெயர்த்திருந்தார்.

அவரது முருகைக்கற் பூக்கள் சிறுகதை - யாழ் இலக்கிய வட்ட வெள்ளி விழாப் பரிசுப் போட்டியில் பரிசு பெற்றிருந்தது. பரிசில் பெற வந்த ஆனந்தமயில், விழா முடிந்து புறப்பட்டபோது, நானும் அவருடன் சேர்ந்து கொண்டேன். திரும்பும் வழியில், எனது விருப்பத்தை அனுசரித்து எங்களது வீடுவரை வந்தார். அவரை உபசரித்த எனது மனைவி, அவருக்கு தேநீரும் கொழுக்கட்டையும் தந்தார். (அன்றைய தினம் ஆடிப்பிறப்பு) தேநீரை எடுத்துக்கொண்டவர், கொழுக்கட்டைகளை எடுக்கத் தயங்கினார். "எனக்குப் பாசிப் பயறு ஒத்துக்கொள்ளாது... வாய்வு" என்றார். பின்னர், எனது விருப்பத்தை மதித்து ஒரு கொழுக்கட்டையை மட்டும் எடுத்து உண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உடல்நிலை பற்றி மிகுந்த அக்கறை உள்ளவர் அவர் என்பதை அன்று அறிந்து கொண்டேன். அத்தகைய நண்பர் பற்றி ஒரு சில மாதங்களுக்குப் பின்னர், நான் அறிந்த தகவல் அதிக கவலை தருவதாக இருந்தது.

ஆனந்தமயில், அவரது இரண்டாவது மகன் சுகவீனமுற்று, மந்திகை ஆஸ்பத்திரியில் இருந்தபோது, அவருக்குத் துணையாக அங்கு இருந்தார். அப்பொழுதுதான் அவருக்கு அந்த அவலம் நேர்ந்தது. மகனது கட்டிலுக்குப் பக்கத்திலுள்ள கட்டிலில் ஆள் இல்லாததைக் கண்டு, அதில் ஏறிப் படுத்திருக்கிறார். நித்திரை அசதியில் உழன்றவர், கட்டிலில் இருந்து கீழே விழுந்து விடுகிறார். அப்பொழுது அவரது முள்ளந்தண்டில் பலமாக அடிபட்டு விடுகிறது. எதிர்பாராத அந்த விபத்து அவரை முற்று முழுதாக முடக்கி விடுகிறது. அவரது இடுப்புக்குக் கீழான பகுதி செயலிழந்து போன நிலை. பல வைத்தியர்களை அணுகிய போதும் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. மூன்று சில்லுச் சைக்கிள் வண்டிதான் அவரது இயக்கத்துக்குத் தஞ்சம் என்ற நிலை ஏற்பட்டது.

செய்தி அறிந்த நான் - பொலிகண்டியில் உள்ள - அவரது வீடுவரை சென்று அவரைப் பார்த்தேன். அவர் மிகுந்த மன உறுதியுடனும், தெம்புடனும் இருந்தார். அது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவரது நிலைமை பற்றிக் கவலைப்பட்ட என்னிடம் - தன்னைப் போலக் காயமடைந்த ஆங்கில நடிகர் ஒருவரைப் பற்றிக் கூறி, அந்த நடிகர் அவரது குறைபாடுகளில் இருந்து மீண்டுவர என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டார் என்பது பற்றியும் கூறினார். அத்துடன் அந்த நடிகன் செய்த பயிற்சிகளையே இப்பொழுது தானும் செய்வதாகவும் கூறினார். அந்த மகிழ்ச்சியும் பூரிப்பும் அவரைப் பொறுத்த வரை நிலையானதாக இருக்க வேண்டும் என அவ்வேளை நான் நினைத்துக் கொண்டேன்.

அவர் நோயுடன் இருந்த காலத்தில், மூன்று வருஷம் வரை கரவெட்டி கல்விக் கந்தோரில் பணிபுரிந்துள்ளார். அந்தக் காலகட்டத்தில்கூட அவரது படைப்பு முயற்சிகள் தடைப்படவில்லை. அக்காலத்தில்தான் காக்காச்சி கரிமகளே, கொலு மீட்பு, கலைவந்த போது போன்ற தரமான கதைகளை அவர் எழுதினார். அவரது அந்த அர்ப்பணிப்பும் மன ஓர்மமும் வியக்கத்தக்க ஒன்றாகவே எனக்கு இப்பொழுதும் தோன்றுகிறது.

அவர் காலமாவதற்கு ஒரு சில வருடங்களுக்கு முன்னதாக மிகுந்த மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்தார் என்பது எனக்குத் தெரியும். யாராவது நண்பர்கள் அவரைப் பார்க்க வரும்போது, முகம் பார்த்துப் பேசாது மிகுந்த கடுகடுப்பைக் கொட்டினார் என்பதையும் நான் அறிவேன்.

நல்ல படைப்புகள் சிலவற்றை உருவாக்கிய இந்த ஆளுமையின் இழப்பு, தமிழ்மொழி செய்த பாவம் என்றே எனது மனது அரற்றுகிறது. அவரது பெயர் நல்ல வாசகர்கள், நல்ல எழுத்தாள நண்பர்கள் இருக்கும்வரை நிலைத்து நிற்கும் என நாம் நம்பலாம்.



**கவிதை**

# இடைவெளிகள்

**– எஸ்.மதி**

நிழல்களின் ராத்திரிகளில்
நான் மட்டும் தனியே
மாட்டிக்கொள்ளும் போதுதான்
வெறுமையாய் தெரிகிறது எல்லாம்

நவீனத்தோடு ஒன்றாய்
ஒட்டி நின்றாலும்
மனசு மட்டும் தனித்துநின்று
ஏதோ ஒன்றை எதிர்பார்த்து
முரண்பட்டுக் கொள்கிறது

எப்போதோ ஒரு நாள் மட்டும்
கிராமத்து வாழ்க்கை முறையை
காணும் போது
எதையோ இழந்துவிட்டோம்
என்பது மட்டும்
நச்சென்று உச்சியில் உறைக்கிறது

கார்பெற் வீதிகளில்
வழுக்கிக்கொண்டு வேகமாய்
ஓடினாலும்
மரங்கள் குடைபிடிக்கும்
ஒற்றையடி பாதையில்
சைக்கிளில் சீட்டை அடித்தபடி
போவோரை பார்க்கும் போது
சின்னதாய் பொறாமை
அவர்கள் மீது எழத்தான் செய்கிறது

கூட்டுக்கு ஆர்பாட்டமாய் வரும்
பறவைகள் போல
எப்போதோ ஒருதடவை மட்டும்
சொந்தக் கூட்டில் ஒன்றாகும்
உறவுகளை பார்க்கும் போதுதான்
நான் அநாதையில்லை என்று
உணர முடிகிறது

மழைக்காய் ஒதுங்கும்போது
சிறுவர்களின் சந்தோசக் கூக்குரல்
இடையிடையே எழும் மண்வாசம்
சோ என்ற மழையின்
குதூகலக் கூக்குரல்
எதை எதையோ
ஞாபகபடுத்துகிறது

என்னதான் மாறினாலும்
யன்னலோர வேப்பம்காற்றுக்கும்
ஒற்றையடி பாதையில்
கைகோர்த்து நடக்கவும்
காவோலை சரசரப்பை கேக்கவும்
மண்சட்டி பானையில்
சமைத்ததை சாப்பிடவும்
ஏங்கத்தான் முடிகிறது
தனிமையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுமண்வெளி அருள்செல்வநாயகம் நினைவு சிறுகதைப் போட்டி - 2012



படைப்பாளர் குறுமண்வெளி அமரர் அருள் செல்வநாயகம் அவர்களின் நினைவாக சிறுகதைப் போட்டி நடாத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ள படைப்பாளர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

| | | |
|---|---|---|
| **முதல் பரிசு** | : | ரூபா. 10,000.00 |
| **இரண்டாம் பரிசு** | : | ரூபா 5.000.00 |
| **மூன்றாம் பரிசு** | : | ரூபா 3000.00 |

**நிபந்தனைகள்** :

1. சிறுகதைகள் A 4 அளவுள்ள தாளில் எட்டுப் பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. போட்டிக்காக அனுப்பப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் வேறு நாள், மாத இதழ்களிலோ நூல்களிலோ இடம்பெறவில்லை என்கிற உறுதிமொழியுடன் அனுப்படுதல் வேண்டும்.

3. இன்றைய சமூக வாழ்வைப் பிரதிபலிக்கும் சிறுகதைகளாக இருக்க வேண்டும்.

4. ஒரு படைப்பாளர் ஒரு சிறுகதை மட்டுமே அனுப்ப வேண்டும்.

5. படைப்பாளரின் பெயர், முகவரி,தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்ற விபரங்கள் தனித்தாளில் எழுதி இணைக்கப்பட வேண்டும்.

படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதி திகதி 15. 10. 2012 ஆகும். பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி-

**குறுமண்வெளி அருள்செல்வநாயகம்**
**நினைவு சிறுகதைப் போட்டி - 2012**
**73/1/1, Church Road,**
**Mattakuliya,**
**Colombo-15.**



**இரசனைக் குறிப்பு**




# சுமதி குகதாசனின் 'தளிர்களின் சுமைகள'

**- மா.பாலசிங்கம்**

**த**மிழ்க் கவிதை இலக்கியத்தில் சிறகசைக்க வந்துள்ள சுமதி குகதாசனின் **'தளிர்களின் சுமைகள்!'** நவீன கவிதைகளின் தொகுப்பு நூலை, இலங்கை முற் போக்குக் கலை, இலக்கிய மன்றம் அதன் 25ஆவது நூலாக வெளிக்கொணர்ந்துள்ளது. தமிழ்க் கவிதை அபிமானிகளுக்கு நூலொன்றின் மூலமாகவே முதன் முதல் அறிமுகமாகும் சாதனையாளராகச் சுமதி குகதாசன் அசத்தியிருப்பது கவனத்துக்குரியதாகும்! இக்கவிஞை உரத்த அறிமுகத்தை இதுவரை தமிழ்ச் சூழலில் பெறாதிருந் தாலும், இவரது தந்தையார் மானுட நேசன் கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன், தடம்புரளாத ஒரு தீவிர மார்க்சியவாதியாக வாழ்ந்து வரலாறு படைத்திருப்பதை இன்றும் கொம்யூனிசிய வட்டாரம் பொச்சடித்துப் பேசுகின்றது.

தந்தை வழிவந்த மார்க்சிய சிந்தனை அணைப்புகள் - ஆழ்ந்த சமூக அக்கறை, சீரிய மானுட நேசம், சகலருக்கும் சமநீதி ஆகியவற்றின் வேர்களில் துளிர் கொண்டு, சுமதி சுகதாசனின் கவிதைகளில் விரவிக் கிடப்பதைத் **'தளிர்களின் சுமைகள்'** தொகுப்பை வாசித்த பின் அவதானிக்க முடிந்தது. நவீன கவிதை வடிவிலமைந்த நாற்பத்தியிரண்டு கவிதைகள் இக்கையடக்கமான அழகிய தொகுப்பில் பதிவாகியுள்ளன.

சில கவிதைகளின் கருத்துத் தெறிப்பை விளக்கும் ஓவியங்களை ஆர்.சி.பிரதீப் குமார் வரைந்துள்ளார்.

சுமதி குகதாசன் ஆசிரியையாகத் தொழில் புரிவதால், அவர் நாளாந்தம் தரிசிக்கும் கல்விப்புலமும் அவரது கவிதைகளின் பாடுபொருளாகியுள்ளது. ஒருவரது வாழ்வை உருவாக்கும் பருவம் மாணவம். அப்பருவத்தில், இன்றைய மாணவ மணிகள் சுமக்கும் துன்பச் சுமைகளை அனுபவ ரீதியாகக் கவிதையில் பகிர்ந்துள்ளார். வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணிப் படிகளாக வேண்டிய பாடசாலைகள் இன்றைய மாணவரின் பள்ளிச் சிறைகளாக மடை மாறி இருப்பதை ஓங்கி ஒலித்துள்ளார்.

எமக்கென அருளப்பட்ட இத்தாய்த் திருநாட்டிலுள்ள கல்விப்புலம் இன்று படும்பாட்டை, அதன் சீரழிவுகளை நாளாந்தம் நாம் மிகத் தெளிவாக அறிந்து வரும் இந்நேரத்தில், அக்கல்விக்காகக் கரமேந்தும் எமது இளந்தளிர்கள் எதிர் கொள்ளும் உபத்திரவங்கள் எத்தனை கோடி? பெருஞ்சுமையாகவல்லவா அவர்களை நெரித்துக் களைக்க வைக்கின்றன! பள்ளி செல்கையில் புத்தகச் சுமை, வகுப்பில் பாடச் சுமை, ஆசிரியர்கள் கொடுக்கும் தண்டனைகளின் சுமைகள், சகமாணவர்கள் கொடுக்கும் ஏக்கச் சுமைகள் - இவைகளின் பதியத்தில் எழும் உள்ளக் காயச் சுமைகள், பிரத்தியேக வகுப்புகளின் சுமை, பெற்றோரின் எதிர்பார்ப்புச் சுமைகள், இவைகளின் கனதியோடுதான் எமது எதிர் காலச் சிற்பிகளின் பொழுதுகள் விடிகின்றதென 'தளிர்களின் சுமைகள்' கவிதை அறைகூவல் செய்கிறது. இதனூடாக வாசகனின் கவனம் எமது மாணவமணிகள் மீது அனுதாபத்தோடு குவிகின்றது. இக்கவிதையின் தலைப்பே நூலின் தலைப்புமாகி, சமகாலக் கல்விப் புலம் அடையாளம் காட்டப்படுகிறது.

குற்றமிழைத்த மாணவருக்குத் தண்டனையாக முழங்காலில் இருக்க வைத்தல், வகுப்பாசிரியர்களால் சர்வ சாதாரணமாகக் கொடுக்கப்படும் தண்டனையென்பது பாடசாலைக் கல்வியைப் பெற்ற அனைவரதும் அநுபவ அறிகையாகும். இதனாற்லேற்படும் கேட்டை ஏழைகளோடு பொருத்திப் பார்க்கின்றது கவிதை ஒன்று. ஏழைகளின் உழைப்புக்கான ஒரே மூலதனம் அவர்களது உடல்தான்! இப்படி முழங்காலில் இருத்தல் மூலமாக மாணவனின் உடல் பாதிப்புறுமென்பதை இக்கவிதை நாசுக்காக கல்விப் புலத்துக்கு அறிவுறுத்துகின்றது.

சிறிதேனும் மார்க்சியம் பூசினால் தான், மனிதன் மனச்சாட்சி பேசுகின்ற மாண்புறு பண்பாளனாவானென - பூலோக சொர்க்கம் என விதந்துரைக்கப்படும் மார்க்சியத்தை - நூலாசிரியை சிலாகித்துள்ளார். மார்க்சியர்கள், மாவோயிஸவாதிகளை மனித வரலாற்றினின்று மறைத்திட முடியுமா? எனவும் நிமிர்கிறார். தாம் சிவப்பு மனிதர்கள் - மார்க்ஸியர்களென, இன்று எம்முன் வலம் வரும் செஞ்சட்டைத் தோழர்களைப் பார்த்து முரண் நகை கொள்கிறார். சீரான மார்க்சியப் பாதையை மாற்றி இத்தகையோர் பாராளுமன்றக் கதிரைகளுக்குத் தாவ எத்தனிப்பதைக் கால மாற்றத்தாலா? முதுமையின் கோலத்தாலா? என நுண்ணாய்வுக்குட்படுத்துகிறார். மற்றவர்களின் விடியலுக்காய் வாழாவிடினும், அவர்களைச் சுரண்டாதிருப்பேனாக என, அறைகூவல் செய்ய இந்தப் பாராளுமன்றக் கதிரை நேசர்களை அழைக்கிறார். இப்படியாகச் சுமதி குகதாசன் தன்னில் விதைக்கப்பட்டிருக்கும் மார்க்சியச் செழிப்பை மிகத் துலாம்பரமாக வாசகனுக்குக கடத்துகிறார். ஆனாலும், வட இலங்கையைச் சேர்ந்தவராக இருந்தும், மார்க்சியம் மறுக்கும் சாதி குறித்த ஒரு வார்த்தையைக் கூட நூலில் காட்டாதது பஞ்சம இலக்கியவாதிகளுக்கு நெருடலை ஏற்படுத்தும்! ஆனால், மார்க்சியம் கட்டுடைப்புச் செய்ய முயலும் வர்க்க பேதத்தைப் பச்சை மண்ணுக்கும் சுட்ட மண்ணுக்கும் ஒப்பிட்டு வர்க்கச் சமநிலை ஏற்படாதென்ற யதார்த்தத்தை



வெளிக்கொணர்ந்துள்ளார். இக்கருத்து நிலை மார்க்சியத்துக்குத் தொய்வை ஏற்படுத்தத்தக்கது! அதேநிலைதான் சாதி பேதத்துக்குமென ஆற்றுப்பட்டு அதைக் கண்டுகொள்ளாது விட்டார் போலும்! தொகுப்பில் 'யதார்த்தம்' கவிதையைச் சேர்க்காது தவிர்த்திருக்கலாம்!

சாதாரண மக்கள் படித்த பட்டதாரிகளிடம் சரணடையும் போக்கை எள்ளல் செய்து, பட்டதாரிகள் மணி கட்டின மாடுகளுக்கு ஒப்பிடப்படுகின்றனர். அனைத்து மக்களையும் மணிகட்டும்படி ஏவி, மற்றுமொரு படி மேற்சென்று பட்டதாரிகள் மதிப்பிறக்கப்படுகின்றனர். இது இன்றைய வாழ்க்கைக் கோலமென்பதில் தப்பாகாது! சாதாரண மனிதர்கள் பொன்மொழிகளைச் சிந்தினாலும் அவைகளைப் பித்தளை மொழிகளாக உதாசீனப்படுத்தும் குருட்டு உலகத்தில் தானே நாம் இன்று வாழ்கிறோம்! இலங்கையில் இன்று வாரத்துக்கிரு தமிழ் நூலாவது வெளியிடப்படுகிறது! இந்நூலாசிரியர்களும் - சாதாரண மக்கள் மத்தியிலும் மேதைகள் உண்டென்பதைக் கண்டுகொள்ளாது - இந்த மேதைகள் தற்போதைய மேடைகளில் நூலை நான் முற்றாக வாசிக்கவில்லை. சும்மா தட்டித் தான் பார்த்தேன் எனக் கூறித் தமது ஆய்வுகளைச் செய்வதைக் கேட்டிருந்தும், தொடர்ந்தும் நூல்களை ஆய்வு செய்வதுக்குப் பட்டதாரிகளைத் தேடல் செய்யும் போக்கையும் இந்நூல் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது. இத்தகைய கருத்து நிலையை அடைவதுக்கு எமது குடியரசின் அரசியல் சாசனத்தையும் நூலாசிரியர் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இச்சாசனத்தின் மூலவர்களான பட்டதாரிகளைத் தேடல் செய்வது வாசகருக்குரியதே!

இன்றைய உலக மயமாதலில் சுருங்கிப் போகாது விஸ்வரூபம் எடுத்து நிற்கும் ஆன்மீகம் பற்றியும் நூலில் பேசப்பட்டுள்ளது. கோயில் ஐயர்மாரின் நடவடிக்கைகளிலொன்று விசாரணைக்குட்படுத்தப்படுகிறது. ஐஸ்வரியம் கொண்டவர்களை ஐயரவர் ஓடியழைத்து, மூலஸ்தான முன்றலில் நிறுத்துகிறார்! இது அவர்களது முத்திக்கா? அல்லது இவரது (ஐயரது) விருத்திக்கா? என உரத்த வினாவொன்று வாசகனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பக்தரின் இலட்சணத்தை எடுத்துரைக்கையில், ஆயிரம் ஆட்கொலைகள் அலுங்காமல் செய்துவிட்டு, அன்னதானம் வைக்கிறான் என அற்புதமான நெற்றியடி கொடுக்கப்படுகிறது. அடிக்கடி ஆலய தரிசனம் செய்து வருபவர்கள் இதை நிச்சயம் ஒரு மார்க்சியவாதியின் கருத்தெனப் புறந்தள்ள மாட்டார்கள்! இது யதார்த்தமானதே!

சந்ததி மாறிட, சிந்தையும் மாறுது, ஆயினும் நன்மைகள் சேர்ந்திட முந்தையது விடாததேனோ? என நூலாசிரியை விழிப்பது, முதல் கோணல் முற்றும் கோணல். இது முடிந்து போன முடிவல்ல. மூன்று தசாப்தம் ஆயினும் முண்டியடித்து முன்னேறுவோம் என்பதுக்கு தடை வேண்டாம் என்பதுக்காகவா?

ஆக, 'தளிர்களின் சுமைகள்' என்ற நூலில் வாசித்துப் பெற்றவைகள் இவ்வெழுத்துருவில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. இதன் ஒவ்வொரு கவிதையும் தமிழ் வாழ்வைக் கொழித்துப் பார்க்கின்றது. கொம்யூனிஸ்ட் கார்த்திகேசனுக்கு இன்றும் நாடளாவிய ரீதியில் வாரிசுப் பட்டாளமொன்றுண்டு. அவரால் புடம் போட்ட வாரிசொன்று அவரது இல்லத்துக்குள்ளும் இருந்திருப்பதை இத்தொகுப்பின் மூலமாக அவரது அன்பு மகள் கவிஞை சுமதி குகதாசன் நிறுவுகிறார். அவருக்கு வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்



# அன்புடீன்

**சந்தித்தவர் : ஜெஸ்மி.எம்.மூஸா**

**கேள்வி : உங்களது இயற்பெயர் 'கலந்தர்லெப்பை' என்றிருக்க 'அன்புடீன்' என்ற பெயருக்கான காரணம் என்ன?**

**பதில் :** எனக்கு 'முகைடீன்' என்று இன்னுமொரு பெயர் இருக்கிறது. என்னுடைய பேனா நண்பி ஒருத்தி முகைடீனில் வரும் 'முகை'யை எடுத்துவிட்டு அந்த இடத்தில் 'அன்பு'வைப் புகுத்தி 'அன்புடீன்' என்று விழித்து அஞ்சல் எழுதினார். அதனையே நான் எனக்குரிய எழுத்துலகப் பெயராக இட்டு வைத்துக்கொண்டேன்.

**கேள்வி : உங்களின் எழுத்துலகப் பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?**

**பதில் :** படிக்கின்ற காலத்தில் பாடசாலையில் நடந்த ஒரு கலை விழாவில் மேடையேற்றப்பட்ட நாடகமொன்றில் நடிப்ப தற்கு எனக்கு முக்கிய பாத்திரம் தரப்பட்டது. நாடக வசனங்கள் மனனம் செய்யப் பட்டு ஒத்திகை பார்க்கும்போது வசனங்களை ஒழுங்காக உச்சரிக்க முடியாமல் நான் திக்கு முக்காடினேன். காரணம்? அப்போது எனக் குள்ளிருந்த திக்கு வாய். அதன் காரணமாக நாடகத்தில் எனக்கிருந்த முக்கிய பாத்திரத்தைத் தவிர்த்து, நீதிமன்றத்தில் காவல் நிற்கும் போலிஸ்காரன் வேடம் வழங்கப்பட்டது.

இச்சம்பவம் என்னை மிகவும் பாதித்திருந்தது. அதைப் புரிந்து கொண்ட ஆசிரியர் என்னை ஒருநாள் தனிமையில் அழைத்து, திக்குவாயிலிருந்து மீள்வதற்கான ஆலோசனைகளைச் சொல்லி வழிகாட்டினார்.



''நிறைய புத்தகங்களை வாசிக்க வேண்டும். இலக்கண ரீதியான கவிதைகளை சப்தம் போட்டு படிக்க வேண்டும். கதைகளை, நாவல் களை வாசிக்க வேண்டும். 'கடலோரம் அலை உருளுது, புரளுது' போன்ற வசனங்களை உச்சரிக்க வேண்டும்'' என்றவாறு இருந்தது ஆசிரியரது ஆலோசனை.

'தினகரன்' பத்திரிகையில் அ.ந.கந்தசாமியின் 'மனக்கண்' நாவல் பிரசுரமாகி வந்த காலமது. அப்போது எங்களூரில் (பாலமுனை) பத்திரிகை முகவர்களோ, நூலகங்களோ இருக்கவில்லை. ஒரே யொரு சலூன் கடை. அங்கே மாத்திரம்தான் மூன்று மைல்களுக்கப் பாலிருந்து பத்திரிகை தருவிக்கப்படும். அந்த சலூன் கடைதான் எங்களில் கணிசமானவர்களுக்கு வாசிகசாலை.

அங்கேதான் எனக்கு 'மனக்கண்' நாவலை வாசிக்கும் தேவை யும் அவசியமும் ஏற்பட்டது. நான் சப்தம் போட்டு வாசிப்பதற்கு எனக்கு அந்தக் கடைக்கார சீனித்தம்பி அண்ணனின் ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும் இருந்தது. அவர் மூலம்தான் எனக்கு நாவல்கள் வாசிக்கும் பழக்கமும் ஏற்பட்டது. நான் முதன்முதலில் வாசித்தது டீ.பி.சாமியின் துப்பறியும் நாவல்கள்தான். அதன் பிறகு பலதையும் பத்தையும் வாசிக்கும் பயிற்சியில் கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான் என்றொரு நிலைமை என்னை அறியாமலேயே எனக்குள் உருவாகிவிட்டது.

பாடசாலைக் காலத்தை முடித்துக்கொண்ட நான் பாட சாலையை விட்டு வெளியே வந்ததும் முதற் செய்த காரியம் நண்பர் களைக் கூட்டி 'முற்போக்கு கலாமன்றம்' என்ற பெயரில் மன்றம் ஒன்றை நிறுவி நாடகங்களை நானே எழுதி நடித்து இயக்கமாக்கி மேடையேற்றியதுதான்.

அப்போதுதான் மன்னாரிலிருந்து வெளிவந்த 'குயிலோசை' சஞ்சிகையில் 'குயிலே நீ கூவு' என்ற எனது முதற் கவிதையும், கண்டியிருந்து வெளிவந்த 'செய்தி' வாரப் பத்திரிகையில் 'ஓலம்' என்ற எனது இரண்டாவது கவிதையும் வெளிவந்தது. மூன்றாவது கவிதை 'தினபதி' பத்திரிகையில் 'தினபதி கவிதா மண்டலம்' எனும் பகுதியில் பிரசுரமானது. எஸ்.ரி.சிவநாயகம் அவர்களது அந்த இளங் கவிஞர் ஊக்குவிப்புத் திட்டம்தான் பின்னர் என் போன்ற பலரை இலக்கிய உலகுக்குள் இழுத்துவிடும் உந்துசக்தியாக அமைந்தது.

**கேள்வி : பொதுவாக தமிழ் கவிதையில் உங்களைக் கவர்ந்த கவிஞர்கள் பற்றி...**

**பதில் :** ஆசிரியர் மூலம் எனக்கு முதன் முதலில் வாசிக்கக் கிடைத்தது 'பாரதியார் கவிதைகள்'தான். அதற்குப் பிறகுதான் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசனைத் தேடி வாசித்தேன். கவிதா விசாலத்தில் என்னைக் கவர்ந்த கவிஞன் சுப்பிரமணிய பாரதிதான். கால நகர்வில் நீலா வணனின் கவிதைகள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. மகாகவியின் 'புள்ளியளவில் ஒரு பூச்சி' என்னைப் பாதித்தது. புரட்சிக் கமாலின் 'புரட்சி', அண்ணலின் 'காதல்', காசி ஆனந்தனின் 'உணர்ச்சி', சுபத்திரனின் 'எழுச்சி', சில்லையூரானின் வானொலி மேடைக் கவியரங்குகள் தந்த மகிழ்ச்சி, இவை போக என்னை பின்னர் மிகவும் ஆகர்சித்த இரட்டைக் கவிஞர்கள் எம்.ஏ.நுஃமானும், சண்முகம் சிவலிங்கமும்தான். வானம்பாடிகளை நான் விரும்பி வாசித்ததுண்டு. அப்துல் ரகுமானின் 'இருண்மை'க்குள் இடறி விழுந்ததும் உண்டு. இங்கிலாப்பும், நஸ்றுல் இஸ்லாமும், அல்லாமா இக்பாலும், உமர் கையாமும் எனக்குள் இல்லாமலும் இல்லை. என்னிடமிருந்த மாஓ.சே.துங் கவிதைகளை யாருக்கோ இரவல் கொடுத்துவிட்டு வருந்திக்கொண்டிருக்கிறேன், நான்.

**கேள்வி : இலங்கையில் புதுக்கவிதையில் பரிணாமம் பற்றி என்ன சொல்வீர்கள்?**

**பதில்** : தமிழில் புதுக்கவிதையின் முன்னோடி பாரதியா? பிச்ச மூர்த்தியா? என்று கேட்டால் பாரதிதான் என்று அடித்துச் சொல்லு வேன், நான்.

சங்க காலத்தில் காவியங்கள், புராணங்கள் முதலான யாப்பு நெறி சார்ந்த செய்யுள் வடிவங்களிலிருந்து விடுபட்டு, உருவத்திலும், உள்ளடக்கத்திலும் சுப்பிரமணிய பாரதியால் புகுத்தப்பட்ட புதுமை தான் பரிணாமம் பெற்று இன்று புதுக்கவிதைகளாக அல்லது கட்டற்ற கவிதைகளாக, வசன கவிதைகளாகப் பூத்துக் குலுங்குகின்றன என்பதுதான் யதார்த்தம்.

இலக்கிய வாசகர்களோடு சாதாரண வாசகர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் யாப்பு நெறியிலிருந்து கட்டறுத்துக்கொண்டு நவீன கவிதைகள் பிரசவமானது.

அத்தகு நவீன கவிதையை இலகுபடுத்தி, படித்தவர்களுக்கும், பண்டிதர்களுக்கும்தான் கவிதை உரித்தானது என்ற நிலையை மாற்றி, அதைப் பாமர மக்களுக்கும் சொந்தமாக்கிய கவிஞர்கள் வரிசையில் 'வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ...' என்று பாடிய விபுலானந்தரில் தொடங்கி, அதற்குப் பிறகு மகாகவி, நீலாவணன், முருகையன், சில்லையூர் செல்வராசன் என்று தொடர்ந்து மு.பொன்னம்பலம், எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், தா.இராமலிங்கம் என்று படர்ந்து, அ.யேசுராசா, சிவசேகரம், ஜெய பாலன், சேரன், சோ.பத்மநாதன் என்று கிளை பரப்பி நிற்கின்றது.



அவ்வாறு வளர்ந்து வந்த நவீன கவிதை வடிவத்தை மேலும் வளர்த்தெடுத்து புதிய வடிவமாக்கி, இலேசுபடுத்தித் தந்த பெருமை எம்மில் பலருக்கு இருக்கிறது.

'சரி சரி இனியென்ன...' என்று முருகையன் போன்ற மர பாளர்கள் அங்கீகாரம் வழங்கியதற்குப் பிறகு, இலங்கையில் புதுக் கவிதை கொடி கட்டியது. இங்கு முதல் முதல் புதுக்கவிதைக்குப் புத்தகம் வெளியிட்ட பெருமை திக்குவல்லை கமாலுக்குரியது. அவரைத் தொடர்ந்து புதுக்கவிதைக்கு நூல் தந்தவர் அன்பு ஜவஹர்ஷா. (மு.மேத்தாவைப் பாராட்டி ஜவஹர்ஷா எழுதிய கடித மொன்று மேத்தாவின் கவிதை நூலொன்றில் வாசித்த ஞாபகம் வருகிறது) அதேபோல் புதுக்கவிதைக்கு அரச அங்கீகாரம் பெற்றுத் தந்தவர் மேமன்கவி. முதன் முதலில் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற புதுக்கவிதை நூல் மேமன்கவியின் 'நாளைய நோக்கிய இன்றில்...'

மேமன்கவி போன்றவர்களிடமிருந்து புதுக்கவிதையை வேறொரு மாற்று வழிக்குக் கொண்டு வந்தவர் சோலைக்கிளி. இப்போது அவரிடமிருந்து அதை விலக்கி இன்னுமொரு பரிணாமத்திற்கும், பரிமானத்திற்கும் கொண்டுவந்த அற்புதமான கவிதைக்காரர்கள் ரஷ்மி, அனார் இவர்களோடு, கல்லூரன், பெண்ணியா, றியாஸ், குரானா, ஆகர்ஷியா, ஜெமில், விஜிலி, ஜெயசங்கர், தயாளன், சுதாகர், அறபாத், ஔவை, முஸ்றிபா, பஹீமா, அலரி, பைசால், மஜீத், சௌபி, நழீம், அஸ்மின் போன்ற இன்னும் பலர் புதுக் கவிதையைப் பட்டை தீட்டி புதுக்க விதைத்து வருவதை அவ தானிக்க முடிகிறது.

**கேள்வி : இலக்கியம் என்பது வரையறைகளைத் தாண்டியது. கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும் சரணடையாதது என்பது எமது கருத்து. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்** : இலக்கியம் யாருக்காக? என்ற தலைப்பில் நாமொரு கருத்தரங்கை நடத்தினோம். 1972ஆம் ஆண்டு பாலமுனை பூஞ் சோலை எழுத்தாளர் மன்றம் இவ்வரங்கை நடத்தியது. அவ்வரங்கில் 'சமூக வளர்ச்சியில் இலக்கியத்தின் பங்கு' என்ற தலைப்பில் கருத்து வழங்கிய சுபைர் இளங்கீரன் சொன்னார், "இலக்கியம் மக்களுக்காக காலத்தின் தேவைகளை உணர்ந்து, இலக்கியப் படைப்புகள் படைக்கப்பட வேண்டும். எரியும் பிரச்சினைகளை எடுத்தோதும் கருக்களாக இலக்கியம் படைக்கப்பட வேண்டும். மக்களிடம் படித்து, பின்னர் அதை இலக்கியமாக்கி படிப்பினையாக மக்களுக்குப் படிக்கக் கொடுப்பதுதான் ஒரு நல்ல இலக்கியத்தின் பாடம்" என்று சொன்னார். எல்லைகள் இல்லாத வானம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்ல இலக்கியம். அதற்கும் ஒரு இலக்கும் இலட்சியமும் இருக்கிறது. கோட்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இலக்கியம் சரணடைவதில்லை. அவைகள்தான் இலக்கியத்திற்கு சரணடைய வேண்டும். 'ஒரு போராளியின் போர் வாளை விட ஒரு எழுத்தாளனின் பேனா முனை கூர்மையானது' என்று சொல்லுவதும் இதைத்தான்.

**கேள்வி : கவிதைத்துறையில் தடம்பதித்த உங்கள் அதிர்வு சிறுகதைக்குள்ளும் விரல்விட்டது. இதற்குக் காரணம்?**

**பதில்** : என்னுடைய 'முகங்கள்' கவிதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதிய அ.ஸ.அப்துஸ்ஸமது ஓரிடத்தில் சொல்கிறார், 'அன்புடீனது ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு சிறுகதைக்குரிய கருக்களாக இருப்பதால் கவிதைகள் வாசிப்பதற்கு மிகச் சுவையாக இருக்கின்றன. நாடகமொன்றில் பாத்திரங்கள் உலவுவது போல பாத்திரங்கள் உயிர் பெற்று உலாவுகின்றன' என்று. இளங்கீரன் 'ஜனவேகம்' பத்திரிகை நடத்திய காலத்தில் பிரசுரத்துக்காக நான் கவிதைகளை அனுப்பினேன். அப்போது இளங்கீரன் எனக்கொரு கடிதம் அனுப்பினார். 'உங்கள் கவிதை கருக்களெல்லாம் நல்ல கதைக்குரிய கருக்களாக இருக்கின்றன. ஏன் நீங்கள் சிறுகதை எழுதக்கூடாது' என்று கேட்டு என்னை உற்சாகப்படுத்தியிருக்கிறார். இந்த இருவரினதும் தூண்டுதல்தான் என்னை கதை எழுதத் தூண்டியது. அதன் பின்னர்தான் நீங்கள் சொல்வது போல் என் கவனம் கதைகளின் பக்கம் விரல் விட்டது.

**கேள்வி : வாய்ப்பாடுகளை மனனம் இடுகின்ற பல்கலைக் கழகக்காரர்களைப் போலல்லாது, இளையவர்களையும் தூக்கி விடும் உங்களைப் போன்றவர்கள் ஒரு சிலரே இலக்கியத்தளத்தில் உள்ளனர் என்பது எமது கருத்து. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம்...**

**பதில்** : நீங்கள் குறிப்பிட்டுச் சொல்பவர்களுள் ஒரு சிலர் அப்படித்தான் படி தாண்டா பத்தினிகளாக இருக்கின்றனர். அவர்கள் விரதம் பூண்டிருக்கின்றார்கள். திறபடாத விரதம். திரும்பத் திரும்ப அவர்கள் வாசிப்பதெல்லாம் ஒன்றைத்தான். அந்த ஒன்றுக்கு மேலே அவர்கள் வாசிக்க முயல்வதில்லை. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பார்கள். அந்தக் கஞ்சியை மீண்டும் மீண்டும் சூடுகாட்டி பருகுவதுதான் அவர்களது பணியாக இருந்து வருகிறது.

இன்னும் தமது இரண்டாவது படைப்பை எழுதாத சிலரது பெயர்களைத்தான் 'பிஸ்மி'லுக்குப் பதிலாகச் சொல்லி ஆரம்பிப்பது அவர்களுக்கு பழக்கமாகப் போய்விட்டது. ஆர்.எம்.நௌசாத்தின்



'நட்டுமை' நாவலையும், விமல் குழந்தை வேலின் 'கசகரணம்' நாவலையும் நான் ஏற்கனவே குறிப்பிட்ட ரஷ்மி, அனார் குழுவினரையும் அவர்கள் எப்போதுதான் உரத்துப் பேசப் போகின்றார்களோ தெரியவில்லை.

**கேள்வி : சமூகமும் சமூக அங்கீகாரமும் இல்லாத எழுத்துக்காரர்கள் பலர் வெளித்தீத்தல் காரர்களாக வலம் வருகின்றனர். இவர்கள் பற்றி...**

**பதில்** : அண்மையில் 'பிரபலம்' கண்ட ஒரு எழுத்தாளரைச் சந்திப்பதற்கு அவரது ஊருக்குப் போனேன். அவர் வாழும் தெருவில் நின்று அவரது பெயரைச் சொல்லி பலரிடம் விசாரித்தும் அவரைப் பற்றி அவரது தெருவிலேயே எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவரது தொழிலைச் சொல்லி இன்னாரென்று சொன்னதற்குப் பிறகுதான் ஒரு பத்தாவது ஆளுக்குப் பிறகு பதினோராவது ஆள் அடையாளத்தைக் காட்டி விட்டார். அவரது 'பிரபலம்' சமூக அங்கீகாரம் அப்படித்தான் இருந்தது. பேனாவும் எழுத்தும் காகிதமும்தான் அவரது உலகம். எல்லா வகைகளிலும் சமூகத்தோடு ஒன்றி வாழும் ஜனரஞ்சகங்களை அவர்களைப் போன்றவர்கள் ஒதுக்குவதும். ஓரங்கட்டுவதும் அந்த சமூக அங்கீகாரம் இல்லாததால்தான் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**கேள்வி : இறுதியாக ஒரு கேள்வி. இளைய தலைமுறையினருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

**பதில்** : அவர்களுக்கு யாரும் எதுவும் சொல்லத் தேவையில்லை. அவர்களை அவர்களது பாட்டில் விடுவதுதான் சரியானது. அப்துல் கலாம் சொன்னது போல 'உன்னால் முடியும் தம்பி' என்று நாமும் ஆசீர்வதிப்போம்.



## அநுவை நாகராஜன் மறைவு

நீண்டகாலமாக ஈழத்துக் கலை இலக்கியத்துறையில் பணியாற்றிய அநுவை நாகராஜன் அவர்கள் அண்மையில் காலமானார். சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற இவர் கவிதை, கட்டுரை, நாடகம் போன்ற துறைகளில் கணிசமான பங்களிப்புகளைச் செய்துள்ளார். குறிப்பாகச் சிறுவர் இலக்கியத்துறையில் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

இவரின் மறைவுக்கு மல்லிகை தனது அஞ்சலியைச் செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# எழுத்தாளனின் கடப்பாடு

## – சில குறிப்புகள்

**– பாலா சிவாகரன்**

"கலை கலைக்காகவே" என்ற மரபு மாறி கலையும் இலக்கியமும் மக்களுக்காகவே என்ற சித்தாந்த நிலைப்பாட்டில் கலை இலக்கியங்கள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், மக்களின் உள்ளக் குமுறல் களை, மனவெழுச்சிகளை வெளியுலகிற்கு எடுத்தியம்பும் போதுதான், அவ்விலக்கியம் அர்த்தமுள்ளதாகின்றது. முற்போக்கு யதார்த்தவாதத்திற்கு நகர்ந்து செல்லப்படும் எனலாம். இதனை நினைவுறுத்தும் வகையில் எழுத்தாளனின் வகிபாகம் என்ன? எழுத்தாளன் என்பவன் எழுத்து உலகில் எவ்வாறான தளத்தினை நோக்கி பிரவேசிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டிய தேவை அடிப்படையாகும்.

எழுத்தாளன் தனது சமகால மனிதனின் அகவாழ்வைச் சுருக்கத்துடனும் சரியான செயன்முறைகளுடன் ஊடுருவிப் பார்க்கின்ற பார்வையுடனும் வெளிப்படுத்த வேண்டும். ரஷ்ய எழுத்தாளர் மார்க்சியம் கோர்க்கி தொழில் முறைப் பத்திரிகைத்துறை என்ற கடினமான பயிற்சிப் பள்ளியின் வழியாக வந்தவர் இந்தக் கடினமான உழைப்பு, தைரியமாக, வீரியமான எழுத்து அவரின் வாழ்க்கையை திடம்பட வைத்தது.

ஒரு எழுத்தாளன் ஏதாவது ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையில் மட்டு மல்லாது, ஒவ்வொரு இலக்கிய வகையிலிருந்தும் தன்னுடைய கலைத் திறனைக் கற்றுக்கொள்ள வேண்டும். தான் தெளிவின்றி எழுதுதல் கூடாது என்று இப்போதே நிரந்தரமாகப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எழுத்தாளனது கடமை அல்லது நம்பிக்கை தொடர்பில் செக்கோல் என்ற ஆய்வாளனின் சிந்தனையைப் பார்க்குமிடத்து,

"ஒரு ஆசிரியருக்கென பிரத்தியேக நடை இல்லையேல், அவர் ஒருபோதும் எழுத்தாளராக ஆகமாட்டார். ஆனால் அவருக்கென ஒரு நடை, அவருடைய மொழி என்று ஒன்று இருந்தால், எழுத்தாளரென்ற முறையில் அவர் மேல் நம்பிக்கை வைக்கலாம். பின்னர், 'அவரது படைப்பின் மற்ற அம்சங்கள் பற்றி ஒருவர் விவாதிக்கலாம்" என்று குறிப்பிடுகின்றார்.



உண்மையில் பாரதியிடம் காணப் பட்ட சொல்லாட்சி போற்றுதற்குரியது. 'எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம்' என்ற கொள்கை உடைய பாரதியின் கவிதையில் சொற்கள் தானாக வந்து விழுந்தன.

கலை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது, சோதி மிக்க நல் கவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை என்பது பாரதியின் வாக்கு. இது அவர் எடுத்துக்கொண்ட சபதம். உள்ளத்திலே நேர்மையும் தைரியமுமிருந் தால், கை தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால், வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும். வாலைப்பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது.

எனவே எழுத்தாளன் தான் கை யாண்ட நேர்த்தியில், எடுத்துக்கொண்ட தளத்தில் அதாவது இலக்கியம் படைப்ப தற்குரிய ஒரே வழி அதனை படைப்பதற் கென எடுத்துக்கொள்ளும் இடையறாத முயற்சியில்தான் இருக்கிறது. ஒருவரிட மிருந்து அனைத்தையும் ஆட்கொள்ளக் கூடியதும், தனக்கென அனைத்தையும் ஈர்த்துக் கொள்ளக் கூடியதுமான இலக்கி யத்தை வாழ்க்கைப் பணியெனக் கொண்ட எழுத்தாளனது வேலை பற்றி, அவனது சொற்கள் பற்றி, நடை பற்றிய நித்திய உழைப்பின் சுக துக்கங்கள், சொற்கள் மீதான நேசம் வேதனை தரக் கூடிய ஒன்றே. ஆனால் இந்த வேதனை அவனால் ஒருபோதும், நொந்து கொள் ளப்படுவதில்லை. வால்டேர், ரூசோ போன்ற சுதந்திரச் சிந்தனையாளர்களின் நூல்கள்தான் மகத்தான பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டன. கார்ல்மார்க்சும், பிரெடெக் எங்கெல்சும் உருவாக்கிய சின்னஞ்சிறு அக்கினிக் குஞ்சென கம்யூ னிஸ்ட் கட்சி அறிக்கைதான் உலகைக் குலுக்கிய ரஷ்யப் புரட்சிக்கும், மவோ தலைமையிலான சீன புரட்சிக்கும் அடிப் படைத் தூண்டுதலாக அமைந்தது. மேலும் 1819ஆம் ஆண்டு பிரிட்டிஸ் இரா ணுவத்தை எதிர்கொண்ட மான்செஸ்டர் தொழிலாளர்களை பெர்சி - ஷெல்லி என்ற கவிஞன் இவ்வாறாக போற்றிப் பாடிய கவிதை அவர்களைப் போராட்ட யுகத்திற்கு எடுத்துச் செல்கின்றது.

**துயில் களைந்தெழும் சிங்கம் போல**
**வெல்லப்பட முடியா ஆற்றலுடன்**
**எழுக, வெகுண்டெழுக!**
**உறங்குகையில் படிந்த பனித்துகளை**
**புழுதி மண்ணில் உதறி எறிவது போல்**
**எறிக உமதடிமைத் தளைகளை!**
**நீங்களோ பலர்**
**அவர்களோ சிலர், மிகச் சிலர்** என

எடுத்தியம்புகின்றார்.

டால்ஸ்டாய், ரஸ்கின் போன்ற மேதைகளின் நூல்களால் உத்வேகம் பெற்ற காந்தியடிகளின் தலைமையில் தான் இந்திய நாடு பிரிட்டிஸ் ஏகாதிபத்தி யத்தின் அடிமைத்தளைகளை அகற்றிக் கொண்டது. ஜேம்ஸ் ஆலனின் மனித னின் எண்ணங்கள், நெப்போலியன் ஹிட் லரின் வெற்றியின் விதிகள் போன்ற மகத் தான நூல்கள், அமெரிக்காவின் வலிமை மிக்க சுயமுன்னேற்ற இயக்கத்திற்கும், அமெரிக்காவின் உலக சாதனைகளுக் கும் வேராக அமைந்திருப்பதை எவரும் மறுக்க இயலாது.

எனவே எழுத்தாளன் என்பவன் சிருடி கர்த்தா. எழுத்தாளனுக்கு, தனது தொழிலில் தேர்ச்சி பெறுவது என்பது மனத்தை அலைக்கழிக்கும் விசயமாக இருத்தல் கூடாது. ஆனால் அதுதான் ஒரு படைப்பை உருவாக்குவதற்கு அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்குரிய ஒரே வழியாகும். தவிரவும் எழுத்தாளனது கடமை, மோசமான படைப்பைப் பற்றிய வீணாண அலட்சியம் அல்ல. அத்தகைய போக்கை எதிர்த்துப் போராடுவதேயாகும்.

ஒரு எழுத்தாளனின் மனதில் நின்று நிலைத்திருக்கின்ற ஒரு விடயம் புனை கதையோ அல்லது இலக்கிய ஆய்வுகளோ அமையலாம். ஆனால் எழுத்தாளனின் உள்ளத்தில் என்றோ ஒரு சம்பவம் அவன் மனத்தில் நிலைத்து இருக்கின்ற போது, அது எழுத்தாளனின் மூலாதார தன்மையை பதிய வைக்கின்றது. இதனை டால்ட்டோயின் நீதிபதியின் மரணம், மாக்சியம் கோர்கின் மனிதன் பிறந்தான், ஸ்டெஃபான் ஸ்வைக்யின் அறியாத பெண்ணின் அஞ்சல் (ஜெர்மல் நாவல்) Letter from unknown women இந்த நாவலில் எழுத்தாளர் பயன்படுத்தியிருக்கும் உத்தி, இதில் கடிதம் எழுதும் அந்த இளம் பெண்ணையும், எழுத்தாளர்களையும் நம்மால் எவ்வளவு வருடங்களானாலும் மறக்க முடியாது. இந்த விடயம் தான் எழுத்தாளனின் மனதில் இருக்க வேண்டும்.

சுதந்திரமான, சுயாதீனமான ஒரு சூழலில்தான் மானுடத்தின் ஆற்றல்கள், திறமைகள், சிருஸ்டித் திறன்கள் முழுமை யாக மலர முடியும். மானுடத்திற்குப் பொதுவான இந்த நியதி ஆத்மாவின் என் ஜீனியர்களான எழுத்தாளர்களுக்கு, இலக்கிய படைப்பாளிகளுக்கு, சிந்தனையாளர்களுக்கு மிக மிக முக்கியமானதாகும் என பிரேம்ஜ் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மார்க்சியம் கோர்க்கியின் சிறுகதைகளில் வாசகன் பற்றிய சிறுகதையில் எழுத்தாளன் யார்? கடப்பாடு என்ன என்பது பற்றி வாசகன் ஒரு எழுத்தாளனுக்கு கூறும் விதமாக தத்ரூபமாக விரிவாக்கம் செய்துள்ளார்.

''மனிதன் தன்னைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவனுக்கு உதவுவதே இலக்கியத்தின் நோக்கம் என்று நான் சொன்னால் நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். தன்மீது அவன் கொண்டிருக்கும் நம்பிக்கையை மேம்படுத்துவதும், உண்மையைத் தேடுவதில் அவனுக்கு இருக்கும் ஆர்வத்தை வளர்த்து எடுப்பதும், மக்களிடம் இருக்கும் கீழ்த்தரமான, தரம் தாழ்ந்த விடயங்களுக்கு எதிராகப் போராடச் செய்வதும், நல்ல விடயங்களைக் கொண்டு வருவதும், மனித இதயங்களில் வெட்க உணர்வு, கோபம், தைரியம் ஆகியவற்றை உண்டாகச் செய்வதும், மனிதர்களை பலம் கொண்டவர்களாக ஆக்குவதற்கான அனைத்து வேலைகளையும் செய்வதும், புனிதமான அழகுணர்ச்சியுடன் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு உதவி புரிவதும் எழுத்தாளனின் உண்மைத் தன்மை காணப்படுகின்றது.''

''இந்த நிலையில் மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறுமிடத்து ''எழுத்தாளன் தான் வாழ்ந்த சூழலிலும் பார்க்க மக்களுக்கு, சமூகத்திற்குத் தன் எழுத்தை கொடுக்க வேண்டும். அதன் பயனை அவர்களே தருவார்கள்'' என்று கூறு நினைவுறுத்தத் தக்கதாகும்.

மேலும் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் எழுத்தாளன் பற்றி குறிப்பிடுமிடத்து, ''உண்மை நிலைக்குப் புறம் போகாமல் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தனது கதையில் அமைப்பவனே சிறந்த எழுத்தாளன்'' என எழுத்தாளன் பண்பு, இயல்பு பற்றி குறிப்பிடுகின்றார். இத்தகைய யதார்த்த நிலையில் எழுத்தாளனின் கடப்பாடு தங்கியுள்ளது என்பதில் இருநிலைப்பட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.



# இறைவன் சிரிக்கிறார் - சிரிப்பு 7

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

இறைவனிடம் நான் கேட்க விரும்பிய மற்றொரு வினாவை இன்று அவரிடம் கேட்டு விட்டேன்.

''இறைவா நீ எங்கிருக்கிறாய்?''

அவரிடமிருந்து ஓர் உன்னதமான சிரிப்புப் பெருக்கெடுக்கிறது.

''எனக்கு எத்தனையோ பெயர்களைக் கூறினாலும் எல்லா மதங்களும் என்னைப் பற்றிய சில கருத்துக்களை ஒரே மாதிரிக் கூறுகின்றன. அதில் ஒன்று இறைவன் எங்கும் எதிலும் இருக்கிறான் என்பதாகும். எனவே உனது இந்தக் கேள்விக்கு நான் பதில் கூறவேண்டியதில்லை. நீயே முன்பு அறிந்ததுதான். மறந்து விட்டாயா?''

சிரிப்போடு சேர்ந்து இவ்வாறு பதிலிறுத்த இறைவன் ஓரிரு நிமிட மௌனத்தின் பின் நீ மட்டுமல்ல, எல்லோரும் மறந்துதான் போய் விட்டார்கள் என்றவாறே ஓரிடத்தில் பார்வையைப் பதிய விடுகிறார்.

எனது சந்தேகங்களுக்கான விளக்கத்தை அவர் இப்படித்தான் உணர்த்துவார் என்பது இப்போது தெரிந்ததொரு விடயமாகி விட்டதே. எனவே அவரது பார்வை படர்ந்திருந்த இடத்தை நானும் பார்க்கத் தொடங்குகிறேன்.

அங்கே ஒரு வழிபாட்டிடத்தில் மக்கள் கூடி நின்று வழிபாடாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வணங்கிக்கொண்டிருந்த சிலையில் இறைவன்!

இங்கல்லவா இருந்தார்!

திரும்பிப் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அதேயிடத்திலும் இருக்கிறார்!

வழிபட்டு முடிந்ததும் அனைவரும் கலைந்து செல்கின்றனர்.

உலகு இருட் திரையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறது. கௌவிய இருளைக் கிழித்து விட்டு அச்சிலையை மிளிர வைப்பதற்காய் இரு மின் விளக்குகள். இருள் மறைவு தேடி மெல்ல நான்கைந்து பேர் சிலையை நோக்கி நகர்கிறார்கள்.

ஏன் வருகிறார்கள்?

இரவிரவாய்ப் பூசை செய்வதற்கோ? அல்லது ஏதாவது யாகம்...?

*சீச்சீ...* அதற்காய் வருபவர்கள் ஏன் இப்படி இருளில் மறைந்து வரவேண்டும்?

இறைவனைச் சேவிக்க வருபவர்கள் ஒளியை நோக்கி வருபவர்கள். இருளை நாடமாட்டார்கள்.

ஆ... அவர்கள் சிலையை அண்மித்து விட்டார்கள். கைகளில் மலர்களோ, பூசைப் பொருட்களோ இல்லை.

கடப்பாரை, அலவாங்குகள்! இவற்றுடன் ஏன் வருகிறார்கள்?

கடவுளே, அந்தச் சிலையை உடைத்து, பெயர்த்து...

இறைவனின் கண்களில் பரிதாபம் பொழிகிறது.

அந்த இடத்தில் மற்றொரு சிலையை அவர்கள் அவசர அவசரமாக ஸ்தாபிக்கிறார்கள். அந்த இருளை விரும்பும் இருண்ட மனங்கொண்டோர் கிழக்கு வெளுக்குமுன் அகன்று விடுகிறார்கள்.

விடிந்ததும் மற்றொரு கூட்ட மக்களின் வழிபாடு அங்கே இடம்பெறுகிறது.

பக்தியுடன் பணிவோரை நாடி இறைவன் செல்கிறான். இந்தச் சிலையிலும் அவனேதான்.

நேரம் கரைகிறது.

திடீரென்றோர் ஆரவாரம்.

உடைத்தெடுக்கப்பட்ட சிலையைத் தேடிக் கூச்சலுடன் வந்தவர்கள் உணர்ச்சி அதீதமாகி தறிகெட்டோராய்ச் செயற்பட ஆரம்பிக்கின்றனர். அன்பெனும் ஈரப்பதன் அவர்களுள் வற்றி வரள்கிறது. சமய போதனைகளெல்லாம் நினைவினின்று கழன்று சிதிலமாகின்றன. போதை தலைக்கேறியவர்கள் போல் அகப்பட்டதெல்லாவற்றையும் அடித்து நொருக்குகிறார்கள். கண்களுக்குள் சிக்கியதெல்லாம் சின்னாபின்னமாகிச் சிதைகின்றன.

ஆண்டாண்டு காலமாக அருமுயற்சியின் பேறாய் பெற்றவையும், பாதுகாத்து வைத்திருந்தவையும் அரை நொடியில் அழிவடைகின்றன. மக்கள் கூட்டம் பல திக்குகளுக்கும் ஓடி மறைகின்றது.

எங்கோ மற்றோர் ஆரவாரம்.

அதுவும் சுழல் புயலாக இத்திசை நோக்கியே வருகிறது.

இப்போது இரண்டு பகுதியினரும் மோதிக் கொள்கின்றனர்.

கைகள், தடிகள் கொண்டு அடிபட்டதுடன் நில்லாது கத்திகளால் வெட்டி, குத்தி இரத்தம் கொட்டுகிறது.

அப்பப்பா! என்ன கொடூரம்!



''என் உயிரைக் கொடுத்தும் கடவுளைக் காப்பாற்றுவேன்.'' கைகள் வெட்டுண்டு குருதி வடிய வடிய எழுந்து நின்று ஒருவன் புலம்பு கின்றான்.

''நானும் என் கடவுளைக் காப்பாற்றியே தீருவேன்.'' மற்றொருவனின் மூளியான கை எழுந்து நின்று செந்தலையை ஆட்டி ஆட்டி வஞ்சினமுரைக்கிறது.

''தம்பியவை சண்டை போடாதையுங்கோ. கடவுள் என்றது ஓர் அரும்பெரும் சக்தி. அதை எந்த உருவிலும் நீங்கள் வணங்கலாம். எல்லாச் சமயங்களும் அன்பாயிருக்கச் சொல்கின்றன. நீங்களென்னண்டால் சமயத்துக்காக எண்டு இப்பிடி அடிபடலாமே?'' பெரியவர் ஒருவர் இடையே வந்து அறிவுரை பகர்கிறார். அதைக் கேட்கும் பொறுமை யாருக்கும் இல்லை.

''ஏய் நைனரி, சும்மா கத்தாமல் வீட்டுக்கை போயிரு. இதிலை நிண்டு சாகப் போறாய்.'' ஒருவன் அவருக்கு உபதேசஞ் செய்கிறான்.

"இறைவன் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்."

"நீங்கள் இப்பிடி கடவுளின் பெயரைச் சொல்லி அடிபட நான் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறது? அன்பாயிருங்கோ. இப்பிடிச் சண்டை போடுறதை கடவுள் விரும்பமாட்டார்."

அதைக் கேட்டு இறைவன் மலர்ந்து சிரிக்கிறார்.

"நீ சொன்னாக் கேட்கமாட்டாய். அன்பாம் அன்பு. அவங்கள் செய்யிறதுக்கும் இவரும் உடந்தை. உனக்கு இப்பிடிச் சொன்னால்தான் விளங்கும்."

மண்டையில் விழுந்த அடியுடன் மனிதம் செத்து விழுகிறது.

## மல்லிகை 400ஆவது இதழ்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரவிருக்கும் மல்லிகை இதழ் 400ஆவது இதழாக மலரப் போகின்றது. இவ்விதழுக்கு படைப்புகள் அனுப்ப விரும்புவோர் செப்டெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக மல்லிகையின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்ப விரும்புவோர் மல்லிகையின் மின்னஞ்சல் முகவரிக்கு Ms Wordஇல் பாமினி எழுத்துருவில் (Fonts) அனுப்பி வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமர்சனம்**



# ப.சதீஸ்பிரபுவின் 'பீச்சாங்கை' அடக்குவோர் கன்னத்தில் அறையும் கை!

**- மேமன்கவி -**

ப.சதீஸ்பிரபு தமிழகத்தைச் சேர்ந்தவர். முகநூல் மூலம் எனக்கு அறி முகமானவர். 'யோவ்' என்ற புனைப் பெயரில் கவிதைகள் எழுதி வருபவர். இளம் வழக் கறிஞர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து செற்படுபவர். அவரை முகநூலில் நண்ப ராய் இணைந்திருந்ததன் காரணமாக அவர் அங்கு பதித்த சில கவிதைகள் என் கவனத்தைக் கவர்ந்தன. அக்கவிதைகள் 70களில் தமிழகத்தில் செல்வாக்கு செலுத்திய வானம்பாடி கவிதை இயக்கத்தின் புனையற் பாங்கான நடையின் தாக்கம் தொடர்ச்சியாக இருந்தமை காணக்கூடியதாக இருப் பினும், அவரது அக்கவிதைகளின் பாடுபொருள் என் கவனத்தை ஈர்த்தது. குறிப்பாக, விளிம்புநிலை மக்களின் மற்றும் ஒடுக்கப்பட்டவர் களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இருந்தமை என் கவனத்தைக் கவர்வற்குக் காரணமாக அமைந்தது.

அந்த பிடிப்பின் காரணமாக முக நூலில் படிக்கக் கிடைத்த அவரது 'வெட்டியான்' என்ற கவிதையுடன் தமிழகத்தைச் சேர்ந்த பாலகுமாரனின் 'மரண அடி' எனும் குறுந் திரைப்படத்துடன் ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுதத் தூண்டியது. (பார்க்க ஞானம் - இதழ் 186 - செடம்பர் - 2011) 3

அவரது தொகுதி ஏதேனும் வெளிவந்துள்ளதா? என்பதை அறியும் ஆவலும் எழுந்தது. அது சம்பந்தமாக அவருடன் தொடர்புக் கொண்ட போது 2007ஆம் ஆண்டு நாற்றுகள் பதிப்பக வெளியீடாகத் தமிகத்தில் வெளிவந்த 'பீச்சாங்கை' என்னும் அவரது முதலாவது கவிதைத் தொகுப்பை எனக்கு அனுப்பி வைத்தார். அத்தொகுப் பின் தலைப்பே பெரிதொரு அதிரடியாக இருந்தது. அவரது தொகுப்பு வெளிவந்த காலகட்டத்திற்குப் பிற்பட்ட காலமான, முக நூலில் என்னால் படிக்கப்பட்ட கவிதையில் வெளிப்பட்ட தீவிர தலித்திய சிந்தனையின் ஆரம்ப நிலை அம்சங்கள் தூக்கலாகத் தெரிந்தன. இருந்த பொழுதும் பிற்காலத்து அவரது கவிதைகளில் எனக்கு முற்றும் முழுதுமாக திருப்தியை அளிக்காவிடினும் (அதாவது அவரது கவிதையின் நடையைப் பொறுத்தவரை வானம்பாடி இயக்கத்தின் நீட்சி தெரிந்தாலும்) அக்கவிதைகளில் பாடுபொருள்களில் பரவலாக வெளிப்பட்ட தலித்தியச் சிந்தனை மேலும் அவரை கவனிக்க வைத்தது.



மேலும் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ள கவிதைகள் 70களில் வர்க்கப் பிரச் சினைகளைப் பற்றி எழுதப்பட்ட கவிதைகளில் வெளிப்பட்ட கோஷத்தன்மை வெளிப் பட்டு இருப்பினும், அவை அவரது ஆரம்பகால கவிதைகள் என்பதை அக்கவிதை களின் நடையும், பாடுபொருளும் எடுத்துக் காட்டின.

சில படைப்பாளிகள் அந்தந்த காலகட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் பாடு பொருளை தம் படைப்புகளில் பயன்படுத்தி, பலரின் கவனத்தை கவரும் உத்தியை கையாளுவது உண்டு. சதீஸ்பிரபும் வெட்டியான் நாவிதன், இப்படியான பாடுபொருளை கையாளுவதும் அத்தகைய ஒர் உத்தியோ என்ற சிலர் ஐயப்படக் கூடும். ஆனால் சதீஸின் கவிதைகளில் அவர் கையாண்டு இருக்கும் பாடுபொருள் மீதான மான சீகமான பிடிப்பு, அக்கவிதைகளின் நடையில் வெளிப்படும் புனையற் பாங்கான தன்மையைக் கடந்து தெரிகிறது.

அதற்கு மேலாக, சதீஸின் கவிதைகளில் வெளிப்பட்டு இருக்கும் மார்க்ஸியப் பார்வையும் அதற்கு துணைபுரிந்து இருக்கிறது. ஆனபொழுதும் இன்றைய கால கட்டத்தில் எவ்வாறு பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசும் பொழுது பெண்ணிய மொழி பற்றிய பிரக்ஞை தேவை உள்ளதோ, அதே அளவுக்கு தலித்துகளின் பிரச் சினைகளைப் பற்றி பேச முனையும் பொழுது தலித்திய மொழியைப் பற்றிய பிரக்ஞை யும் தேவைப்படுகிறது. அத்தகைய பிரக்ஞை ஒரளவுக்கேனும் சதீஸ்பிரபுவிடம் இருந்த பொழுதும் (இத்தொகுப்பின் தலைப்பான 'பீச்சாங்கை' அதற்கு ஆதாரம் ஆகிறது) மேலும் அத்தகைய பிரக்கைஞை அவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது. அதற்கு அவர் இன்றைய தமிழகச் சூழலில் வளர்ச்சி அடைந்திருக்கும் தலித்தியச் சிந்தனையின் அடிப்படையிலான தலித்திய இலக்கியங்களை மேலும் தேடிப் படிப்பது மூலம் வளர்த்துக் கொள்ளலாம். அத்தகைய சூழல் அவருக்கு இருக்கிறது என்பது தெரிகிறது.

இனி 'பீச்சாங்கை' தொகுப்பில் அமைத்துள்ள சில கவிதைகளைப் பற்றிச் சிறிது பார்போம்.

நவீனப் படைப்புகளின் தன்மைகளில் ஒன்றாக இருப்பது, ஒரு படைப்பாளி தன் படைப்பின் ஊடாக, தன்னைச் சுற்றி இருக்கும் வாழ்க்கையில் யாரும் கவனிக்காத விடயங்களை அவதானித்து தம் படைப்புகளில் தருவதுதான். அவ்வாறு தரப்படும் படைப்புகள், படைப்பாக்கத் தன்மை களில் சில நிறை-குறை இருப்பினும் கூட, வாசக-சிந்தனை தளத்தில் அப்படைப்புகள் சில அவதானங்களை ஏற்படுத்துவதுண்டு. அத்தகைய படைப்புகளாகவும் இத்தொகுப்பில் அமைந்துள்ள சில கவிதைகள் அமைந்துள்ளன. இதுவே அவரது படைப்புக்களைப் பற்றி நம்மை தூண்டி இருக் கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் இத்தொகுப்பின் தலைப்புக்கான கவிதையான 'பீச்சாங்கை' கவிதையை இங்கு முழுமையாகத் தருவது மூலம் வாசக அனுபவத்திற்கு நிறைவாக இருக்கும் என நம்புகிறேன்.

அக்கவிதை பற்றி நானும் ஒன்றும் பேசவில்லை. காரணம் அக்கவிதையே பல விடயங்களைப் பற்றி பேசுகிறது என்பதற்காக. அதே மாதிரியான ஒரு உணர்வையே பிற்காலத்தில் அவர் எழுதிய வெட்டியான், செருப்பு தைக்கும் தொழிலாளி, முடி திருத்தும் தொழிலாளி ஆகியோரைப் பற்றி எழுதிய கவிதைகள் எழுப்புகின்றன. (பார்க்க பின்ணிப்பு)

அடுத்து சதீஸ்பிரபுவுக்கு பெண் மொழியோ, பெண் இனத்தின் மீதான அடக்கு முறையின் வடிவங்களைப் பற்றிய தெளிவு குறைவாக இருக்கிறதோ என்ற ஐயத்தினை அத்தொகுப்பில் இடம்பிடித்துள்ள பின்வரும் கவிதை ஏற்படுத்தியது. மார்க்சியப் பார்வையிலான அடிப்படையில் பெண்ணினத்தைப் பற்றிய கருத்துநிலை சார்ந்த அறிதலும், தலித்திய சிந்தனையின் அடிப்படையில் தலித்திய பெண்களின் நிலை பொதுவான அல்லது மற்ற சமூக அமைப்புச் சார்ந்த பெண்களின் பிரச்சினையில் இருந்து வேறுபட்டது என்பதற்கான புரிதலும் சதீஸ் பிரபுவிற்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பெண்ணினத்தைப் பற்றிய இவரது கவிதைகளில் யதார்த்தமும், அதற்கான சரியான வெளிப்பாடும் வெளிப்படக் கூடியதாக இருக்கும்.

'**கூச்சம**' என்ற தலைப்பிலான அக்கவிதை இப்படி அமைந்திருக்கிறது.

**என்ன கூச்சப்படுகிறாளோ!**
**காதில் கடுக்கனோடும்**
**பெண்ணைப் போல்**
**முடி வளர்த்தும்**
**ஸ்டைலாய்**
**மோட்டரில் வந்து நிற்கும்**
**நவநாகரீக**
**கல்லூரி மாணவர்களுக்கு**
**ஆண் சட்டை**
**போட்டுக் கொண்டு**
**பெட்ரோல் போடும்**
**அக்கா......**

இக்கவிதையின் மூலம் கவிஞர் என்ன சொல்ல முனைகிறார்?

பெண்களின் அலங்காரத்துடன் வரும் கல்லூரி மாணவர்களைக் கண்டதால் அக்கா கூச்சப்படுகிறாளா? அல்லது அவர்கள் முன்னால் தான் ஆண் சட்டை அணிந்து இருப்பதனால் அக்கா கூச்சப்படுகிறாளா? என்ற கேள்விகளை அக்கவிதை எழுப்பி விடுகின்றது. அதன் மூலம் பெண்கள் இருக்க வேண்டிய நிலை பற்றிய ஒரு தெளிவின்மை தெரிகிறது. அத்தெளிவின்மையின் தொடர்ச்சியினை 'தெறிப்புகள்' என்ற தலைப்பின் கீழ் அமைந்துள்ள நடிகைகள் பற்றிய கவிதைத் துளியில் தெரிகிறது.



**ஆள்பாதி ஆடைபாதி**
**தவறாய் அர்த்தம் கொண்டனர்**
**கவர்ச்சி நடிகைகள்**

என்ற அக்கவிதையில் இன்றைய சினிமா உலகம் வர்த்தக மயமான சூழலில் அந்த நடிகைகள் விருப்பியே ஏற்கும் நிலை அல்ல. மாறாக பெண்களைப் போகப் பொருளாகப் பயன்படுத்தும் ஆணாதிக்க சமூகத்தின் ஒரு வெளிப்பாடு என்பதை சதீஸ்பிரபு புரிந்துகொள்வது நல்லது.

ஆனாலும், அம்மாவைப் பற்றிய கவிதையான '**அம்மாவைப் பற்றி...**' என்ற நீண்ட கவிதையின் இறுதிப் பகுதியில்,

**எல்லாம் எழுதி**
**என்ன பயன்?**
**அப்பாவைப் போலவே**
**நானும்**
**அம்மாவை வேலை வாங்க**
**ஆரம்பித்து விட்டேனே..!**

என்றும், **உறுத்தல்** எனும் கவிதையில்

**ஒன்றாய்**
**சாப்பிடுவோம்**
**என்றழைத்த**
**அப்பாவிற்கு**
**உறுத்தவே**
**இல்லையா?**
**பரிமாறும் அம்மா.**

அம்மா பற்றி பேசவரும் மேற்குறித்த கவிதைகளில் குடும்ப கட்டமைப்பில் பெண் சுரண்டப்படுவதும், ஒதுக்கப்படுவதும் நுண்ணிய முறையில் எடுத்துக்காட்டி இருப்பது பாரட்டுக்குரியது. மேலும் சதீஸ்பிரபு இத்தொகுப்பில் நச்சென்று அமைந்த சில கவிதைகளில் சில ஆழமான விடயங்களை ரொம்பவும் எளிமையான வார்த்தை களில் பேசியிருக்கிறார்.

**ஜன..கண..மண..கதி** என்ற கவிதையில்
**ஸ்டேன்டட்டீஸ்**
**அட்டன்சன்**
**சல்யூட்**
**ஆங்கிலேய**
**வார்த்தைகளுக்குக்**
**கட்டுப்பட்டுத்தான் ஒலிக்கிறது**
**இந்தியாவின்**
**தேசிய கீதம் கூட...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்வதன் மூலம் சுதந்திரம் வாங்கிய பின்னும் காலனித்துவ மனோ பாவத்திலிருந்து இந்தியா போன்ற நாடு கள் இன்னும் விடுபடவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

அடுத்து, **சுதந்திர தினம்** எனும் கவிதையின் இறுதியில்

**பெருந்திரள்**
**கூட்டத்தின் ஊடே**
**பாக்கெட் ஜூஸை**
**பெப்ஸி என்று கூவி**
**விற்கும்**
**சட்டையில்லாச் சிறுவன்**
என்றும்,

**கிரிக்கெட்** எனும் கவிதையில்

**மோதல்**
**இந்தியாவிற்கும்**
**இலங்கைக்கும்தான்**
**வென்றது மட்டும்**
**அமெரிக்க**
**கோக்கும் பெப்சியும்!**

என்றும் பேசுவதன் மூலமும் இந்தியா போன்ற தேசங்களின் பன் னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தை நகை முரணுடன் பளிச்சென்று முன் வைக்கிறார்.

மொத்தத்தில் இத்தொகுப்பின் கவி தைகள் மூலமும், பிற்காலத்தில் அவர் தந்த கவிதைகள் மூலமும் அவர் சமூக உணர்வுமிக்க ஒரு கவிஞராகத் தெரிவ தோடு, எதிர்காலத்தில் இன்னும் கருத் தியல் ரீதியாக பல்வேறு சமூகப் பிரச் சினைகளைப் பற்றிய தெளிவு பெற்று கவனத்திற்குரிய கவிதைகளைத் தருவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

## வெட்டியான்

எரிப்பதா
புதைப்பதா
வெட்டியானின்
குல வழக்கம்?

எரியூட்ட விறகையும்,
புதைக்க மண்ணையும்
மட்டுமே
வெட்டிப் போட்டுப்
பழகியதால்
வெட்டியானாகிப் போனவன்!

லாபம் ஏதும்
இல்லாத வேலை
என்பதால்தான்
இவன் செய்யும் வேலை
வெட்டிவேலை
என்றானதோ!

துண்டிலே விழும்
சில்லறைகளில்
தொடங்குவதால்
அவன் வரவு செலவு திட்டம்
முழுவதும்
துண்டுகளாலேயே
நிரப்பப்படுகிறது!

அவன் மீது
இரக்கம் வந்துவிடக் கூடாது
என்பதற்காகவும்தான்—
கண்கள் மூடப்படுகிறதோ
பிணங்களுக்கு!

'திரும்பிப் பார்க்காமல்
செல்லுங்கள்'
அரைஞாண் கயிறின்
வெள்ளி வரை
அறுத்துப் பெற்ற பிறகு
திரும்பிப் பார்க்க
என்ன இருக்கிறது?



சாதிக்கொரு
சுடுகாடு வைத்தவன்
ஏன்
எல்லா சுடுகாட்டுக்கும்
ஒரே சாதியில்
வெட்டியானை மட்டும்
வைத்தான்?

இந்த தீண்டத்தகாதவனின்
தீண்டலில்தான்
மோட்சம் பெறுகின்றன
பிணங்கள்!

சந்து பொந்தெல்லாம்
மின்விளக்குகள் கட்டி
மனைவியை
துணைக்கழைத்துக் கொண்டு
சிறுநீர் கழிக்க சென்றவனிடம்
இரவெல்லாம்
பிணத்தோடு பிணமாக
பயமின்றி படுத்துறங்கியவன்
எப்படி அடிமையானான்?

'கருப்பன் வந்திருக்கின்றான்'
என இருந்த இடத்திலிருந்தே
கத்தி தெரிவிக்கின்றன
செத்துப் போனவனின்
பேரக்குழந்தைகள்!
'இந்த வருசம்
எதுவும் கிடையாது
எனத் தெரிந்தும்
வந்து நிற்கிறான் பாரு'
முறுக்கிக் கொள்கிறாள்
கிழவி!

தீபாவளிக்கும்
பொங்கலுக்கும்
தப்பை தட்டி
பிச்சையெடுத்துக்
கொண்டிருக்கிறான்
வெட்டியான்
தான் செய்த
வேலைகளுக்கான
கூலியை!

## செருப்பு தைக்கும் தொழிலாளி

'செருப்பால் அடிப்பேன்'
என்று யாரோ யாரையோ
திட்டுகிறபோது
ஏனோ
செருப்பால் அடித்தது போல்
வலிக்கிறது
செருப்பு தைக்கும்
தொழிலாளிக்கும்!

எல்லா
பேருந்து நிறுத்தங்களுக்கு
அருகிலேயும்
பழைய கீற்றுகளாலோ
கோனிப் பைகளை
ஒன்று சேர்த்தோ
வேயப்பட்டிருக்கிறது
ஒரு தாழ்வாரம்!

திரைப்பாடல்களுக்கு
முந்தைய
வானிலை அறிக்கையை
வாசித்துக் கொண்டிருக்கிறது
ஒரு வானொலி!

இருக்கை போட்டு
உட்காரச் செய்யவோ
எழுந்து நின்று
உங்களை வரவேற்கவோ
ஒருபோதும்
முடியாது அவனால்!

அவன் அலுவலகத்தில்
செருப்பை
உள்ளே விட்டுவிட்டு
நீங்கள்வெளியே வந்து
நிற்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அது ஆய்
கையால் தொடக்கூடாது'
என செருப்பை எடுத்து
விளையாட முயற்சிக்கும்
போதெல்லாம்
தன் பேரக்குழந்தைகளுக்கு
அறிவுறுத்த தவறாத
சில பெருசுகள்,
தைத்து முடிந்த பிறகு
எவ்வளவு என்றே கேட்காமல்
போனால் போகட்டும்
வைத்துக்கொள்
என்பதுபோல்
கொஞ்சம் சில்லறைகளை மட்டுமே
தந்துவிட்டு
நைசாக நழுவிக் கொள்ளும்போது
வாயடைத்து வெறிக்கத்தான்
முடிகிறது இவனால்!

படத்தில்
வாளேந்தி நிற்கும்
மதுரை வீரனுக்கு
கரைந்து கொண்டிருக்கிறது
ஒரு ஒற்றை ஊதுபத்தி!

வெயிலின் புழுக்கம்
குறைக்க வரும் அந்தியோடு
சேர்ந்தே வரும் தின வட்டிக்காரன்
இருசக்கர வாகனத்தில்
அமர்ந்துகொண்டே கைநீட்ட
கிடைத்த மொத்த காசையும்
கப்பம் கட்டிவிட்டு
போவோர் வருவோரின்
கால்களையே
வேடிக்கை பார்த்துக்
கொண்டிருக்கிறான்
ஒண்டி வீரனின் வாரிசு ஒருவன்!

## முடி திருத்தும் தொழிலாளி

முடி கிடந்ததற்காக
சாப்பாட்டுத் தட்டு
எட்டி உதைக்கப்படுகிற
போதெல்லாம்
தூரப்போய் விழுகிறது
ஒரு முடி வெட்டும் தொழிலாளியின்
கௌரவமும்...!

வேலை செய்பவர்
நின்றுகொண்டு செய்ய
வெட்டிப்பயல்கள்
உட்கார்ந்துகொண்டு
தன் கிருதாவில்
போட வேண்டிய கோடுகளை
விவரித்துக் கொண்டிருக்கிறார்கள்..!

எத்தனை பேர் வந்தாலும்
அவன் அலுவலகத்தில்
வெளியே கிடக்கும் செருப்பு
அவனுடையது மட்டும்தான்..!

மயிரிழையில்
தப்பிக்கும் வாய்ப்பு
இவனுக்கும் மட்டும்
கிடைக்கவேயில்லை..!

பிடிப்பது கத்தி என்றாலும்
அடுத்தவன் உடல் நாற்றத்தை
சகித்துக் கொள்ள
தனக்குத்தானே
பவுடர் போட்டுக்கொள்ளும்
அகிம்சாவாதி இவன்..!

அங்கே
குளித்துவிட்டு
சலவை செய்த உடையில்
வருகை தரும்
ஒரே தீண்டத் தகுந்தவனும்
அவன் மட்டுந்தான்..!

அங்கே கூட்டு
இங்கே குறை
கர்லிங்கை மெருகேற்று
என வயதுக்கு ஏற்றவாறு இல்லை
முடிவெட்ட வந்த
ஒருவனின் அலம்பல்கள்..!

எடுத்த கத்தியை
திருப்பிப் பிடித்து
காதோர நுரையை மட்டும்
மழித்துக் கொடுக்கிறார்
முடிதிருத்தும் தொழிலாளி..!

'என்ன மயிருக்கு போனாய்?
அங்கே என்ன
சிரைத்துக்கொண்டிருந்தாய்?
வேறு எதை பிடுங்கிக்கொண்டிருந்தாய்?'
என்று நீளும் வார்த்தைகளை
உள் வாங்கி
அனுப்பிக்கொண்டிருந்தது
சிணுங்கிய அலைபேசி..!

கத்தி தொண்டைக்கு
வரும்பொழுதுதான்
பேசிய வார்த்தைகள்
நினைவுக்கு வரத்தொடங்குகிறது
முடி வெட்டிக்கொள்ள
வந்தவனுக்கு..!

கூடுதல் கவனத்துடன்
பக்குவமாய் சிரைத்து
அவன் அக்குள் முடிகளையும்
தன் உள்ளங்கையில்
அப்பிக் கொள்கிறார்
முடிதிருத்தும் தொழிலாளி..!

'மருமகள் பேத்தியை
அழைத்துக் கொண்டுவரும்
ஒரு மொட்டையை போட்டு விட்டுவிடு
எனக்கும் சேர்த்து
அதனிடமே காசை
கொடுத்தனுப்புகிறேன்'
எனக் காரியம் முடிந்ததும்
நயமாய் வஞ்சகம் பேசி நகர்ந்து போகிற
இந்த பெரிய மனிதனின் பேத்தி
தலை நிறைந்த சிரங்குகளோடுதான்
வந்து சேரும் என்பதையும்
கணித்தேதான் காத்திருக்கிறார்
அந்த முடிவெட்டும் தொழிலாளி..!



Happy
Photo

Excellent
Photographers
Modern Computerized
Photography
For
Wedding Portraits
&
Child Sittings

*Photo Copies of
Identity Cards (NIC),
Passport &
Driving Licences
Within 15 Minutes*

300, Modera Street,
Colombo - 15.
Tel : 2526345



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணம்**

இம்முறை ஆவணப் பகுதியில் இடம்பெற்றிருக்கும் சிங்கள மொழிபெயர்ப்புச் சிறுகதை ஈழத்துச் சிறுகதைகளின் முன்னோடிகளில் ஒருவரான அ.செ.முருகானந்தன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, 1946ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிவந்த ஈழத்துச் சிறுசஞ்சிகைகளின் முன்னோடி சஞ்சிகையான மறுமலர்ச்சியில் வெளிவந்ததாகும். இக்காலகட்டத்தில் இச்சஞ்சிகையின் ஆசிரியராக ஈழத்து இலக்கிய முன்னோடிப் படைப்பாளிகளில் ஒருவரான வரதர் (தி.ச.வரதராசன்) அவர்கள் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மெனிக்காவின் ஜாதகம்

**சிங்களத்தில் : விஜயதுங்க**

**தமிழில் : அ.செ.மு**

இங்கிலீஷ் கிரிக்கெட் விளையாட்டுக்களையும் அவர்களுடைய திறமைகளையும் அதிகம் தெரிந்துள்ள இன்றைய சந்ததியார், கட்டுகஸ் தோட்டைக்கு அருகிலுள்ள கொஸ்வத்தை என்ற அற்புதமான கிராமத்தையோ, கிராமத்து நாட்டாண்மைக்காரரையோ தெரிந்திருக்க மாட்டார்கள். அவருடைய காலத்தில் ஊருக்குள்ளே அவர் ஒரு பெரிய பிரமுகர். பழைய காலத் தாடிக்கார தேசபக்தர்களைப் போன்றதொரு கம்பீரமான தோற்றத்துக்கும் பெயர் போனவர். அவரது ஆதிக்கத்துட்பட்ட பிரதேசத்தில் அவர் நாட்டிய ஒழுங்கின் திறனை அறியாதவர்களே இல்லை.

* * *

கொஸ்வத்தைக் கிராமத்து நாட்டாண்மைக்காரருக்கு மெனிக்கா என்ற ஒரு பெண்குழந்தை இருந்தது. தாய்க்கும் தந்தைக்கும் அருமையான ஒரே குழந்தை. மெனிக்கா என்ற பெயரின் உண்மையான பொருள் விளங்க, பெளற்றோர்களின் கண்களுக்கு அவள் ஒரு முழு முத்தாகவே ஒளிர்ந்தாள்.

தாயைக் காட்டிலும் பிள்ளை அழகாகவே இருந்த போதிலும், துர்அதிர்ஷ்டமாக ஒரு குறைபாடு மாத்திரம் அமைந்து விட்டது. அவளுக்குப் பற்கள் மிதப்பு. ஆனாலும் அவளது முகத்தைக் கோரப்படுத்தக்கூடிய அவ்வளவு மோசமாக அது அமைந்து விடவில்லை. இயல்பாகவே களையான முகமானபடியால் கடுகடுப்பாக வாயை இறுக மூடிக் கொள்ள வேண்டிய அலங்கோலம் ஏற்படுவதில்லை அவளுக்கு. இதனால் அவளது மிதப்பு பற்கள் தொடக்கத்திலே பலருக்கு நன்றாகக்கூடத் தோன்றிற்று என்று சொல்லலாம்.

ஆனால், வயசு ஆக ஆக அவளுக்கு இது ஒரு பிற்போக்காகவே நேர்ந்து, நாட்டாண்மைக்காரருக்கு மன விசாரத்தை உண்டாக்கியது. ஏனெனில் மெனிக்காவுக்கு வயசு பதின்மூன்றோ, பதினாலோ நடை பெற்றுக் கொண்டிருந்த காலத்தில், அவர் நம்பியிருந்த இரண்டொரு வாலிபர்கள் அவளைப் பார்த்துத் தூரத் தூர விலகிப் போக ஆரம்பித்தார்கள். கண்ணிலோ, மூக்கிலோ இலேசான சொள்ளைகள் இருந்தாலும் வாலிபப் பிள்ளைகள் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால், பற்கள் வெளியே நீண்டுள்ள ஒரு பெண்ணை, அவள் மற்ற எல்லா வகையிலும் லட்சணமாயிருந்தாற்கூட, ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கத்தான் செய்வார்கள்.

எப்படியும் அதிரஷ்ட வேட்டைக்காரர்கள் என்றைக்கும் நம்மிடையே இருந்து வருகிறார்களல்லவா? பணம், சொத்து, சுதந்திரம் என்பவற்றுக்கு முன்னே சாதி, சமூக அந்தஸ்துகள் எல்லாம் இவர்களுக்கு அற்பமாகப் போய்விடும்.

'குலே றிங்க கியாய் அகுலே!' அதாவது பணத்துக்கு முன்னே குலப்பெருமை பற்றைக்குள் போய் விடுகிறது என்று சிங்கள வாக்கியம் ஒன்று கேலி செய்வது இவர்களைத்தான்.

இப்படிப்பட்ட அதிர்ஷ்ட வேட்டைக்காரர்கள், கொஸ்வத்தை நாட்டாண்மைக்காரர் பெண்ணுக்குச் சேரக்கூடிய ஏராளம் ஆதன பாதனங்களை மனத்தில் வைத்து அங்கே இடை ஆட்கள் வைத்துப் பேசத் தொடங்கினர். ஆனால், அவரோ அவர்களை உடனுக்குடனேயே திருப்பியனுப்பி விட்டுக்கொண்டிருந்தார். சில பேர்களுக்கு மாத்திரம் ஒரு நிபந்தனை போட்டார். அதாவது பெண்ணின் ஜாதகத்துடன் புருஷ ஜாதகம் எல்லா வகையிலும் சரியாக ஒத்துவர வேண்டுமென்பது.

மெனிக்காவின் ஜாதகம் யோகம் பெற்றது. அவள் பிறக்கும் சமயம் சூரியனும், சந்திரனும், வேறு கிரகங்களும் நல்ல நிலையில் நின்றதாகச் சொல்வார்கள்.

* * *

எல்லாம் சரிதான். ஆனால் இப்பேர்ப்பட்ட ஜாதகத்துக்குப் பொருத்தமான சோடி ஜாதகன் ஒருவன் அகப்படுவது தான் இலேசில் சாத்தியமாகிறதாயில்லை. நாட்டாண்மைக்காரர் அமர்த்திய அநுபவம் மிக்க ஆட்களில் பலர், நீண்ட கால அலைச்சலின் பின் திரும்பிவந்து, தாங்கள் சந்தித்தவர்களின் பெயர் பிரதாபங்களை ஒன்று விடாமல் முதலிலிருந்து அடுக்குவார்கள். ஆனால், கடைசியிலோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோரள மாத்தயா, ஜாதகம் ஒன்றுமே சரிவரவில்லையே' என்று விசயத்தை முடித்து விடுவார்கள்.

அவருக்கு இந்தச் சமயம் ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும். இப்படிப் பல தடவைகளில் நடைபெற்று விட்டன. பொருத்தமான ஜாதகம் ஒன்றுகூடக் கிடைக்கவேயில்லை.

இந்தக் காலத்தில் மொடதோட்டையில் லோகஜ் அப்புகாமி என்ற பெயருள்ள ஒரு வாலிபன் இருந்தான். கரிய மேனியும், கட்டையான உருவமும், சுறுசுறுப்பான சுபாவமும் அமைந்த அவன் அதிகம் பேசமாட்டான். தன் சொந்தப் புத்தியின்படியே நடந்துகொள்வான். ஐந்து வயசாகுமுன்னரே தாய் தந்தையரை இழந்துவிட்ட அவனை அவனுடைய பாட்டி ஒருத்தி வளர்த்து வந்தாள்.

அந்த நாட்களில் இலங்கைப் பாக்குக்குப் பம்பாய், குஜராத், பினாங்கு ஆகிய தேசங்களில் நல்ல மதிப்பு இருந்து வந்தது. லோகஜ் என்பவன் இந்தப் பாக்கு வியாபாரத்தையேதான் விரும்பிச் செய்தான். அயல் கிராமங்களுக்குள்ளே போய்க் காய்த்துக் குலுங்கும் கமுகந் தோப்புகளைத் தேடித் தேடிப் பார்ப்பான். அதிலே அவனுக்கு நல்ல தேர்ச்சி உண்டு.

ஆனால், பாக்குடன் புழங்குவது நாகரிகமானதாயில்லை அந்தநாளில். 'நான் ஒரு கமுகந் தோட்ட முதலாளி' என்று யாராவது பெருமையுடன் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். கொழும்பில் அந்தடம்பாச்சாரிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவன் 'ஓ! என் அப்பன் ஒரு கமுகந் தோட்ட முதலாளி' என்று வாய்விட்டுப் பேசத் துணியவே மாட்டான். இதே சமயம் ரப்பரின் நிலையோ, சொல்லக் கூடியதல்ல. கிராமாந்தரங்களிலெல்லாம் கமுகையும் இன்னும் எவ்வளவோ பிரயோசனங்களையும் விழுங்கி வந்தது அது.

லோகஜ் பேராசை கொண்டு நிலை தடுமாறவில்லை. அவனை முன்னுக்குக் கொண்டுவந்த தொழிலை அவன் கைவிடவில்லை. கண்டியை அடுத்த மேல் பக்கத்துக் கிராமங்களுக்குப் போய்ப் பார்த்தான். அங்கேயும் ரப்பர் மோகம் பலமாகவே தலைகாட்டியிருந்த போதிலும், விதிவிலக்காகவும் பல கிராமங்களிருந்தன. கொஸ்வத்தை என்ற கிராமத்தைப் போய்ப் பார்த்ததில் ஊரின் பெயருக்கு மாறாக (கொஸ்) பலாவைக் காட்டிலும் கமுகந் தோட்டங்களே அதிகமாயிருப்பது தெரிந்தது. ஊரின் நாட்டாண்மைக்காரரிடம்தான் பெருவாரியாகக் கமுகந் தோப்புக்கள் உள்ளனவென்று கேள்விப்பட்டு அவரிடம் போனான். நாட்டாண்மைக்காரருக்கும் தம்மிடமுள்ள பொருளை வாங்க அவனைப் போல ஒருவனே தேவையாயிருந்தது. பிடுங்கிய பாக்குகளைப் பொறுக்கிச் சேர்க்கவும், பிறகு கோம்பை நீக்கி அவைகளைக் காய விடவும் கூலி அமர்த்த வேண்டிய தொந்தரவுகளுக்கு லோகஜ் இடம் வைக்கவில்லை. பொருளை மொத்தமாகத் தீர்த்து அப்படியே வாங்கக்கூடியவனாயிருந்தான். தோட்டத்தைச் சுற்றிக் காண்பிக்க நாட்டாண்மைக்காரர் மகிழ்ச்சியோடு அவனை அழைத்துச் சென்றார். முதலில் சில மரங்களை லோகஜ் பார்த்தவுடனேயே விசயம் தீர்ந்து போய்விட்டது. பொருளின் சொந்தக்காரன் மனங்குளிரும்படி கொள்ளல் - விற்றல் நடைபெற்று முடிந்தது. பேசிய விலையைக் குறித்த



இடத்திலேயே லோகஜ் செலுத்தி விட்டான்.

மீதிப் பணம் கொடுப்பதற்காக நாட்டாண்மைக்காரர் அவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார். இந்தச் சமயந்தான் லோகஜ் மெனிக்காவைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது.

இவர்கள் போன சமயம் ஒரு பலா மரத்தின் கீழ் உயரமான மெல்லிய தடி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு பலாக்காயைப் பிடுங்கப் பெரு முயற்சி செய்துகொண்டிருந்தாள், அவள்.

பின்பக்கம் மனித அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் அவளது முகத்தை லோகஜ் நேருக்கு நேராகக் காண நேர்ந்தது. கண்டதும் என்னவோ அவனது இதயம் ஒரு விநாடி அடித்துக் கொள்வதே நின்று போயிற்று.

'கமுகந் தோப்பினூடாகத் தோன்றும் உதயச் சந்திரன் போல என்ன அழகு! என் சீவியத்தில் இதுவரையில் இப்படிப் பிரகாசமான முகத்தை நான் பார்த்ததேயில்லை' என்று சொக்கிப் போனான், லோகஜ்.

தகப்பனோடு கூடவரும் புது முகத்தை மெனிக்காவுந்தான் பார்த்தாள். பார்த்தும், பார்க்காதது போலச் சிரித்துக் கொண்டு, "தாஹ்த்தே! (அப்பா) இந்தப் பலாக்காயைப் பிடுங்க முடியவில்லை!" என்றாள்.

இதற்கு மெனிக்காவின் தந்தை பதில் கூறுமுன்னர் லோகஜ் தன் சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு மரத்தில் தொத்தி விட்டான்.

பலாக்காய் பிடுங்குவதற்கும் முன் அநுபவமிருப்பது நல்லது. அதைக் கொய்யும் பொழுது வெளியே பாயும் பால் பிடுங்குபவன் பேரிலும், கீழே நிற்பவர்கள் பேரிலும் சிந்தாமல் பக்குவமாகப் பிடுங்க வேண்டும். லோகஜ் அந்தவிதமாகவே கொய்து கீழே சருகுக் குவியல்களுக்கு மேலே போட்டான். மெனிக்கா அதைக் குனிந்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினாள். நாட்டாண்மைக்காரரும் லோகஜ்ஜும் பின்னால் போனார்கள். வீட்டுக்குப் போய்க் கணக்கு வழக்கெல்லாம் கறாராய் முடித்துவிட்டுப் பேசிக்கொண்டிருக்க மத்தியானமாகி விட்டது. நாட்டாண்மைக்காரர் தம்மோடு சற்றே நெருங்கிப் பழகி விட்டவர்களோடு மாத்திரம்தான் தமக்குப் பிரீதியான பலாக்காய் உணவைப் பற்றிப் பேசுவார். அது குணத்தில் எப்படிப் பன்றி இறைச்சியை நிகர்த்திருக்கிறது என்பதை லோகஜ்ஜிடம் சொல்லிக் கொண்டிருக்க, சமையலும் முடிந்துவிடும் சமயமாயிற்று. மெனிக்கா சமைத்த பலாக்காயின் வாசனை 'கம்'மென்று வீசிற்று. நாட்டாண்மைக்காரர் நாவைச் சப்புக் கொட்டிக்கொண்டே, "நேரம் மத்தியானமாகி விட்டது. இருந்து சாப்பிட்டு விட்டுப் போனாலென்ன?" என்று கேட்டார்.

மெனிக்காவின் சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த வாலிபன் இதற்குத் தடையா சொல்லுவான்?

வீட்டுக்குப் புதிதாக வந்திருக்கும் விருந்தாளியை வரவேற்பதில் மெனிக்காவின் உள்ளம் எவ்வளவு துடித்தது என்பதைக் காட்ட அவள் அன்றைக்கென்று அதிக அக்கறையோடு தயாரித்த பலாக்காய்ப் பாகமே போதும். சமையலறையில் அவள் அன்றுபோல் சுறுசுறுப்பாக நின்று வேலை செய்ததை அவளுடைய தாயார் முன் ஒருநாளும் பார்த்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாண்மைக்காரரும் லோகஜ்ஜும் பேசிக்கொண்டிருக்கும் போது அவனுக்கு எப்படி இந்தப் பாக்கு வியாபாரத்தில் மன நாட்டம் உண்டாயிற்று என்று நாட்டாண்மை தூண்டித் தூண்டிக் கேட்கலானார். இயல்பாகவே பேச்சில் குறைவான லோகஜ் கூட அன்றைக்கென்னவோ உற்சாகமாகத்தான் பேசினான். 40 அடி உயரத்தில் காய்த்துக் குலுங்கும் அந்த அழகான சிவந்த பாக்குக் குலைகள் இளமை தொடக்கமாக அவன் மனத்தை எவ்விதம் கவர்ந்து வந்தன என்பதை ஒரு கவியைப் போல வர்ணித்துச் சொன்னான். ஒரு சிங்கள வாலிபன் அவன் காலத்தில் கமுக மரங்களை இப்படி வர்ணிப்பதைக் கேட்க நாட்டாண்மைக்கு உச்சியும் உள்ளமும் குளிர்ந்து ஒரே சந்தோசமாய் விட்டது. அவனது பூர்வீகத்தை அநுதாபத்தோடு விசாரித்தார்.

லோகஜ் தனது சோகக் கதையைச் சொன்னான். மிக இளமையிலேயே தாய் தந்தையை இழந்து விட்டதையும், தனது பாட்டிக் கிழவி ஒருத்தி தன்னைக் காப்பாற்றி வைத்ததையும் விபரமாகச் சொன்னான்.

"அதெல்லாம் ஒருபக்கமிருக்க உன்னிடம் உனது ஜாதகமிருக்கிறதா?" என்று நாட்டாண்மை இடையே ஒரு கேள்வி அவனைக் கேட்டார்.

"ஐயோ, அதுதான் கிடையாதே என்னிடம்! ஆனால் நான் பிறந்தது ஒரு சித்திரை மாதத்தில் என்று பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்றான் லோகஜ்.

'ஜாதகம் இல்லை' என்றதும் நாட்டாண்மைக்குப் பழைய ஞாபகம் வந்தது.

"என்ன? மறுபடியும் இல்லைதானா?' என்று வழக்கம் போல அட்டகாசம் போட வாயெடுத்தவர் சட்டென்று நிறுத்திவிட்டார். லோகஜ் மீது விசேஷ அநுதாபமும் அக்கறையும் உண்டாயிற்று அவருக்கு. வயசான ஒரு பெண்ணின் பராமரிப்பில் கழிந்த அவனது இளமையை எண்ணிப் பரிதாபப்பட்டார். அவர் தம்முள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். மனைவியோடும் மகளோடும் கலந்துகொள்ள வேண்டியதுதான் மிச்சம். ஆனால், மகளிடம் அந்த விசயமாக அவர் பேச மாட்டார். ஏனென்றால், மெனிக்கா மேலே அவருக்கு அளவுகடந்த வாத்சல்யம். அதனால்தான்!

நாட்டாண்மைக்காரர் மனைவி அவர்களைச் சாப்பாட்டுக்கு அழைத்தாள். லோகஜ் அன்று வெகு பிரியத்தோடு சாப்பிட்டான் என்று சொல்ல வேண்டியதில்லை.

ஐ ஐ ஐ

சரி. ஜாதகப் பொருத்தம் பார்க்கும் யோசனையை நாட்டாண்மைக்காரர் காற்றில் பறக்க விட்டுவிட்டார். ஒரு நல்ல முகூர்த்த தினத்தைப் பார்த்துச் சொல்லும்படி மாத்திரம் சோதிடரைக் கேட்டார்.

அந்தக் கல்யாணத்திலே ஜாதகத்துக்கு இடமில்லாமலிருந்த போதிலும் அதைப் போலக் குதூகலக் கல்யாணம் கிராமத்தில் என்றைக்குமே நடந்ததில்லை என்று கொஸ்வத்தைக் கிராமத்தவர்கள் இன்றைக்கும் பேசிக்கொள்கிறார்கள்.



# கு. சின்னப்பபாரதி

## இலக்கியக் கருத்தரங்க நினைவு அறக்கட்டளை

முல்லை நகர், நாமக்கல் 637 002. தமிழ்நாடு. இந்தியா.



கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை சார்பாக 4ஆம் ஆண்டாக வழங்கப்படும் இலக்கியப் பரிசுகள் - 2012க்காக இவ்வாண்டு அறிவிக்கப்பட்டிருந்த பல்வேறு இலக்கியத்துறைகளில் பத்திரிக்கைத்துறைக்கு முதல் பரிசு வழங்கிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் 'தினமணி' நாளிதழ் ஆசிரியர் திரு.கே.வைத்தியநாதன் அவர்கள் சிறந்த பத்திரிக்கையாளராக முதன்மைப் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு அமைய திரு. கே.வைத்தியநாதன் அவர்களுக்கு இவ்வாண்டு முதன்மைப் பரிசு ரூபா. 150,000 லட்சம் (ஒன்றரை இலட்சம்) ரொக்கமும், கேடயமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

மேலும் சிறப்புப் பரிசுகள் 16 பேருக்கு கீழ்காணும் இலக்கிய வகைகளில் ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம்)மும், கேடயமும், நினைவுப் பரிசுமும் வழங்கப்படும்.

**சிறுகதை:**

'கூடுகள் சிதைந்த போது' - அகில் (அகிலேஸ்வரன் சாம்பசிவம்) கனடா.
'என் வானம் நான் மேகம்' - மா. அன்பழகன், சிங்கப்பூர்.

**கவிதை:**

'நட்பின் முகவரி' - நா ஜெய்கணேஸ்
'சிறுவர் இலக்கியம்' - திருமதி பத்மாவதி இளங்கோவன், பிரான்ஸ்.
'பறக்கும் ஆமை' - ஓ. கே. குணநாதன், மட்டக்களப்பு-இலங்கை.
'தூப்புக்காரி' - செல்வி. மலர்விழி, குமரி மாவட்டம்.
'ஆத்தா கல்லறையில் ஒரு ஆவரஞ்செடி' - டாக்டர் எஸ்.சிங்காரவடிவேல்

**வாழ்நாள் சாதனை விருது** - புலவர். செ. இராசு, ஈரோடு

**கட்டுரை:**

'மலேசியா கவிதைகள் தோற்றமும், வளர்ச்சியும்' - இராஜம் இராஜேந்திரன், மலேசியா
'தமிழ் மக்களும் தழுவிய மதங்களும்' - சிவ.தியாகராஜன், இலண்டன்.

**சிற்றிதழ்:**

'ஜீவநதி' - கலாமணி பரணிதரன், இலங்கை.

**இணையம்:**

'இணையம் அறிவோம்' - ஜெ. வீரநாதன்

**மொழிபெயர்ப்பு:**

'இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு நம்பூதிரி பாட்' - இலக்குவனன், திருச்சி
கு.சி.பா. நூல் மொழிபெயர்ப்பு - ஆர். சௌரிராஜன், சென்னை.
கு.சி.பா. நூல் சிங்கள மொழிபெயர்ப்பு - உபாலி லீலாரத்ன, இலங்கை.
கு.சி.பா. நூல் ரஸ்ய மொழிபெயர்ப்பு - லோலா. முத்துபா. உஸ்பெஸ்கிதான்

தகவல்: எஸ்.அந்தனி ஜீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் அவதானங்கள்

தொகுப்பு : கே.பொன்னுத்துரை

## பருத்தியூர் பால.வையிரவநாதனின்
## 'வாழ்வியல் வசந்தங்கள்'
## பதினெட்டு நூல்களின் வெளியீட்டு பெரு விழா

**வா**ழ்வியல் சிந்தனைக் கட்டுரைகள் அடங்கிய பருத்தியூர் பால.வையிரவநாதனின் பதினெட்டு நூல்களின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வட மாகாண மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் தலைமையில் கடந்த 19.08.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் சபா. ஜெயராசா கலந்து கொள்ள பதினெட்டு நூல்களின் முதலாவது நூலான 'உண்மை சாஸ்வதமானது' நூலின் முதற் பிரதியை 'இலக்கியப் புரவலர்' ஹாசிம் உமர் பெற்றுச் சிறப்பு செய்தார்.

பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்துகளை செல்விகள் இ. ஹரிசனா, யோ.பிருதிகா ஆகியோர் பாட ஆசியுரையை 'அருட்கவி' வை.ஈ.எஸ்.காந்தன் குருக்கள் வழங்க, வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி வழங்கினார். தலைமையுரை, வெளியீட்டு உரையைத் தொடர்ந்து இலங்கை தேசிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றன.

வாழ்த்துரைகளை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசு, அரசாங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர் எஸ்.தில்லைநடராஜா, சப்பிரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. கனகசபாபதி நாகேஸ்வரன், மேல்மாகாணசபை உறுப்பினர் கலாநிதி என். குமரகுருபரன், சட்டத்தரணி ஜீ.இராஜகுலேந்திரா ஆகியோர் வழங்கினார்கள்.

ஏற்புரையை நூலாசிரியர் பருத்தியூர் பால. வைரவநாதனும், நன்றியுரை செல்வன் ந. ராகுலனும் வழங்க, நிகழ்வுகளை சட்டத்தரணி கே. புரந்தன் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

அவ்விழாவில் பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட பலரிடம் அவ்விழாவைப் பற்றிக் கேட்ட பொழுது :

ஒரு படைப்பாளி தனது ஆக்கங்களை எழுதி அதனை பத்திரிகைகளுக்கு அனுப்பி அது பிரசுரமாகி வரும் வரை அவன் படும் அவஸ்தை சொல்லில் அடங்காது. அவ்வகையில் பால.வயிரவநாதன் மொத்தமாக பதினெட்டு புத்தகங்களை ஒரே தடவையில் வெளியிடுவது ஒரு சாதனை என்றே கருதுகிறேன்.

**கே. விஜயன் கொழும்பு 06.**

இலங்கைத் தமிழ் இலக்கிய சூழலில் இன்னுமொருத் தொகுதி படைப்புகள் இணைந்து கொள்கின்றன, தொடர்ந்து சலிக்காது பத்திரிகைகளில் "வாழ்வியல் சிந்தனைகளை எழுதிவந்த பால.வயிரவநாதன் ஒரே தடவையாக பதினெட்டு நூல்களை வெளியிடுவது சாதனைதான்.

**ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன் வெள்ளவத்தை**

இளம் வயதிலே பத்திரிகைத் துறையில் பிரவேசித்த பால. வயிரவநாதன் அதனூடாகப் பெற்ற அனுபவங்களினால் வாழ்வியல் சிந்தனைகளை எழுத தொடங்கியவர் இன்று ஒரே மேடையில் பதினெட்டு நூல்களை வெளியிட்டு சாதனைப் படைத்துள்ளார். வாழ்த்துகள்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நீர்கொழும்பு**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடைக்கப் பெற்றவைகள் :



ப.சதீஸ்பிரபுவின்

'பீச்சாங்கை'

கவிதைத் தொகுதி

நாற்றுகள் பதிப்பகம்



ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

'வாத்தியார் மாப்பிள்ளை'

காவியம்

அன்னை வெளியீட்டகம்



மருதூர் ஏ.மஜீத்தின்

'தமிழ் மொழியின் பூர்வீக வரலாறு'

மொழியியல் ஆய்வு

மருதூர் வெளியீட்டுப் பணிமனை வெளியீடு



ஏ.நஸ்புள்ளாஹ்வின்

'கனவுகளுக்கு மரணம் உண்டு'

கவிதைத் தொகுதி

புன்னகைப் பதிப்பகம்




தாரிக்கின்

'மகாராணி'

கவிதைத் தொகுதி

தென்கிழக்கு அஷ்ரஃப் சமூக சேவைகள் நிறுவக வெளியீடு




திரு.ஞானசேகரன்

'ஞானம்'

கலை இலக்கியச் சஞ்சிகை

ஆகஸ்ட் 2012



# தூண்டில்

– டொமினிக் ஜீவா

**உங்கள் சிறுகதையான 'பாதுகை' குறுந்திரைப்படமாக வெளி வந்துள்ளதே. உங்களுக்கு திருப்தி அளித்ததா?**

கொழும்பு. **என்.சண்முகராஜா**

நானெழுதிய சிறுகதைகளில் என்னால் ஆழமாக நேசிக்கப்படும் கதைகளில் பாதுகையும் ஒன்று. இந்தச் சிறுகதையின் தலைப்பை வைத்தொரு சிறுகதைத் தொகுதியும் வெளிவந் துள்ளது. இந்தச் சிறுகதையைக் குறுந்திரைப்படமாகத் தயாரிக்க நினைத்த பயிற்சிப் பட்டறையைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர் ஒருவர் ஆரம்ப காலகட்டத்தில் என்னை வந்து மல்லிகையில் சந்தித்தார். எனது ஒப்புதலைப் பெற்றுக்கொண்ட அவர், பின்னர் குறும்படத்தைத் தயாரித்து முடித்தார். அதன் பிரதியை எனக்குப் போட்டுக் காட்டினார். வரலாற்றில் இடம்பெற்ற சினிமாக் குறும்படத் தயாரிப்புத் தகவலில் இதுவுமொன்று.

**முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வளர்ச்சியில் இன்றைய இளைய தலைமுறையினர் சமீப காலமாக அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டாததேன்? இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மாத்தளை

**எஸ்.மகாதேவன்**

எம்மைப் போன்றவர்கள் இளைஞர்களாக இருந்த காலத்தில் மகத்தான சர்வதேசத் தத்துவம் ஒன்றினால் ஆஹர்சிக்கப்பட்டு, தொடர்ந்து அதனைப் பின்பற்றி ஓடிக்கொண்டி ருந்தோம்.அதனால் பல சர்வதேசத் தகவல்களையும், செய்திகளையும் பெற்றுக் கொண்டு, நம்மை நாமே புதுப்பித்துக் கொண்டோம். வளர்ந்தோம். நம்மை நாமே விரிவுபடுத்திக் கொண்டோம்.

இன்றைய இளந்தலைமுறையினர் தமது வாழ்க்கையில் ஆரம்ப காலகட்ட நுழைவின் போதே, பல தினசரிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததுடன், நெடுங்கால கானக் வாழ்க்கைக்குத் தம்மைத் தாமே உட்படுத்திக் கொண்டனர். பலர் சிறைச்சாலைகளிலும் தமது இளமையைத் துறந்தனர்.

பெரும்பாலும் இளைஞர்களின் கனவே வெளிநாட்டுப் பயணமாகப் பரிணமித்துப் போய் விட்டது. அடி வேர் அற அற, தனிமையினால் தனிமைப்பட்ட இன்றைய இளந்தலை முறை தனிமைப்பட்டுப்போய் அந்தரத்தில் ஊசலாடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் தேசியப் பத்திரிகையின் பேட்டி ஒன்றில் மறைந்த சுந்தர ராமசாமியை நண்பராக குறிப்பிட்டுள்ளீர்கள். கடந்த காலத்தில் அவருடன் கருத்தியல் முரண்பாடும் இருந்திருக்கிறது. அத்தகைய சூழலில் அவரை நண்பர் என்று சொல்வது தெளிவில்லாமல் இருக்கிறதே?

**கண்டி.** **அந்தனி ஜீவா**

கருத்து முரண்பாடு வேறு. நட்பு என்பது வேறு. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு உதாரணம் பெரியார் - ராஜாஜியின் சீவிய காலத் தொடர் நட்பு. அதேசமயம் ராஜாஜியும் காமராஜரும் கருத்தாலும் கொள்கைக் கோட்பாடுகளாலும் மிக மிக நெருக்கமானவர்களாக இருந்தது வந்தபோதிலும், அவர்களிடையே நெருக்கமான நட்பு இல்லை. ஆனால் இன்றுவரைக்கும் பெரியார் - ராஜாஜி வாழ்நாள் தொடர் நட்பே வரலாற்றுச் சிறப்பு மிக்க நட்பாகப் பேசப்பட்டு வருகின்றது.

கருத்து முரண்பாடுகள் இல்லாதிருந்தால் மனுக்குலம் இன்றைய மகத்தான அறிவு வளர்ச்சியைப் பெற்றிருக்கவே முடியாது. இது அடிப்படை உண்மை.

என்னதான் கருத்து முரண்பாடு இருந்த போதிலும் கூட, நாம் அடிப்படை மனிதத் தன்மையை இழந்துவிடக் கூடாது. அத்துடன் பொது வாழ்க்கையில் ஈடுபாட்டுடன் உழைத்துவரும் ஒரு படைப்பாளி, கருத்து முரண்பாடு காரணமாக மனிதர்களின் நெருக்கத்தை இழந்து விடக் கூடாது. முரண்பாடுகளையும் விரிவுபடுத்திவிடக் கூடாது.

நான் முதற் தடவை திருவனந்தபுரம் சென்றிருந்த சமயம் நாகர் கோயிலுக்குத் தேடிச் சென்று சுந்தர ராமசாமியை அவரது புடவைக்கடையில் சந்தித்தேன். பேசினேன். என்னுடன் நண்பர் மேமன்கவியும் வந்திருந்தார்.

பார்ப்பனியத்தின் வேரடித் துளிர்களைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவராகக் கணிக்கப்பட்டவர். இருந்தும் அத்தனை சிரமங்களுக்கு மத்தியில் இருந்தும் தமிழ்நாட்டை விட்டுத் தள்ளிப் போயிருந்த நாகர்கோயிலில் தொடர்ந்து **காலச்சுவடு** என்றதொரு தரமான இலக்கியச் சஞ்சிகையை நடத்தத் துணிந்து முன்வந்து செயற்பட்டாரே, அதுவே அவர் மீது எனக்குத் தனிப் பிடிப்பைத் தோற்றுவித்தது.

நான் பின்னர் மல்லிகையை யாழ்ப்பாணத்து மண்ணில் நீரப்பாய்ச்சி வளர்ப்பதற்கும் அவரது உழைப்பே எனக்குப் பக்கபலமாக நின்று உதவியது.

எனவே கருத்து முரண்பாடு கொண்டவர்களை நாம் ஒதுக்கி விட்டு வாழப் பழகக் கூடாது. அதனால் நாம்தான் தனிமைப்பட்டு விடுவோம். அவர்களிடம் நேசிக்கத்தக்க - நெருங்கிப் பழகத்தக்க குணாம்சங்கள் ஏதும் இருந்தால் அவற்றை நாமும் பின்பற்றி நம்மை நாமே புதுப்பித்துக்கொள்வதுதான் தனிப்பட்ட முறையில் நமக்கும் நாட்டுக்கும் நல்லது.

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும், மல்லிகை ஆசிரியரும், வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு விவேகானந்த மேடு, 103A, இலக்கத்திலுள்ள Promac Printers அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.


மல்லிகைப் பந்தல்




## நீங்கள் தரமான இலக்கியச் சுவைஞரா?

'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளைத் தொடர்ந்து படியுங்கள்.

கடந்த 47 ஆண்டுகளுக்கு மேலாக நமது மண்ணைச் சார்ந்த படைப்பாளிகளின் பல் துறைப்பட்ட நூல்களை வெளியிட்டு வருகின்றது, மல்லிகைப் பந்தல் நிறுவனம்.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகளை நீங்கள் வாங்கும் போது, அதனது பொருளாதார ஆதரவு மல்லிகை மாத இதழுக்கும் சுவறுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

மல்லிகைப் பந்தல்
தொலைபேசி : 2320721
201/4, புதிய கதிரேசன் வீதி.கொழும்பு 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# Happy

## Digital Centre (Pvt) Ltd

**We Are Leading Towards to new prints in various Styles**

- Low Cost
- High Speed
- High Quality

- Any Paper or Any Board
- 1200 dpi x 8 bit High Resolutuion colour output
- Panorama Print 13 x 40

**NO** Positive
Plates
Colour Separation

நூலகம்



KONICA MINOLTA

**Digital Pro Lab & Digital Offset Press**

Hot Line - 0755 30 30 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org